கோவை கிழார் கட்டுரைகள்

(தொகுதி 2)

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்தைந்தாம் பட்டம் கயிலைப்புனிதர் முனைவர் திருப்பெருந்திரு குருமகாசன்னிதானங்களின் அருளாணையின் வண்ணம் திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது ஆண்டு கார்த்திகைத் திங்கள் 1 ஆம் நாள் (17.11.2022) மகம் விண்மீன் **அருள்திரு சாந்தலிங்கப் பெருமான் மாதக் குருவழிபாட்டு** *நிகழ்வில் புலவர்* **அ.சாமியப்பன் - அர.இலலிதா** *இணையரது பொருளுதவியால் வெளியிடப்பெற்றது.*

வெளியீடு

தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி,
பேரூர், கோவை-10.

நூற் குறிப்பு

பதிப்புரிமை : தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்

நூலின் பெயர் : கோவைகிழார் கட்டுரைகள் (தொகுதி 2)

ஆசிரியர் : கோவைகிழார்

நூல்வகை : கட்டுரைகள்

ஆண்டு : 2022

பதிப்பாசிரியர் : திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்

தொகுப்பு : சு.விக்னேசு, முனைவர் பட்ட ஆய்வாளர்.

வி.அர்ஜூன், நூலக உதவியாளர்.

உரிமை : நூலகத்திற்கு

விலை : ரூ.50/-


வெளியீடு : தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை
அறிவியல் தமிழ்க்கல்லூரி
பேரூர், கோவை - 641010

அச்சாக்கம் : சௌமி அச்சகம்,
1 ஈ, துடியலூர் ரோடு, சரவணம்பட்டி,
கோவை - 641 035
9842252779.

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்
பேரூராதீன குருமகாசந்நிதானம் கயிலைப் புனிதர்
முனைவர் **திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்**
பேரூராதீனம், பேரூர், கோவை



பதிப்புரை

இன்ப அன்பினீர்,

அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் இன்னருள் பெருகுக. 70 ஆண்டுகாலப் பழைமை வாய்ந்த நமது ஆதீனக் கல்லூரியின் முதல் முதல்வராகப் பணியாற்றிய சிறப்புக்குரியவர் கோவைகிழார் அவர்கள். அவர் கவிதை, கட்டுரை, நாடகம், செய்யுள், கோயில் ஆய்வு, வரலாற்றுப் பதிவு, பயண இலக்கியம் எனப் பலதுறையிலும் பங்களிப்பைச் செய்தவர். அத்தகைய படைப்புகளில் சில கட்டுரைகள் கோவைகிழார் கட்டுரைகள் தொகுதி 1 என்னும் நூலாக நமது ஆதீனக் கல்லூரியின் தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகத்தால் அண்மையில் வெளியிடப் பெற்றது. அதன் தொடர்ச்சியாக திருத்தலங்கள் பலவற்றைக் குறித்த அவர்தம் கட்டுரைகள் இரண்டாம் தொகுதியாக அருள்திரு சாந்தலிங்கப் பெருமான் குருவழிபாட்டு நாளில் வெளியிடப்பெறுவது பாராட்டுக்குரியது. கோவைகிழார் கையெழுத்துப் பிரதி உள்ளிட்ட பல அரிய நூல்களை வெளிக்கொணரும் முயற்சியில் ஆர்வம் கொண்டு செயல்பட்டு வரும் கல்லூரி நூலகர் **முனைவர்.திருமதி.அபிராமி** அவர்களின் பெற்றோர் **புலவர் அ.சாமியப்பன்-அர.இலலிதா** இணையர் இந்நூலின் புரவலராக அமைவது சிறப்புக்குரியது. புலவர் சாமியப்பன் அவர்கள் நமது கல்லூரியில் புலவர் பட்டமும், முதுநிலைப்பட்டமும் பெற்றவர். பள்ளிகளில் தமிழாசிரியராகவும், தலைமையாசிரியராகவும் பணியாற்றி

ஓய்வு பெற்றிருக்கக் கூடியவர். திருமடத்தின் அணுக்கத் தொண்டர், தமிழ்ப் பணிகளிலும் பொதுப்பணிகளிலும் தன்னார்வம் கொண்டு செயல்பட்டு வருபவர். அவர்களும் அவர்களது குடும்பத்தாரும் நூல் வெளியீட்டில் முனைந்து செயல்பட்டு வரும் அன்பர்களும் நூலினை அச்சாக்கம் செய்து வழங்கிய சௌமி அச்சகத்தாரும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்று வாழ அருள்மிகு அம்பலவாணப் பெருமான் இன்னருளும் சாந்தலிங்கப் பெருமான் தண்ணருளும் கயிலைக்குருமணி இருபத்துநான்காம் குருமகாசன்னிதானங்களின் குருவருளும் துணைநிற்க வாழ்த்துகிறோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

சாந்தலிங்க மருதாசல அடிகள்.

பொருளடக்கம்

கோவைகிழார் கட்டுரைகள்

தொகுதி – 2

(தலப்பகுதி)

திருவதிகை

இடம் : தென்ஆர்க்காடு வட்டத்தில் பன்னுருட்டிப் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஒருகல்லில் கெடில நதிக்கரையில் உள்ளது. ஊர் சிறியது. கோயிலைச் சுற்றியிருக்கும் தெருக்களை மட்டும் கொண்டது. தென்னைடு முதலிய மரங்கள் தெருக்களில் உள்ளதால் ஊரானது பார்வைக்கு அழகாயிருக்கும். ஊரில் மடங்கள் இருக்கின்றன.

கோயில்: கோயில் பெரியது. பண்டைக்காலத்து உட்பகுதிகள் கருங்கல்லால் ஆகியது. சிவபெருமானுடைய வீரட்டானங்கள் எட்டில் இது ஒன்று. திரிபுரம் எரித்த ஐதீகம் நடந்த இடம். மூலத்தானம் தேர்போன்ற வடிவம் பெற்றது. அதனுடைய அமைப்பிலே எல்லா தேவ மூர்த்தங்களும் காட்சி தருகின்றார்கள். அம்மூர்த்தங்களுடைய உருவங்கள் ஐதீகங்களின்படி அமைந்திருக்கக் காணலாம்.

மூர்த்திகள் : சுவாமி திரிபுராந்தகர். (முப்புரமெரித்தார்) அம்மன் திரிபுரசுந்தரி. தீர்த்தம் கெடிலம்.

ஐதீகங்கள் : திரிபுர தகனம் தலத்தேவாரங்களில் எல்லாம் கூறப்பட்டுள்ளது. மூவர் பெருமக்கள் 18 பதிகங்களைப் பாடியுள்ளார்கள். நடுநாட்டில் வேறு எந்தத் தலத்திற்கும் இத்தனைப் பதிகங்கள் இல்லை. இது இந்தத் தலத்தின் சிறப்பைக் காட்டுகிறது. சம்பந்தர், சுவாமியின் திருநடத்தைக் கண்டு அதனை அனுபவித்து தான் அருளி திருப்பாடல் தோறும் வியந்து கூறியிருக்கின்றார். இந்தத் தலத்திற்கு அருகிலுள்ள திருவாமூரில் தோன்றிய மருணீக்கியார் சமணம் புகுந்து சூலைநோய் பெற்றுத் தமக்கையாரால் மீட்கப்பெற்று,

‘‘கூற்றாயினவாறு’’ பாடி, திருநாவுக்கரசு என்னும் பெயர் அருளப்பெற்ற இடம் இதுவாகும். திலகவதியார் திருத்தொண்டு செய்த தலம் இதுவே. சுந்தரர் இத்தலத்தை மிதிக்க அஞ்சி சித்தவ மடத்தை அடைந்து தூங்கும்போது பெருமானால் திருவடி சூட்டப்பெற்றதாகும்.

வரலாறு: பல்லவர் காலத்தில் இங்கே சமண் பாழிகள் இருந்தன. அப்பரால் சைவத்திற்கு மீட்கப்பெற்ற மகேந்திரவர்மன் அப்பாழிகளை இடித்து குணதரேசுவரம் என்ற சிவாலயம் எழுப்பினான். இதற்கு அருகில் பாடலீபுத்திரமென்ற பல்லவருடைய ஊர் இருந்தது.

அடுத்த ஆலயங்கள் : ஐந்துகல் தொலைவில் உள்ள திருவாமூரில் உள்ள ஆலயத்தின் சுவாமியின் பெயர் பசுபதீஸ்வரர். அம்மன் பெயர் திரிபுரசுந்தரி. கோயிலில் கல்வெட்டு உண்டு. அதில் திருநாவுக்கரசர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. குலோத்துங்க சோழன் காலம். ஆலயத்தில் அப்பருக்கு மூலவரும் உற்சவரும் உண்டு.

கல்வெட்டுக்கள் : திருவதிகைக் கோயிலில் நிரம்பக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. நடராஜர் சந்நிதியில் அழகிய தமிழ் வெண்பாக்கள் (இருபத்துநான்கு) தீட்டப்பட்டுள்ளன. நடராஜருடைய உருவத்தில் திரிபுரதகனத்தைக் குறிக்கும் தோற்றமாக, கையில் வில்லும், அம்பும் இருக்கின்றன.

பிற செய்திகள் : கோயில் பிரகாரத்தில் ஒரு பெரிய சமண உருவம் வைக்கப்பட்டுள்ளது. அண்மையிலே ஒரு புலத்திலிருந்து இவ்வுருவம் எடுத்து வந்து இங்கே வைக்கப்பட்டதாம்.

திருநணா

இந்தத் தலத்தைப் பவானிப் பொதுமக்கள் பவானி அல்லது கூடல் என்று வழங்குவார்கள். இது கோவை ஜில்லாவில் பவானி தாலுக்காவின் தலைநகர். இவ்வூர் ஈரோடு இருப்புப்பாதைச் சந்தியிலிருந்து வடக்கே ஒன்பது கல்லில் உள்ளது. விசை வண்டி வசதி உண்டு. பவானி ஆறும் காவேரி ஆறும் கூடுகிற இடத்தில் உள்ள ஊராகையால் இதற்குக் கூடல் என்று பெயர் வந்தது. இவ்விரு ஆறுகளும் சிறிது தூரம் அருகே ஒடிக்கூடுகின்றன. அவ்விரண்டிற்கும் இடையில் பெரும்பகுதியான ஊர் கட்டப்பட்டுள்ளது. ஊர் அகலம் குறைவாகவும் நீளம் மிகுதியாகவும் உண்டு. இரண்டு நெடுந்தெருக்களைக் கொண்டது. இவை இரண்டும் காவேரியை அடுத்துத் தென்வடக்காக அமைத்திருக்கின்றன. காவேரியும் வடக்கேயிருந்து தெற்கே ஓடுகிறது. பவானி மேற்கேயிருந்து கிழக்கே ஓடி இந்தத் தலத்தருகில் சிறிது தென் கிழக்கே திரும்பியபின் காவேரியில் கலக்கிறது. இவ்வூரி -லிருந்து வடக்கே 27 கல்லில் மேட்டூர் அணையும் தேக்கமும் இருக்கின்றன. பவானியின் மக்கள் தொகை - 14000.

திருக்கோயில் அமைப்பு: பவானியும் காவேரியும் கூடுகிற முனையில் இருப்பது திருக்கோயில். வடபுறத்தைத் தவிர முப்புறங்களிலும் ஆறுதான். கோயில் கட்டியுள்ள இடம் உயர்ந்தது. ஆற்று வெள்ளம் எந்தக் காலத்திலும் இக்கோயிலை அழித்ததில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன் எப்பொழுதும் இல்லாத வெள்ளப்பெருக்கு வந்து பல ஊர்களைச் சேதப்படுத்திப் பவானியூரின் பெரும் பகுதியை அழித்த காலத்திலும் இக்கோயில் சேதப்படவில்லை. கோயில் மதிலுக்கும் கூடுதுறைக்கும் இடையில் உள்ள இடவசதியும் மண்டபங்களும் கன்னியாகுமரியை ஒத்து இருக்கும். அதைப்போலவே கூடுதுறை நீராடல் மிகவும் புனிதமானது. முனைக்கு இரு பக்கங்களிலும் நீண்ட படித்துறைகள் உண்டு. மிகுந்த வெள்ளம் வந்த காலத்தும் அபாயம் நேரிடாதபடி இருப்புக் கம்பிகளைப் பிணைத்து வைத்திருக்கிறார்கள்.

வெள்ளம் வரும் காலமாகிய ஆடி மாதத்தில் இந்தக் கூடுதுறையின் தோற்றம் மிகக் கம்பீரமாக இருக்கும். அது கண்ணுக்கெட்டும் வரையில் ஒரே நீர்மயமாகத் தோன்றும்.

தல ஐதீகங்கள்: சம்பந்த சுவாமிகள் திருவாக்கின்படி இந்தத் தலத்திற்கு திருநணா என்று பெயர். இந்தத் தலத்துப் புராணமோ இதனை திருநணா அல்லது நண்ணாவூர் என்று கூறும். அதனுடைய பொருள் இதனைத் தரிசித்தோர்க்கு யாதொரு தீங்கும் நணுகாது என்பதாம். இதுவே தலபுராணக் கூற்று. மற்றும் இதன் ஐதீகங்களை ஒட்டிப் பல பெயர்களும் ஏற்பட்டுள்ளன. இத்தலத்துக் கடவுளைக் குபேரன் பூசித்தலால் தட்சிண அளகை என்றும், இந்தத் தலத்து விருட்சம் இலந்தை மரமாதலால் இது தட்சிண வதரிகாச்சிரமம் என்றும், கங்கை, யமுனை, சரசுவதி என்ற மூந்நதிகளும் வடநாட்டிலே பிரயாகை என்ற தலத்தில் கூடுவதைப்போல் இங்கும் காவேரி, பவாநி, அமுதநதி என்ற மூன்றும் கூடுவதால் இதற்கு முக்கூடல் அல்லது திரிவேணி சங்கமம், தட்சிணப் பிரயாகை என்றும், பல காரணப் பெயர்கள் உண்டு. இங்கே திருமால் அருளின அமுதத்தை, பராசரர் குடத்திலிட்டு வைத்த இடத்தில் அமுதலிங்கேசுரர் இருக்கின்றார். அக்குடம் அகழ்ந்து எடுத்த இடத்திலிருந்து பிறந்து அமுதநதி திரிவேணியில் சேருகிறது. அது அந்தர்வாகினியாக இருக்கிறது. ஒரு சோழன் மனைவி இங்கே இலந்தைக் கனியை உண்டு, கருத்தரித்து மகப்பெற்றாள். காயத்திரி, சாவித்திரி, சரசுவதி என்ற மூன்று தீர்த்தங்கள் உண்டு. இந்த நீர் நிலை காயத்திரிமடு எனப் பெயர் பெறும். இன்னும் பல அசுரர்களும் தேவர்களும் முனிவர்களும் மக்களும் பூசித்துப் பலன் அடைந்தார்கள் என்று புராணம் கூறும்.

கோவிற் சிறப்பு: கோயில் ஒரு கோட்டை போல மதில்களைக் கொண்டுள்ளது. காவிரியும் பவானியுமே இதற்கு அகழிகள். கோயிலின் வாயில் வடபுறம் உள்ளது. உயர்ந்த கோபுரம். வெண்மையாக வெகு தொலைவிலிருந்தும் தெரியும். பிராகாரத்திற்குள்ளே பெருமாள் கோயில் தனியாக

உண்டு. இவர் ஈசனைப் பூசித்துப் பேறு பெற்று இங்கேயே வீற்றிருப்பதாக ஐதீகம் உண்டு. இதற்குத் தனியாக விழாக்கள் உண்டு. சுவாமி அம்மன் கந்தபிரான் இவர்கள் சந்நிதிகள் ஒருங்கே கிழக்கு நோக்கி உள்ளன. எல்லாச் சந்நிதிகளும் காவிரியை நோக்கிக் கொண்டே இருக்கின்றன. சுவாமி சங்கமேசுவார், அம்மன் வேதநாயகி. கட்டடம் கருங்கல்லால் கட்டப்பட்டது. ஆனால் சுண்ணாம்பு பூசியதால் எழுத்துக்கள் மறைவுற்றும் சிற்பங்கள் மங்கியும் இருக்கின்றன.

ஆங்கிலர் டிப்பு சுல்தானை வென்ற காலத்தில் (*1799*-ல்) கொங்கு நாடு அவர்கள் வசம் சேர்ந்து விட்டது. அப்போது வட கொங்குக்கு பவானியைத் தலைநகராக்கி அங்கே காரோ (Garrow) என்ற ஆங்கிலனைக் கலெக்டர் என்ற அதிகாரியாக நியமித்தார்கள். அவன் ஆளும்போது இந்தத் திருக்கோயிலில் அன்பு கொண்டு திருப்பள்ளியறைக்கு ஒரு விலை உயர்ந்த தந்தப்பல்லக்கு அளித்தான். அந்தப் பல்லக்கு இன்றும் ஆலயத்தில் சேவையில் இருக்கிறது. அதன் பீடத்தில் காரோ அளித்த செய்தி வரையப்பட்டிருக்கிறது. இவைகளேயன்றி திருமண மண்டபத்தில் சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த கல் தூண்கள் இருக்கின்றன.

திருப்பதிகம்: திருஞானசம்பந்தர் இந்தத் தலத்தைத் தரிசித்து'' பந்தார் விரன்மடவாள் பாகமா நாகம் பூண்டேற தேறி' என்ற தொடக்கத்துத் திருப்பதிகத்தை அருளிச் செய்து பின்னர் கொங்கு நாட்டுத் திருக்கோயில்கள் பலவும் தரிசித்ததாகச் சேக்கிழார் கூறுவர் (திருஞான- *327*). இத்தலத் தேவாரம் மிகுந்த அருமைப்பாடு கொண்டது. மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற மூன்று பெருமைகளையும் சிறக்கக் கூறுவது. நாட்டுச் செழிப்பு முதற் பாடலிலும் ஆற்றுச் செழிப்பு *2, 3, 10*-பாடல்களிலும், தேவர்கள் பூசித்த செய்திகள் *8,4,9* பாடல்களிலும், மாவிரதிகள் பூசித்தது *7*-ம் பாடலிலும் அருளியிருத்தல் காண்க. 'புலியும் மானும், அல்லாத சாதிகளும் அங்கழல்மேல் கைகூப்ப அடியார் கூடிச், செல்லா அருநெறிக்கே செல்ல அருள் புரியும் திருநணா'' என்ற பகுதி சிந்திக்கத்தக்கது. மேலும் இந்தத் தலத்து இயற்கை

வருணனைகள் மிகவும் பாராட்டத்தக்கவை. 'அங்கண் சாரல் வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டுபாட செந்தேன் தெளி ஒளிர தேமாங்கனி உதிர்க்கும் திருநணா' என்ற கருத்தின் அழகை நோக்குக. தற்காலப் பவானியைக் கண்டால் இந்த வருணனை இதற்குப் பொருந்துமோ என்று ஐயுற வேண்டியிருக்கும். இதைப் போல மற்ற இயற்கை அழகுகளையும் பதிகத்தில் கண்டு மகிழ்க.

தல புராணம்: பவானித் தலபுராணம் மகா வித்துவான் வாசுதேவ முதலியார் பாடியது. இவர் கோவைக்கடுத்த ஓராட்டுக்குப்பை செட்டிபாளையத்தவர். இதனை 60 ஆண்டுகளின் போது வித்துவான் கந்தசாமி முதலியார் பதிப்பித்துள்ளார்கள். பாயிரம் முதல் சிவார்ச்சனைச் சருக்கம் ஈறாக 18 சருக்கங்களும் 901 செய்யுட்களும் கொண்டது. இதனை உரைநடையில் பண்டிதர் குமாரசாமிப் பிள்ளை எழுதியிருக்கின்றார். முதல்நூல் சொல்லும் பொருளும் சிறந்து விளங்கும்படி இயற்றப் பெற்றுள்ளது.

சுற்றிடங்கள்: இத்தலத்தைச் சுற்றிப் பத்மகிரி, சங்ககிரி, நாககிரி, மங்களகிரி, வேதகிரி என்ற ஐந்து மலைகள் உண்டு. இம்மலைகளின் விவரம் புராணத்தில் காண்க. இவைகளில் சங்ககிரி தூர்க்கம் எனவும், நாககிரி-திருச்செங்கோடு எனவும், வேதகிரி ஊராச்சிக் கோட்டை எனவும் இந்நாளில் வழங்கு கின்றன. இவைகளைத்தவிர இத்தலத்தைச் சுற்றி ஐந்து துருக்கை ஆலயங்கள் உண்டு. இவைகளில் வீரை பவானியின் கிழக்கில் காவிரியைத் தாண்டியும், ஜெயந்தி பவானியின் தெற்கிலும், மர்த்தினி பவானியின் மேற்கிலும், சண்டகாதனி பவானியின் வடக்கிலும், இவ்வூரின் எல்லைத் தேவதைகளாகக் காவல் புரிந்துவருகிறார்கள். பராசரர் கொண்டுவந்த பவானியின் அமுதை நான்கு அசுரர்கள் கவருவதற்கு வரவே வேதாம்பிகையின் அருளால் இந்நான்கு காளிகளும் தோன்றி அவ்வசுரர்களைக் கொன்று இத்தலத்து நான்கு திக்குகளிலும் காவல் புரிந்து வருகிறார்கள் என்று புராணம் கூறுகிறது. ஊரின் நடுவில் செல்லியாண்டியம்மன் என்ற ஊர்த்தேவதை கோயில் இருக்கிறது.

வெள்ளியங்கிரி

பெயர்: கோவை வட்டத்தில் உள்ள மக்கள் வெள்ளியங்கிரி என்ற பெயர் வைப்பது வழக்கம். அதனுடன் கவுண்டர், முதலியார், செட்டியார் என்ற அடைமொழிகளைக் கூட்டி முழுப் பெயர்களைக் கொண்டிருக்கக் காணலாம். மற்ற நாட்டுத் தமிழ் மக்களுக்கு இதனுடைய உட்பொருள் விளங்காது. பொதுவாகக் கயிலையங்கிரியினுடைய பெயர் அது ஆகும் என்று நினைக்கலாம், உண்மையில் அப்பெயர் வடக்கே உள்ள கயிலையங்கிரியினுடைய பெயர் அல்ல. கொங்கு நாட்டில் கோவைக்கு நேர் மேற்கே 21 கட்டை அளவில் உள்ள ஒரு மலையின் பெயர் அது ஆகும். இது மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள ஒரு சிகரம் அல்லது கோடு. இதன் பெயர் வெள்ளியங்கிரி அல்லது வெள்ளிமலை என்று வழங்குகிறது.

இடம்: கோவைக்கு மேற்கே வில்லு வளைந்தாற்போல மேற்கு மலைத்தொடர் இருக்கின்றது. அம்மலைத் தொடரில் பல சிகரங்கள் உண்டு. அவைகள் ஐயாசாமி மலை, ஒரத்தி மலை, கரிமலை, வெள்ளிமலை, பெருமாள் மலை, மருத மலை, குருடிமலை முதலியன. இவைகளைப்பற்றி விவரமாகப் பேரூர்ப் புராணத்தில் கச்சியப்ப முனிவர் கூறியிருக்கின்றார். இம்மலைகளில் இடையில் நிற்பது வெள்ளியங்கிரி. இதன் உயரம் கடல்மட்டத்திற்கு மேலே 5912 அடி ஆகும். இம்மலைகளிலிருந்து பல சிறு அருவிகள் தோன்றி ஒன்றுகூடி சம நிலத்தில் நொய்யல் அல்லது காஞ்சிமாநதி ஆகிறது. சுந்தரமூர்த்திகள் 'மீகொங்கில் காஞ்சிவாய்ப் பேரூர்' என்ற கோயிற்றிருப் பதிகத்தில் கூறிய காஞ்சி இதுவாகும். இம்மலைக்கு அடுத்து தெற்கில் உள்ளது பொரத்தி. அதற்குப் பின்புறம் ஓடுவது சிறுவானி ஆறு. அதனை அணையால் கட்டி நீர்தேக்கி மலையைக் குடைந்து 5000 அடி துவாரம் செய்து அதன் வழியே நன்னீரைக் குடிநீராகக் கோவைக்குக் கொண்டு செலுத்தப்படுகிறது.

ஏற்றம்: கோவையிலிருந்து மேற்கே 15 கட்டை அளவில் செம்மேடு என்ற ஒரு பெரும் பண்ணை உண்டு. அது மிகவும் செழிப்பான இடம். இதனருகில் காஞ்சிக் கரையில் நாகேசுரர் கோயில் என்ற பண்டைக் கல்வெட்டுள்ள கோயில் உண்டு.

இங்கே செம்மேட்டிலிருந்து வடமேற்கே மூன்று கட்டை சென்றால் பூண்டி என்ற அழகிய மலையடிவாரம் இருக்கிறது. பல சத்திரங்களும் நந்தவனமும் ஒரு வற்றாத ஊற்றும் பொய்கையும் உண்டு. யாத்திரிகள் இங்கே தங்குவார்கள். நல்ல வசதி உண்டு. இங்கிருந்து மலையேற வேண்டும். முழங்கால் திட்டு, மூங்கில் திட்டு, வழுக்குப் பாறை, ஈச்சந் திட்டு, கைதட்டி சுனை, ஆண்டிசுனை என்ற ஆறு திட்டுகள் ஏறிச் செல்லவேண்டும். ஆண்டிசுனையில் ஒரு அழகிய மிகக் குளிர்ந்த அருவி ஓடுகிறது. இதற்கு அருகே இரண்டு பெரிய பாறைகள் உண்டு. அதன்கீழ் மக்கள் தங்கி ஆண்டிகளையில் குளித்து விட்டுச் சமயல் செய்துவிட்டு சுவாமிகிரி ஏறுவார்கள். முதல் மலையும் ஏழாம்மலையும் மிக ஏற்றம். எல்லாமாய் ஏழு கட்டை இருக்கும். சுவாமிகிரியின் உச்சியில் தவளைபோன்ற பெரிய பாறை உண்டு. அதனடியில் இயற்கைக் குகை இருக்கிறது. இதற்குள் ஐந்து லிங்கங்கள் உண்டு. அதுதான் வெள்ளியங்கிரி ஆண்டவன் சந்நிதி.

இயற்கை வனப்பு: பூண்டி அழகிய பூஞ்சோலை போல இருக்கும். முழங்கால் திட்டு, முழங்கால் இடிபடும்படியான உயர்ந்த இயற்கைக் கற்படிகளைக் கொண்டது. பாதை மிகச் செங்குத்தானது. மூங்கில் திட்டு வெறும் மூங்கில் சோலையால் ஆனது. வழுக்குப் பாறை, அப்பெயருக்கு இசைந்தாற்போல வழுக்கல் உடையது. எச்சரிக்கையோடு ஏறவேண்டும். கைதட்டி சுனை, சோலையின் இடையில் உள்ளது. பகல் வேளையிலேயே மரங்களால் இருள் சூழ்ந்தது. மலைப் பூச்சிகளின் ஒலி காதைக் குடைந்து கொண்டு செல்லும். எங்கும் நன்னீர் சுனைவழி வடியும். ஈச்சந்திட்டு ஈச்சமரங்களாலும் கணம் புல்லாலும் நிறைந்திருப்பது.

ஆண்டிசுனை ஓர் அழகிய பள்ளத்தாக்கு. எக்காலத்திலும் மிகக் குளிர்ந்ததும் தெளிவானதும் ஆன சுனை நீர் ஓடுவது. குண்டுப் பாறைகளில் யாத்திரிகள் இரவில் தங்குவதுண்டு. மழைக் காலங்களில் அப்பாறையின் அடியில் பதுங்கிக் கொள்ள வேண்டும். இங்கு மழை என்றால் தாங்க முடியாதபடி அடிக்கும். அதை அனுபவிப்பதும் ஓர் அற்புதந்தான். சுவாமி கிரிக்கருகில் காடாந்தகாரமான பைஞ்சோலை உண்டு. காற்று ஜில் என்று அடிக்கும். மலை உச்சியில் இரண்டு கற்கள் சேர்ந்து தோரணம்போல் இருக்கும். இதில் புகுந்துதான் கோயில் செல்ல வேண்டும். குகைகளின் உள்ளே யாரும் சென்று பார்க்க முடியாது.

யாத்திரை: கொங்குநாட்டு மக்கள் எல்லாரும் தம் ஆயுளில் ஒரு முறையாவது வெள்ளிமலைபோய் தரிசிக்காமல் இருக்க மாட்டார்கள். பங்குனி உத்திரத்தில் திருப்பேரூரில் தரிசனம் நடக்கும். அதற்கு ஐந்து நாள்களுக்கு முந்தி இடப வாகனக் காட்சி வெகு சிறப்பாக நடைபெறும். இவைகளுக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் செல்லுவார்கள். இரவில் இடபவாகன காட்சி கண்டு மகிழ்ந்த பிறகு அங்கிருந்து மேற்கே பூண்டி செல்வார்கள். மறுநாள் காலை பூண்டியில் குளித்து உணவு சமைத்து உண்டுவிட்டு இளைப்பாறுவார்கள். அன்று இரவு நிலாவில் மலையேறத் தொடங்குவார்கள். விடியலின் போது ஆண்டிசுனையில் குளித்துச் சமைத்துவிட்டு மலையேறி ஆண்டவனை வழிபட்டுத் தொழுதுவிட்டு ஆண்டிசுனைக்கு இறங்கி விடுவார்கள். உணவு அருந்திவிட்டு அங்கே இளைப்பாறுவார்கள். அங்கேயே சிலபேர் மூன்று நாளும் கிரியேறி வருவதுண்டு. பிறகு இறங்கி அடிவாரம் வருவார்கள். வழிமுழுதும் வெள்ளியங்கிரி ஆண்டவனுக்கு அரோகரா என்ற ஒலி செய்துகொண்டே ஏறுவதும் இறங்குவதுமாக இருப்பார்கள். இறங்கும்போது அடிவாரத்தில் இருக்கும் மனைவி மக்கள் ஏறினவர்களை வரவேற்றுப் பாதபூசை செய்து திரும்புவார்கள். ஒரு பகல் அவ்வடிவாரத்திலேயே இருந்துவிட்டுப் பிறகு திருப்பேரூர்

திரும்பி வருவார்கள். அங்கே உத்திரத்திற்கு வந்துசேர்ந்து நடராசப் பெருமானைத் தரிசித்து விட்டுத் தங்கள் ஊர்களுக்குத் திரும்புவார்கள். இதுதான் ஆண்டுதோறும் நடைபெறும் யாத்திரை.

சில வழக்கங்கள்: கொங்குநாட்டு மக்கள் தவறாமல் ஒரு முறையாவது வெள்ளியங்கிரி ஏறி தரிசனம்செய்து வருவதுண்டு. சில பேர் ஒவ்வொரு ஆண்டும் செல்வதுண்டு. காவடி எடுப்பார்களும் சமாராதனை செய்பவர்களும், தலைமுடி வாங்குவார்களும், வேறுபல பிரார்த்தனை புரிவார்களும் உண்டு. பெண் மக்களில் பூப்பு வந்தபிறகு மலை ஏறக்கூடாது. மாதவிடாய் நின்ற பிறகுதான் மீண்டும் ஏறலாம். ஆகவே ஒவ்வொரு பாட்டியும் தன் பேர்த்திகளை ஒருமுறையாவது அழைத்துச் செல்வது கொங்குநாட்டு வழக்கம். ஆண்பிள்ளை எப்போதும் போகலாம் பங்குனி சித்திரை மாதங்களில்தான் எல்லாரும் போவார்கள் மீதி மாதங்களில் எவரும் போவதில்லை. தற்காலத்தில் நீர் வசதி, சத்திர வசதி மிகவும் நன்றாக உண்டு. இயற்கை அழகுகளை அனுபவிக்க விரும்புகிறவர்கள் இந்த மலைக்கு யாத்திரை செய்ய முயலவேண்டும். இக்கட்டுரையாளன் இம்மலை உச்சிக்கு மூன்று முறை சென்றிருக்கிறான். அங்கே கண்ட இயற்கை அழகுகளை நினைத்து நினைத்து இன்னும் போகலாகாதா என்று எண்ணுவதுண்டு. நமது முன்னோர்கள் இயற்கை அழகுகள் நிரம்பிய இடங்களிலேயே தங்கள் புனித இடங்களை தோற்றுவித்தது அவர்கள் அழகுச் சுவையை அருந்தும் நற்பண்புகளைக் காட்டுகின்றதல்லவா?

மொக்கணீசுவரம்

இடம்: மொக்கணீசுவரம் என்ற ஒரு தலம் கொங்குநாட்டில் உள்ள திருவாசக வைப்புத்தலம் ஆகும். கொங்குமண்டலத்திலே இருபத்துநான்கு நாடுகள் உண்டு. அவைகளிலே மேற்குக் கோட்டில் உள்ளது ஆறைநாடு. அந்நாடு தற்போதைய கோவை தாலுக்கா, அவிநாசி தாலூக்காவின் கீழ்ப் பகுதி, இவைகளைக் கொண்டது. ஆறைநாட்டின் உட்பகுதி வடபாரிசார நாடு என்பதாகும். அது ஆறைநாட்டின் கீழ்ப் பகுதி. தற்போதைய அவிநாசித் தாலுக்காவின் கீழ்ப்பகுதியும் ஆகும். இவ்வுள் நாட்டில் குடக்கோட்டூர் என்ற ஓர் ஊர் இருந்தது. அது இப்போது அழிந்தது. அவ்வூரில் இருந்த ஒரு பண்டைக் கோயில் மொக்கணீச்சுரம் ஆகும். அக்கோயில் பல நூற்றாண்டுகளாகவே பாழடைந்துபோய் இப்போது அடைத்த கோயிலாகவும் கற்குவியல்களாகவும் இருக்கின்றது.

சென்று அடையும் வழி: அவிநாசி என்ற பாடல் பெற்ற தலம் கோவைக்குக் கிழக்கே சிறிது வடக்கு நோக்கி 25 கல்லில் இருக்கிறது. அதற்குக் கோவையிலிருந்து விசை வண்டி உண்டு. வாடகை 13 அணா. மேலும், திருப்பூர் நிலையத்திலிருந்து எட்டுக்கல் அளவிலும் வஞ்சிப்பாளையம் நிலையத்திலிருந்து ஐந்து கல் அளவிலும் இதனை அடையலாம். அவிநாசியிலிருந்து சேவூர் என்ற வைப்புத்தலம் வடக்கே நம்பியூர் பாதையில் 41/2 கல்லில் இருக்கிறது. அதே பாதையில் ஒரு கல் சென்று வடமேற்காகச் செல்லும் புதுப் பாதையில் நான்கு கற்கள் சென்றால் குடக்கோட்டுப்பள்ளம் என்ற ஒரு காட்டுப்பள்ளத்தை அடையலாம். அப்பள்ளத்தின் வடகரையில் உள்ளது மொக்கணீச்சரம். சேவூர் வரைக்கும் விசைவண்டி கிடைக்கும். வாடகை அணா நான்கு. சேவூரில் மாட்டுவண்டி கிடைக்கும். போய்வரப் பேசிக்கொண்டு செல்ல வேண்டும். மூன்று மணி அளவிலே பார்த்து விட்டுத் திரும்பி விடலாம். போகும்வழி கரடுமுரடானது இருபுறங்களிலும் மர நிழல் இல்லை. புன்செய்

நிலங்களே உண்டு. சில பனைமரங்களும் புளியமரங்களுமே காணலாம். சிற்சில தோட்டங்களிலே கரும்பு முதலிய விளைவுகள் உண்டு. பெரும்பான்மையாகப் பொட்டல் காடுகளே தென்படும். வழியில் தண்ணீர்ப்பந்தல் பாளையம் என்ற ஒரு சிறிய ஊர் இருக்கிறது மொக்கணீசுவரத்திற்கு அடுத்து இருப்பது புதூர் என்ற ஒரு சிறிய ஊர். கோயிலுக்கு அருகே ஒன்றிரண்டு தோட்டங்கள் உண்டு.

கோயிலின் நிலைமை: கோயில் அளவு 150 X 120 அடி இருக்கும். முன்வாயில் தவிர மற்றைய மதில் முழுதும் விழுந்து கிடக்கிறது. சுவாமி சன்னிதி, அம்மன் சன்னிதி, பிள்ளையார் சன்னிதி, முருகன் சன்னிதி இவைகளின் அடிமட்டங்களும், இரண்டு நந்திமண்டபங்களும், ஒரு தீர்த்தக்கிணறும் தெரிகின்றன. சுவாமி விமானம் இன்னமும் நிற்கின்றது. அதன் பொந்து ஒன்றில் ஓர் ஆந்தை வசிக்கின்றது. தட்சிணாமூர்த்தி மண்டபமும், பிள்ளையார் மண்டபமும் செங்கல்லால் கட்டப்பட்டிருக்கின்றன. விமானம் செங்கல். ஏனைய கட்டடங்கள் கருங்கல். கட்டடத்தில் இருந்த செங்கல் மிகப் பெரியவை. செங்கல் ஒன்று 12 X 6 X 2 அங்குலம் அளவு கொண்டது. இந்த அளவே பண்டைய தன்மையைக் காட்டுகின்றது. நடராச சந்நிதியும் பள்ளியறையும் இருந்திருக்கின்றன. ஆலயத்தின் பின்னால் மதிலோரமாக நீண்ட குறடு ஒன்று இருந்திருக்கிறது.

வேலைப்பாடு: உடைந்த சிலைகளில் ஒரு நந்தியும், ஆவுடையாருடன் சேர்ந்த இலிங்கமும், அம்மன் சிலை இடைப்பகுதியும், முருகன் பாதமும் கிடந்தன. முன் வாயிலில் மண்டபத்தின் இருபுறங் களிலும் இரண்டு நிலைவுகள் நன்றாக இருக்கின்றன. நிலைக்கற்கள் அழகாகச் செதுக்கப்பட்டி -ருக்கின்றன. மர வேலையைப் போன்று சிறு சிறு சதுர வரிசைகள் இயற்றப்பட்டிருக்கின்றன. மேல் உத்திரத்தில் இரு பக்கங்களிலும் திருமகளின் உருவங்கள் செதுக்கப்பட்டி -ருக்கின்றன. அம்மன் சன்னிதியில் மகாமண்டபத்தில் நான்கு தூண்கள் இருக்கின்றன. அவைகளில் அடிப்பகுதிகளில்

இரண்டு திருவுருவங்கள் தெரிகின்றன. ஒருவேளை சமயாசாரியர்களாக இருக்கலாம். தென்கிழக்குத் தூணில் நடுப்பகுதியில் ஒரு அழகான ஐதீக உருவம் இருக்கிறது. அதில் மீன் வாயிலிலிருந்து ஒரு சிவலிங்கத்தை ஒரு முனிவர் பெறுகிறாற்போல் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரலாறு அவிநாசித் தலத்திலும் உண்டு.

பழைமை: இக்கோயில் பழையது என்று கூறுவதற்கு முன்னே சொன்ன செங்கல்லின் அளவும், அம்மன் கோயிலுக்குத் தென்புறத்தில் இருக்கும் ஒரு கல்வெட்டுப் பலகையுமே சான்று ஆகும். அக்கற்பலகை 3 அடி அகலமும் 41 அடி உயரமும் 2 அங்குலம் கனமும் உள்ளது. எழுத்துக்கள் தெளிவாக இல்லை. அதனைப் படித்தறிய வேண்டியது அவசியம். கோயிலுக்கு அருகில் நட்டுவன்தோட்டம், தாசி காடு முதலிய பெயர்கள் வழங்குவதால் இக்கோயில் ஒரு காலத்தில் நல்ல நிலைமையில் இருந்ததெனச் சொல்லலாம். மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தி இக்கோயிலில் இருந்த செப்புத் திருமேனிகள் சேவூர் வாலீசர் ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனவாம்.

ஐதீகம்: இவ்வாலயத்தைப் பற்றிய ஐதீகம் கொங்கு மண்டல சதகத்தில் கூறப்பட்டுள்ளது.

> **''ஏத்து சிவபத்தி யானொரு செட்டிமுன் ஈசுரனைத்**
> **தோய்த்து முழுகித் தொழவெழ அங்கொரு சூழ்ச்சிகற்றோன்**
> **பூத்த வனகுடக் கோட்டூரில் மொக்கணி யைப்புதைக்க**
> **வாய்த்த சிவலிங்க மானதுவுங் கொங்கு மண்டலமே''**

என்ற பாடலினால் இவ்வைதீகமும் ஆலயத்தின் தொடக்க வரலாறும் தெரிகின்றன. ஒரு காலத்தில் சிவபூசை செய்தக அவன் பின்னரே உணவு அருந்தும் ஒரு வணிகன் குடகோட்டூர் வழியே சென்றான். அங்கே தங்கி நீராடி விட்டுச் சிவதரிசனம் செய்யச் சிவாலயம் எங்குள்ளது என்று வினவினான். அவன் மைத்துனன் அவனைப் பரிகாசம் செய்வதற்காக ஒரு குதிரை இரைப்பையில் மணலை நிரப்பி

மண்ணில் நட்டுவைத்துப் பூமாலை சாத்தி அதைச் சிவலிங்கம் என்று அவ்வணிகனுக்குக் காட்டினான். வணிகனும் அதை நம்பி மிகுந்த அன்போடு தொழுதுவிட்டு உணவு அருந்தச் சென்றான். மைத்துனன், 'அத்தான், இன்று சிவதரிசனம் இன்றி உணவு அருந்துகின்றீரே' என்று ஏளனம் செய்தான். அதனை நிரூபிக்க அந்த மணல் பையை எடுத்துக் காட்டச் சென்றான். ஆனால் அங்கே பைக்கு மாறாக உண்மையாக இலிங்கமே இருந்தது. தோண்டிப் பார்க்க அடி காணவில்லை. எல்லாரும் வியப்படைந்தார்கள். வணிகனும் மனம் உருகினான். பிறகு அங்கே ஊரார் ஆலயம் எழுப்பினார்கள். குதிரைப் பையே இலிங்கம் ஆனதனால் இறைவனுக்கு மொக்கணீசர் என்ற என்ற பெயர் வழங்கிற்று என்பர். மொக்கணி என்றால் குதிரை இரையைக்கொள்ளும் இரைப்பை என்பதாகும். '

ஒரு மேற்கோள்: இச்சரிதத்தையே மணிவாசகப் பெருமான், கீர்த்தித் திருவகவலில்,

> **''மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி**
> **சொக்க மதாகக் காட்டிய தொன்மையும்''**

சமயாசாரியர்களில் காட்டியிருக்கிறதாக ஊகிக்கப் -படுகிறது. மணிவாசகப் பெருமான் கொங்கு நாடு விஜயம் செய்திருக்கக் கூடும் என்றும் இதனால் கூறமுடியும். அவிநாசியைப் பற்றி நரியைக் குதிரைப் பரியாக்கி என்ற பாசுரத்தில் 'அவிநாசியப்பா என்று சொல்லியிருக்கிற படியாலும் அவிநாசியாலயத்தில் என்று சமயாசாரியர்களில் சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற இரு அடியார்களின் திருவுருவங்கள் மட்டும் உள்ளபடியாலும், மாணிக்கவாசகப் பெருமான் அவிநாசிக்கு விஜயம் செய்திருக்க வேண்டும் எனலாம்; அப்படியாயின், அருகில் உள்ள இந்தத்தலத் -தையும் தரிசித்து இருக்கலாம். ஆகவேதான் இந்தத் தலத்தைத் திருவாசகத்தில் வைத்துப் பாடியிருக்க வேண்டும் என்றும் கூறலாம்.

அருகிலுள்ள தலங்கள்: இந்தத் தலத்திற்கு அருகில் பல அருமையான தலங்கள் இருக்கின்றன. அவைகளில் கொங்குச் சோழர்கள் கருநாடக அரசர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் நிரம்ப இருக்கின்றன. சேவூரில் வாலீசர் ஆலயத்தில் கொங்குசோழர் கல்வெட்டுகள் மிகுதியாக இருக்கின்றன. இரு கொங்குகளையும் சேர்த்து ஆண்ட வீரராசேந்திரச் சோழன் கல்வெட்டுக்கள் உண்டு. அவ்வூருக்குச் செம்பியன் கிழானடி நல்லூர் என்று அக்காலத்துப் பெயர். மற்றொரு ஊர் நம்பியூர் என்பது இதன் பண்டைய பெயர் நம்பி பேரூர் என்பது. ஆலயத்தில் கல்வெட்டு உண்டு. அண்ணூர், கவசை, இடிகரை முதலிய தலங்களிலும் கல்வெட்டு நிறைந்த ஆலயங்கள் உண்டு. ஆகவே, இந்தத் தலம் இருக்கும் வடபாரிசார நாடு சைவம் திகழ்ந்த ஒரு நாடாக முன்னாளில் இருந்தது என்க.

திருவஞ்சைக்களம்

மலைநாட்டுத் தனித் திருப்பதி

இடம் :- சேரநாடு என்னும் மலைநாட்டில் சைவ சமயக் குரவர்களால் பாடப்பெற்ற தலம் ஒன்றே ஒன்றுதான். அது திருவஞ்சைக்களம் என்ற திருத்தலம். அத்தலம் மலை நாட்டில் கொச்சி சமஸ்தானத்தில் முகுந்தபுரம் தாலுக்காவில் உள்ள ஒரு சிறு ஊர். மேற்குக் கடற்கரையில் அதனை அடுத்தாற்போல் அதற்கு அருகிலும் சிறிது தூரம் தள்ளியும் வடக்கே பாரதப்புழை ஆற்றிலிருந்து தெற்கே திருவனந்தபுரம் வரைக்கும் ஒரு நீண்ட நீர்வழி இருக்கிறது. அவ்வழி பல காயல்களையும் (கடற்கரை ஏரி) புழைகளையும் (ஆறு) இணைத்து விட்ட வகையில் உண்டாக்கப்பட்டது ஆகும்.

அது ஒரு பயன் பெற்ற வர்த்தகவழி ஆக இருக்கிறது. இரவும் பகலும் ஆக அளவுகடந்த நாவாய்களும் வஞ்சிகளும் (படகு) இதன்வழியே வர்த்தகச் சரக்குகளையும் ஆட்களையும் ஏற்றிச் செல்வதைக் காணலாம். இவ்வழியில் கொச்சி சமஸ்தானத்திற்கு உட்பட்ட பகுதி புல்லூற்றுப் புழையாகும். இது ஒரு ஆறு. இவ்வாறு புல்லூற்றுத் தீவையும் மேற்கு நிலப்பகுதியையும் பிரிக்கிறது. இவ்வாற்றுக்கு மேல்கரையில் உள்ளது திருவஞ்சைக்களம் என்ற தலம். இவ்வூருக்கு முப்பக்கல்களிலும் கொடுங்கோளூர் தாலுக்கா எல்லையாக இருக்கின்றது. கொடுங்கோளூர் கொச்சி அரசனுக்குக் கீழ்ப்பட்ட ஒரு குறுநில மன்னனுடைய சிறுநாடு, அந்நாடு ஐந்து கிராமங்களைக் கொண்டது. அதிலே லோகமலேசுவரம் என்ற பகுதியில் கொடுங்கோளூர் பகவதியம்மன் கோயில் இருக்கிறது. லோகமலேசுவரம் என்பது அக்குறுநில மன்னரின் அரண்மனை இருக் கும் பகுதி. அழிக்கோடு என்பது மாப்பிள்ளைகள் என்ற முசுலிம்கள் உள்ள பகுதி. மேற்றலை என்பது மற்றொரு கிராமம், அதன் கிழக்கே உள்ளது கீழ்த்தலை என்ற ஒருபகுதி. மேற்றலை கிராமத்திற்கும் புல்லூற்று ஆற்றிற்கும் இடையில் உள்ளது

திருவஞ்சைக்களம் ஆகும். இதனை மலையாளத்தார் திருவஞ்சிக்குளம் என்று வழங்குகிறார்கள். இவ்வூரில் அரசனுடைய கோவிலகமும் (அரண்மனை) சிவாலயமும், திருக்குளமும் குடிகளுடைய வீடுகளும் இருக்கின்றன. ***1911***-ல் இதன் மக்கள் தொகை ***243***. தற்போது மூன்றத்தனை இருக்கலாம்.

வழி:- கொச்சி சமஸ்தானத்து இருப்புப் பாதையில் செறுவண்ணூரிலிருந்து (ஷொரனூர்) எரணாகுளத்திற்குச் செல்லும் வழியில் *25* கல்லில் திருச்சிவப்பேரூர் (திருச்சூர்) என்ற நிலையம் இருக்கிறது. அந்நிலையத்தில் இறங்கிப் புல்லூற்றுக்குச் செல்லும் விசை வண்டியில் ஏறித் தோணித்துறை அடைந்து வஞ்சி என்ற நாட்டுப் படகில் ஏறி ஆற்றைத் தாண்டினால் திருவஞ்சைக்களம் அடையலாம். அல்லது இரிஞாலக்குடை என்ற மற்றொரு இருப்புப்பாதை நிலையத்தில் இறங்கி விசை வண்டியில் ஏறி நான்கு கல்சென்று இரிஞாலக் குடை- என்ற ஊரை அடைந்து அங்கே வண்டி மாற்றி புல்லூற்று வண்டியில் ஏறி ஆற்றைக் கடந்தும் செல்லலாம். கீழ்நாட்டிலிருந்து செல்லுபவர்களுக்குத் திருச்சூர் வழிதான் சிறந்தது. சுலபமும் ஆனது. திருச்சூரிலிருந்து போகும் வழியில் நிலக்காட்சி மிகச் செழிப்பாக இருக்கும். வழியில் ஊரகம், இரிஞாலக்குடை, கருவப்படனை, புல்லூற்று முதலிய ஊர்கள் இருக்கின்றன. திருச்சூரிலிருந்து புல்லூற்று இருபத்து மூன்று கல் இருக்கிறது. பாதை நன்றாக உள்ளது. விசை வண்டிக்கு ஆள் ஒன்றுக்குப் பன்னிரண்டணா கூலி. வஞ்சிக்கு இரண்டணா கூலி. திருச்சூர் என்ற திருச்சிவப்பேரூர் கொச்சியில் ஒருபெரிய ஊர். அங்கு அரசியல் நிலையங்கள் பல உண்டு. ஊர் நடுவில் வடக்கு நாதர் (இடபக்குன்று நாதர் என்பதன் மரூஉ) ஆலயம் உண்டு. அது ஒரு பெரிய ஆலபம். இரிஞாலக் குடாவும் ஒரு பெரிய ஊர். பரதாழ்வார் கோயில் இங்கே இருக்கிறது. அதன் பெயர் கூடல் மாணிக்கம் என்பர். இக் கோயில் நிர்வாகத்தில் திருவிதாங்கூர் சீமையார் உரிமைகளைக் கொண்டாடுகிறார்கள். தச்சுடைய கைமால்

என்ற ஒரு அதிகாரி இதனை ஆள்கிறார். இவ்வூரில் விவிலியர் பள்ளிகளும் கல்விச்சாலைகளும் உண்டு. கருவப்படன என்பது ஆற்றின் வடபால் உள்ள ஒரு துறைமுகம். அது ஒரு சிறந்த வாணிபத்தலம் நூற்றுக்கணக்கான படகுகள் இங்கிருந்து சரக்குகளைத் தெற்கே கொண்டு செல்லும். புல்லூற்றுத்தீவு ஆற்றுக்குக் கிழபாலில் கொடுங்கோளூருக்கு எதிர்க்கரையில் உள்ள ஒரு சிறு தீவு. இது கொடுங்கோளூர் மன்னனுக்கு உட்பட்டது.

ஊர் அமைப்பு :- திருவஞ்சைக் களத்திற்கு வடக்கே கொடுங்கோளூரும் தெற்கே கோட்டைப்புறமும் இருக்கின்றன. மேற்கே மேற்றலையும் அதற்கு மேற்கே அழிக்கோடு என்ற ஊரும் இருக்கின்றன. நடந்து பார்த்தால் இப்பகுதிகள் யாதொரு இடைவெளியின்றி ஒன்றோ -டொன்று தொடர்ந்தே இருக்கக் காணலாம். கீழ்நாடுகளில் உள்ள இணைக்கப்பட்ட வீடுகளைப்போல் அல்லாமல் மலைநாட்டு வீடுகள் ஒவ்வொன்றைச் சுற்றிலும் தோட்டமும் நடுவில் பங்களா போல வீடும் அமைந்திருக்கக் காணலாம். ஆகவே ஊர் மிகப் பரந்து கிடக்கும்.

கொடுங்கோளூரில் பகவதியம்மன் கோயிலும் அதனை அடுத்துப் பல பாடசாலைகளும் உண்டு. பகவதி கோயில் மிகப் புகழ் பெற்றது. அது சேரன் செங்குட்டுவன் பிரதிட்டை பெற்றது. கண்ணகி கோயில் இதுவாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இக்கோயிலிலே மீன மாதத்துப் பரணித் திருவிழாவில் கோழிப்பலி விழா நடக்கும்: அப்போது தீண்டாத வகுப்பார்களும் இக்கோயிலைத் தரிசிப்பார்கள்.

மேற்றளி என்ற பகுதியில் இரண்டு சிவாலயங்களும் ஒரு விஷ்ணு ஆலயமும் உண்டு. விஷ்ணு ஆலயம் குலசேகர ஆழ்வார் வழிபட்ட ஆலயம். அவரே சேரமான் பெருமான்களில் முதலானவர் என்பர். அவர் அருளியது ''பெருமாள் திருமொழி'' என்பது. கீட்டளிச்சிவாலயம் மிகப் பண்டையது. 17 நூற்றாண்டுக் கல்வெட்டில் (வீரராகவன் கல்வெட்டு) தளி என்ற சொல் காணப்படுகிறது.

கோட்டைப்புறம் என்பது டச்சுக்காரர்களின் கோட்டை இருந்த இடம். இது தெற்கே ஒரு கல்லில் உள்ளது. கோட்டை புல்லூற்றாறு பெரியாற்றுடன் கூடும் இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்கோட்டை பாழடைந்து கிடக்கிறது. சில சுவர்கள் மட்டும் இருக்கின்றன. கோட்டைப்புறத்திலிருந்து நீராவிப் படகுகள் எரண குளமும், கொச்சித் துறைமுகமும் செல்லுகின்றன. கொடுங்கோளூரிலிருந்து கோட்டைப்புறம் வரை கற்பாதை உண்டு. அப்பாதையின் இடையில் திருவஞ்சைக்களமும் அதனை அடுத்து சேரமான் பரம்பும் இருக்கின்றன.

ஊர்ப் பகுதிகள் :- திருவஞ்சைக்களத்துத் திருக்கோயில் ஊர் நடுவில் உள்ளது. அது புல்லூற்றாற்றை நோக்கிக் கிழக்கு முகமாய்க் கட்டப்பட்டது. கோயிலுக்குள் ஊட்டுப்புரை, சத்திரம், திருக்குளம், நந்தவனம் முதலியவைகள் உள்ளன. கோவிலுக்கு அரைக்கல் தெற்கே சேரமான் பரம்பு என்ற வெளியிடம் இருக்கிறது. இதுவே சேரமான் பெருமாள் திருமாளிகை இருந்த இடமாம். இந்த இடத்தைத் தோண்டிப் பார்த்துப் பண்டைக்கிணறு, கட்டடம், இலிங்கம் முதலியவைகளைக் கண்டெடுத் திருக்கிறார்கள்.

இவ்வூரை அடுத்து சிரிங்கிபுரம் முதலிய சில பகுதிகள் உண்டு. அங்கே பல ஆலயங்கள் இருக்கின்றன. நீளச்சதுரக் குளம் ஒன்று அங்கே உண்டு. அது சுமார் ஒரு பர்லாங்கு நீளம் இருக்கும். அது அராக்குளம் எனப்படுகிறது.

சிரிங்கபுரத்துக் கோவில் கொங்கணிகளுடையது. அது திருமால் கோவில். அங்கே சிவாலயம் ஒன்றும் உண்டு அது குறுநில மன்னனின் ஆட்சிக்குட்பட்டது.

சிவாலயம் :- இதுவே சேரமான் பெருமாள் நாயனார் வழிபட்ட ஆலயம். பெரும்பாலும் மலைநாட்டுச் சிற்ப முறையில் கட்டப்பெற்றது. ஆனால் சில பகுதிகள் கீழ் நாட்டுச் சிற்பத்தை ஒட்டி உள்ளன. கீழ்ப்புறக் கோபுரம் முற்றுப்பெற்றது. மேற்புறக் கோபுரம் முற்றுப் பெறாமல்

அடித்தளத்தோடு நிற்கிறது. சுற்று மதில் 8 அடி உயரம் தானிருக்கும். அதனுள்ளே 18 சிறு தளிகள் உள்ளன. அவற்றில் சிறந்த பகுதிகள் ஸ்ரீ கோவில் என்ற மூலத்தானம், அம்மன் சந்நிதி, பள்ளியறை, நடராசர் சந்நிதி முதலியன. க்ஷேத்திர பாலர் வெளிப்பிரகாரத்தில் உண்டு. மலைநாட்டுக் கோவில்களில் இல்லாத சில குறிப்புகள் இங்கே உண்டு. ஸ்ரீ கோவிலுக்கு முன்னால் அர்த்த மண்டபமும், வடமேற்கில் பள்ளியறையும் சிறப்பானவை. பல சிவலிங்கங்கள் பிரகாரத்தில் உண்டு. இவை கீழ்நாட்டு முறையாகையால் சுந்தரரால் சீர்த்திருத்தப் பெற்றவை என்று சொல்லக்கூடும்.

திருவிழாக்கள் முதலியன :- திருக்கோயிலிலே ஆண்டுத் திருவிழா கும்ப மாதத்தில் (மாசி) நடைபெறும். இதனை மிக நன்றாக நடத்துகிறார்கள். சேரமான் பெருமாள் சுந்தரமூர்த்திகள் திருநாள் ஆடி மாதம் சுவாதிநாள் ஆகும். இத்திருநாள் இதுவரை நடைபெறாமல் இருந்தது. பத்து ஆண்டுகளுக்கு முன் கோவை சேக்கிழார் திருக்கூட்டத்தார். எடுத்துக்கொண்ட முயற்சியினால் தொடங்கப்பெற்று நடைபெறுகிறது. கொச்சி அரசியலாரும் அத்திருவிழாவிற்கு ஒரு குறிப்பிட்ட தொகை தருகிறார்கள். அத்திருவிழாவில் தமிழ்நாட்டு மக்களை யாதொரு தடையுமின்றி அனுமதிக்கிறார்கள். அத்துடன் சைவத் திருக்கூட்டமும் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் சென்று தரிசனம் பெறுகின்றார்கள். கோயிலில் நித்திய வழிபாடு மூன்று பூசைகளுடன் இரவில் பள்ளியறை உற்சவத்துடன் நடைபெறுகிறது. மலைநாட்டு ஏனைய கோயில்களில் பள்ளியறை உற்சவம் இல்லை. இவ்விவரங்கள் கீழ்நாட்டுச் சம்பிரதாயங்களை ஒட்டி நடைபெறுகின்றன. கூத்தம்பலத்தில் நாள்தோறும் புராணப் பிரசங்கம் உண்டு.

இவ்வாலயத்திற்குக் கொச்சி, திருவிதாங்கூர், மலையாளம் முதலிய நாடுகளில் தாவர சொத்துக்கள் உண்டு. அவைகளுக்கு மேற்பார்வை அதிகாரிகள் உண்டு.

வரலாறு :- மலைநாடு சேரநாடு என்ற தமிழ்ப் பெயரால் வழங்கி வந்தது, அச்சொல்லில் சகரம் வலிந்து சேரல் என்பது கேரளம் ஆகி சேரநாடு கேரளநாடு என்று வடமொழியில் வழங்கிற்று. சிலப்பதிகாரத்திலும் சங்க நூல்களிலும் சேரநாட்டுத் தலைநகர் 'வஞ்சி' என்று கூறப்பட்டுள்ளது. அவ்வஞ்சிதான் திருவஞ்சைக்களம் என்று திரு கனகசபைப் பிள்ளையவர்கள் கூறியுள்ளார். ஆனால் அஞ்சைக்களம் என்ற சொல் வஞ்சிக்குளம் என்று ஆகும் என்று சிலர் ஐயுறுகின்றனர். கொடுங்கோளூர் சேரர் தலைநகராக இருந்ததென்று பெரியபுராணம் கூறும். அது அருகில் உள்ளது. இவ்வூருடன் தொடர்ந்தே உள்ளது. தேவாரத்தில் கடல் அருகில் உள்ள மகோதையைச் சேர்ந்தது அஞ்சைக்களம் என்று கண்டிருக்கிறது. இம்மூன்று ஊர்களும் அடுத்தடுத்தே இருப்பதாலும் குலசேகராழ்வார் என்ற சேரமன்னர் இவைகளை அடுத்த குலசேகரபுரத்தில் இருந்தனர் ஆனதினாலும் இந்தத் திருவஞ்சைக்களம் சேர நாட்டுத் தலைநகரின் ஒருபகுதி எனக் கொள்ளல் பிழையாகாது. 1800 ஆண்டுகளுக்கு முன் இந்நகரைச் சேரன் செங்குட்டு வனும் அவன் பரம்பரையினரும் ஆண்டார்கள். அம்மன்னன் தம்பியே சிலப்பதிகாரம் அருளிய இளங்கோவடிகள். 600 ஆண்டுகளுக்குப் பிந்தி சேரமான் பெருமான்கள் பட்டப் பெயர் வகித்த ஒரு தொகுதியினர் ஆண்டனர். அவர்கள் மக்களால் தெரிந்தெடுக்கப்பபட்ட மன்னர்கள். அவர்களில் ஒருவர் குலசேகரர் என்ற வைணவ அடியார். மற்றொருவர் பெருமாக்கோதையார் என்ற சிவனடியார். அவரே கழறிற்றறிவார் என்ற பெயருடன் மன்னராகிச் சைவத்தைப் பெருக்கித் திருவஞ்சைக்களத்தில் நடராசர் உருவத்தை வணங்கிச் சுந்தரமூர்த்திகளுடன் உறவாடி இறுதியில் சுந்தரருடன் கயிலைக்குச் சென்றார். சுந்தரரும் சேரமானும் அஞ்சைக்களத் தேவாரம் நொடித்தான்மலைத் தேவாரம் திருக்கயிலாய ஆதியுலா என்பவற்றை அருளிச் செய்தார்கள். இச்சேரமான் பெருமாள் புத்தசமயி ஆனதாகவும் முகம்மதியன் ஆனதாகவும் கதைகள் உண்டு. பெரியபுராணத்தின்படி சைவ

அடியாராக இருந்து முசுலிம் கதைப்படி முகம்மதியனாகி மெக்கா சென்றார். இதற்குச் சான்றாக ஒரு பள்ளிவாசலைக் காட்டுகின்றார்கள். வேறு சான்று இல்லை. இந்நாடு பிந்தி பல குறுநில மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டுப் பின்னால் கொச்சி பெரும் படப்பு வம்சத்து மன்னர் கீழ் வந்துள்ளது. கோயிலில் வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் நான்கு உண்டு. இக்கோயில் பிற்காலத்து மன்னர்களால் புதுக்கப்பட்டும் பல நிலங்கள் தானம் பெற்றும் இருக்கின்றது. இப்போது அரசியல் பகுதியினரால் ஆளப்படுகிறது. கயிலை அடைந்தனர்.

கல்வெட்டு, சிற்பம் முதலியன :- கோயிலுக்குள் மலையாள நாட்டுச் சிற்பம் மிகுதியாகத் தோன்றும். கோபுரங்கள் ஓடு மேய்ந்த தூபிகள். உட்பிரகாரமும் சிறு தளிகளும் ஓட்டு முகட்டைக் கொண்டன. ஸ்ரீ கோயில் மட்டும் செப்புத் தகட்டால் மேயப்பட்டிருக்கிறது. உட்பிரகாரத்தின் சுற்றிலும் நூறாயிரம் விளக்கு வைக்கும் வண்ணம் மரச்சட்டங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஆலயத்திற்குள்ளே தீர்த்தங்களும் வாவிகளும் உண்டு. கோயில் அடுக்களை உட்பிரகாரத்துள் இருக்கின்றது. ஊட்டுப்பிறை வடபுறத்தில் இருக்கிறது. கோயிலுக்குக் கிழக்கும் மேற்கும் அரசம்பலங்கள் உண்டு. உட்பிரகாரத்தைச் சுற்றி அடித்திண்டு கருங்கல்லால் ஆக்கப்பட்டிருக்கிறது. அதில்தான் வட்டெழுத்துக் கல்வெட்டு இருக்கிறது. நடராசரின் பீடத்தில் திருவஞ்சைக்களம் சபாபதி' என்று தமிழில் பொறிக்கப்பட்டிருக்கிறது. சேரமான், சுந்தரர், குதிரை, வெள்ளையானை இவைகள் கிழக்குக் கோபுர வாயிலில் கருங்கற் சுவர்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன. கொடிக் கம்பம் பல அடுக்குகளைக் கொண்டது மிக உயரமானது. உட்பிரகாரத்தில் நிருதி மூலையில் சேரமான் சுந்தரர் மூலத்தானம் இருக்கிறது. ஒரே கல் பீடத்தில் இவ்விரு அடியார்களின் திருவுருவங்கள் பிரதிட்டை செய்யப் -பட்டுள்ளன. வெகுநாள் வரையில் இவ்வுருவங்களைச் சேரமான் அவர் மனைவி செரோட்டியம்மா என்று எண்ணியிருந்தார்கள். அது இப்போது திருத்தப் பட்டது.

கல்வெட்டுகள் நான்கும் வட்டெழுத்து (33-36-1100 M.E. அறிக்கை). ஒன்றில் கோயில் அதிகாரிகள் திருவஞ்சைக்களத்துப் பெருந்தச்சனுக்கு வீடும் நெல்லும் தானம் செய்தது. இரண்டாவதில் இராமவர்மன் (1003-1019) தீபமாடம் தாபித்தது. மூன்றாவதில், கொல்லம் 10 நூல் திப்பு அழித்ததை பலியத்து கோவிந்த அச்சன் கட்டினது. நான்காவது கீட்டளியில் ஒரு கல்லில் கண்ணீசர் ஐராணிக் குளத்துக் கோயிலுக்கு நெல் கொடுத்தது. இவைகள் பிற்காலத்துத் தான சாசனங்களே. தென் இந்தியக் கல்வெட்டுக்கள் வால்யம் III, 28ல் சோழ அரசன் இராஜேந்திரன் II மலைநாட்டின்மீது படையெடுத்து மகோதை என்ற திருவஞ்சைக்களத்தைப் பிடித்து அரச சின்னங்களைக் கைகொண்டான் என்று அறிகிறோம்.

பாடல்கள் - தமிழ் : சங்கத்தார் காலத்தில் வஞ்சியைக் குறித்த பாடல்கள் புறநானூறு முதலியவைகளில் உண்டு. சிலப்பதிகாரத்தில் வஞ்சிக்காண்டம் என்ற பகுதி உண்டு. சைவ வைணவ மேம்பாட்டுக் காலத்தில் சேரமான் பாடிய ஆதிஉலா, பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, சுந்தரர் அருளிய திருவஞ்சைப் பதிகம், நொடித்தான்மலைப் பதிகம் என்பன. குலசேகரர் இதனைப் பாடவில்லை.

பெரிய புராணத்தில் இவ்வூரைப்பற்றி கழறிற்றறிவார் புராணத்திலும் வெள்ளானைச் சருக்கத்திலும் கூறியுள்ளார்.

மலையாளம் : கேரளோற்பத்தி (100 முன்) கேரள க்ஷேத்திர மகாத்மியம் (150 முன்) கேரள மான்மியம் (300 முன்) உத்தண்ட சாஸ்திரி எழுதிய கோகில சந்தேசம் (17நூ) சுகசந்தேசம் என்பன.

இவைகளில் கோகில சந்தேசத்தில் திருவஞ்சைக்களம் கூறப்பட்டுள்ளது. சுகசந்தேசத்தில் திருக்குணா மதிலகம் கூறப்பட்டுள்ளது. இது 6 கல் தூரத்திலுள்ளது. திருவஞ்சைக்களத்திற்கு அருகில் சில பௌத்த சமயச்

சின்னங்கள் காணப்படுகின்றன. ஆகவே இவ்வூர் மிகப் பண்டைப் பெருமை கொண்டது என்க.

திருவஞ்சைக்களத்து ஆலயமானது மற்ற கேரளநாட்டு ஆலயங்களைப் போலவே கட்டப்பெற்று இருக்கிறது. ஆலயம் கிழக்கு நோக்கிய சந்நிதியைக் கொண்டது. கிழவாயிலில் கள்ளிக்கோட்டை ஓடுகளால் மேய்ந்ததும் மூன்று அடுக்குகளைக் கொண்டதுமான ஒரு கோபுரம் இருக்கின்றது. வடக்கிலும் தெற்கிலும் இரண்டு வாயில்கள் உண்டு. ஆனால் கோபுரங்கள் கிடையா. மேற்கிலோ கோபுரம் கட்டுவதற்காக உத்தேசித்து அஸ்திபாரம் மட்டும் போடப்பெற்றிருக்கிறது. யாதோ காரணத்தால் கோபுரம் பூர்த்தியாகாமல் நிற்கிறது. பொதுவாக தளவரிசையும் அஸ்திவாரமும் கருங்கல்லால் கட்டப்பெற்று மேல்பாகம் செங்கல்லால் கட்டப்பெற்றிருக்கிறது. முதல் பிரகாரத்தில் இரண்டு மூன்று சிறு சன்னிதிகளும் வடபுறத்தில் சமையல் விடுதிகளும் ஒரு பெரிய சரக்கொன்றை மரமும் தென்புறத்தில் ஒரு குளமும் இருக்கின்றன. கிழபுறத்தில் கோபுரத்தை அடுத்து ஒரு உயர்ந்த மண்டபம் ஓடுகளால் மேயப்பட்டிருக்கிறது. அங்கேயிருக்கும் துவிஜஸ்தம்பத்தில் வெங்கலத்தால் செய்யப்பட்ட எட்டு மூர்த்திகள் வைக்கப் பெற்றிருக்கின்றன. உட்பிரகாரத்தைச் சுற்றி ஓடுமேய்ந்த திண்ணை இருக்கின்றது. அதன் வெளி அஸ்திவாரத்தில் மலையாள மொழியில் பெரிய எழுத்தால் வெட்டியிருக்கும் கல்வெட்டு ஒன்று இருக்கிறது.

சுவாமி சன்னிதி உட்பிரகாரத்தின் மத்தியில் இருக்கின்றது. அதன் சுவர்கள் செங்கல்லால் கட்டப்பெற்று வெள்ளைக்காறையால் சித்திரிக்கப்பெற்றிருக்கின்றன. சுவாமி சிவலிங்க ரூபமாய் இருக்கிறார். லிங்கம் வெகு சிறியது. கர்ப்பகிரகத்திற்கு வடகிழக்கு திக்கில் ஒரு சிறு ஆலயத்தில் நடராஜமூர்த்தி வைக்கப்பெற்றிருக்கின்றார். உருவம் சுமார் 2 அடி உயரம் இருக்கும். வெகு அழகாக இருக்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள மூர்த்தியைப்போல் இதுவும் இருக்கின்றது. மலையாள நாட்டில் வேறு எந்த ஆலயத்திலும்

இவ்வித நடராஜ உருவம் இல்லையாம். ஆகையால் இவ்வுருவமே சேரமான் பெருமாள் நாயனார் வைத்துப் பூஜித்த உருவம் எனலாம். கர்ப்ப கிரகத்திற்கு தென்மேற்கு மூலையில் ஒரு சிறு மண்டபத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாளும் எழுந்தருளியிருக்கின்றார்கள். இவ்விருவரின் உருவங்கள் உலோகத்தால் செய்யப்பெற்று ஒரே பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கின்றன. உருவங்கள் 10 அங்குலம் உயரமிருக்கலாம். சேரமான் பெருமாள் உருவம் கிரீடத்தைத் தரித்ததாயும் வலதுகை இயற்கையாய் தொங்கிக்கொண்டும் இடதுகை 4 அங்குலம் நீளமான ஒரு கோலைப் பிடித்துக் கொண்டு தூக்கிய வண்ணமாகவும் இருக்கின்றது. இவ்வித தோற்றத்தின் பொருளை விரித்துரைப்பார் ஒருவரும் அங்கு இல்லை. சுந்தரமூர்த்திகள் உருவம் கிரீடமில்லால் நிற்கின்றது. கர்ப்ப கிரகத்திற்கு வடமேற்கில் சயன அறையும் தென்மேற்கில் க்ஷேத்திர பாலகர் அறையும் இருக்கின்றன. இவை தனித்த கட்டிடங்கள். கிழபுற கோபுர வாயிலின் முன்னால் அடிப்பாகத்தில் இரண்டு மூன்று யானைகளும் ஒரு குதிரையும் செதுக்கப்பட்டிருக்கின்றன. வடபுறத்தில் இரண்டு சிறு உருவங்கள் அழகாக செதுக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளைச் சேரமான்பெருமாள் சுந்தரமூர்த்திகள் என்ற இருவரின் உருவங்கள் என்கிறார்கள். ஆலயத்திற்கு அரை மைல் தூரத்தில் சேரமான் பரம்பு என்ற வெளியிடம் இருக்கிறது. அதுதான் சேரமான் பெருமானின் அரண்மனை இருந்த இடமாம்.

ஆடுதுறை

இடம்: ஆடுதுறை என்ற தலம் சோழநாட்டில் தஞ்சாவூர் வட்டத்தில் உள்ள ஒரு ஊர். இவ்வூருக்குப் புகைவண்டி வசதி உண்டு. மாயூரம் கும்பகோணம் பாதையில், மயூரம் சந்தியிலிருந்து ஏழு கல்லிலும் கும்பகோணம் நிலையத்திலிருந்து 12 கல்லிலும் உள்ளது. வண்டிப்பாதையும் இவைகளுக்கு இடையில் உண்டு ஊர் பெரிய கிராமம். கடைத்தெரு பெரியது. தமிழ்ச் சைவச் செட்டியார்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுச் செழிப்புடன் சைவப்பற்றோடு வாழ்கிறார்கள். ஊரைச் சுற்றிலும் நன்செய் நிலங்கள் செழித்து இருக்கின்றன. வீடுகளும் தெருக்களும் உண்டு. புகைவண்டி ஓரமாகவே காவேரி ஆறு, ஊருக்கு முக்கால் கல்லில் ஓடுகிறது. அதன் தென்கரையில் அழகிய துறை ஒன்று இருந்தது. அதன்மேல் பழம் நிறைந்த மரச்சோலைகள் இருந்தன. அவைகளில் குரங்குகள் விளையாடிக்கொண்டிருந்தன. அக்காட்சியைக் கண்ட முன்னோர்கள் அத்துறைக்கு தென்குரங்காடுதுறை என்று பெயரிட்டு வழங்குகிறார்கள். அந்நீண்ட பெயர் குறுகி ஆடுதுறை ஆயிற்று. தேவாரப்பதிகத்தில் தென்குரங்காடுதுறை என்றே குறிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்: இத்தலத்துச் சிவாலயம் மிகப் பண்டையது. அப்பர் சம்பந்தர்களால் பாடப்பெற்றது. ஆகவே 14 நூற்றாண்டுகளுக்கு முந்தியே இக்கோயில் இருந்திருக்க வேண்டும். இத்தலத்தைப் பற்றிச் சம்பந்த சுவாமிகள் ‘பரவக் கெடும் - குரங்காடுதுறையே'' (இந்தளம்-2-ம் திருமுறை) என்ற பதிகத்தையும், திருநாவுக்கரசர் ‘இரங்கா - கபாலியே'' (திருக்குறுந்தொகை - 5-ம் திருமுறை) என்ற பதிகத்தையும் அருளிச் செய்திருக்கிறார்கள். அப்பர் பதிகத்தில் ‘பொன்னித் தென்கரை குரங்காடுதுறை’ என்று காவிரி ஆறு குறிக்கப்பட்டுள்ளது. ஆக இத்தலத்திற்குப் பதிகம் இரண்டு, தீர்த்தம் காவிரியாறு என்று அறியலாம். திருக்கோயிலிலே எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் ஆபத்சகாயர்;

தேவியின் பெயர் பவளக்கொடியம்மை (வடமொழி - பிரவாள வல்லி) என்று வழங்குகிறார்கள். பதிகத்தில் இல்லை.

திருக்கோயில் அமைப்பு : கோயிலின் மூலத்தானமும் அர்த்த மண்டபமும் கருங்கல்லால் ஆனவை. அவைகளில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. சமீபத்தில் கடைத்தெரு வர்த்தகர்கள் 6000 ரூ. செலவில் கோயில் மண்டபங்களைப் பழுது பார்த்திருக்கிறார்கள்.

ஆலயத்தின் ஐதீகத்தைக் குறிக்கும் ஒரு சிற்பம் அதன் சுவரில் செதுக்கப்பட்டிருக்கிறது. இறைவனை ஒரு குரங்கு பூசிக்கும் பாவனையில் அச்சிற்பம் இருக்கிறது. சுக்கிரீவன் இறைவனை வழிபட்ட காட்சி என்று இதனைக் கூறுவர். கயப்பாக்கம் செட்டியார் அவர்கள் இங்கே இறைவனை சுக்கிரீவனும் அனுமானும் பூசித்ததாக எழுதியிருக்கின்றார்.

மேலும் இக்கோயிலில் இரண்டு அருமையான சிற்பக் குறிப்புகள் உண்டு. மூலத்தானத்தின் இருபுறங்களிலும் உள்ள துவார பாலகர்களுக்கு இரண்டு கைகளே உண்டு. அக்குறிப்பு இச்சிற்பம் மிகப் பண்டையது என்று காட்டும். கர்ப்பக்கிரகத்திற்கு வடவண்டையில் ஒரு அற்புதமான சிவமூர்த்தி இருக்கிறது. அதன் ஒரு கையில் மானும் மற்றொரு கையில் சாமரம் போன்ற ஒரு கருவியும் இருக்கின்றன. மழுவுக்கு மாறாக சாமரம் ஏன் தரித்திருக்கிறாரோ தெரியவில்லை.

அடுத்த தலங்கள் :

திருநீலக்குடி.: இதுவும் பாடல்பெற்றது. இரண்டு கல்லில் உள்ளது. தென்னல்குடி என்று வழங்குவார்கள். சுவாமிக்கு தைலம் ஆட்டினால் பாதி இலிங்கத்தில் சுவறிவிடுமாம். தேவாரத்தில் 'நீலக்குடியரன்' கூறப்பட்டுள்ளது. இப்போது வழங்கும் பெயர் தைலமாட்யேசுவரர். இரண்டு அம்மைகள் உண்டு. தைல நாயகி, ஒப்பிலாமுலையம்மை என்பன. தேவாரத்தில் தேவியின் பெயர் அழகம்மை என்பது.

மருத்துவக்குடி : இது ஆடுதுறைக்கும் நீலக்குடிக்கும் இடையில் உள்ளது. பெரிய ஊர். கோயில் பழையது. இது வைப்புத்தலம். கோயில் சீர்கெட்டுள்ளது. புராணமும் கல்வெட்டுகளும் உண்டு.

திருவிடைமருதூர்: திருநாகேசுவரம் இவ்விரு. தலங்களும் பாடல்பெற்றவை. இந்நான்கும் திரைமூர் நாட்டைச் சேர்ந்தவை என்று கல்வெட்டு கூறும்.

கல்வெட்டுக்கள்: இந்தத் தலத்தைப் பற்றிப் புராணமோ வேறு நூல்களோ கிடைக்கவில்லை. பதினைந்து கல்வெட்டுக்கள் மட்டும் கிடைத்திருக்கின்றன. அவற்றைக் கொண்டு சில விவரங்கள் அறியமுடிந்தன.

நாடும் ஊரும் கோயிலும் : கிடைத்த கல்வெட்டுக்கள் 9 நூ. முதல் 13 நூ. வரை நான்கு நூற்றாண்டுகள் வரை பரவியிருக்கின்றன. முதலில் பாண்டிய வமிசம், பிறகு சோழவமிசம் ஆண்டு இருக்கின்றன. அக்கல்வெட்டுக்களின் படி இந்நாடு உய்யக்கொண்ட சோழ வளநாடு என்று பெயர் பெற்றிருந்தது. பின்காலத்தில் பூபாலகுலவல்லி வளநாடு என்ற பெயர் தரப்பட்டிருந்தது. அவ்வளநாட்டின் ஒருபிரிவு திரைமூர் நாடு என்பது. அவ்வளநாட்டில் இருந்த ஊர்களில் திருக்குரங்காடுதுறை ஒன்று. இவ்வூரைக் கல்வெட்டுக்கள் ‘உய்யக்கொண்ட சோழ வளநாட்டுத் தென்கரை திரைமூர்நாட்டுத் தென்குரங்காடு துறை என்று விவரமாகக் கூறுகின்றன. இவ்வூர்க்கோயிலைக் குறிக்கும்போது ‘திருக்குரங்காடுதுறை மகாதேவர்‘ என்று கூறுகின்றன. தற்காலப் பெயர் கல்வெட்டில் இல்லை.

நாட்டை ஆண்ட அரசர்கள் : முதலில் பாண்டியர் ஆதிக்கத்தில் இவ்வூர் இருந்தது. சோழநாட்டை 7-ம் நூற்றாண்டில் பாண்டியர்கள், வென்று மூன்று நூற்றாண்டுகள் வரை ஆண்டார்கள். அவர்களில் சிலர் மாறன் சடையன் என்ற பட்டம் வகித்திருந்தார்கள். அம்மாறன் சடையன் ஒரு வனுடைய மூன்று கல்வெட்டுக்கள் இங்கு உண்டு.

சடிலவர்மன் (770 கி.பி.), வரகுணமகாராசன், (800-830) வரகுண வர்மன் (862-880) என்ற பாண்டியர்களுக்கு இப்பட்டம் இருந்தது. இவர்கள் காலத்தில் ஆடுதுறைக் கோயில் சிறந்திருந்தது.

சோழர்கள் ஆதிக்கம்: 10- ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழவமிசம் தலைநிமிரத் தொடங்கிற்று. ஆதித்தியச் சோழனும் அவன் மகன் பராந்தகனும் (906-952) விட்டுப் போன நாடு முழுதும் கைப்பற்றிக்கொண்டார்கள். பராந்தகன் மகனார்தான் கண்டராதித்தியர் (953). சைவ சமயத்தில் சிறந்து விளங்கி திருவிசைப்பா அருளிச் செய்த சிவனடியார் இவரே. இவருடைய மகன் உத்தமச்சோழன் என்ற மதுராந் தகச்சோழன் (969-985). கண்டராதித்தியருடைய தேவியின் பெயர் செம்பியன் மாதேவியார். இந்த அம்மையார் இறைபணியில் நின்று பல திருக்கோயில்களைக் கட்டினார். அவைகளில் ஒன்று தென்குரங்காடுதுறைச் சிவாலயம். இச்செய்தி ஆடுதுறைக் கல்வெட்டு ஒன்றால் தெரிகிறது. அது நடந்தது அவ்வம்மையார் திருமகனான உத்தம சோழன் ஆட்சியில் 986 ல் என்க. இந்த அம்மையாருடைய முழுப்பெயர் ‘மதுராந்தக தேவரான ஸ்ரீ உத்தமசோழ தேவரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார் பிராந்தகன் மாதேவடிகளான செம்பியன் மாதேவியார்’’ என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. புகழ்பெற்ற அரசனான இராஜராஜன் I (985-1013) கல்வெட்டுகள் இரண்டு இங்கே உண்டு. இவன்தான் தஞ்சைப் பெருங்கோயில் கட்டினவன். வடக்கே தெலுங்கு நாடும் கடல்கடந்த கடாரமும் மற்ற தீவுகளையும் சோழர் ஆதிக்கத்தில் கொண்டுவந்த செம்மல். இவனுக்குப் பிறகு வீரராஜேந்திரனுடைய 1065 ஆண்டுக் கல்வெட்டு ஒன்றும் உண்டு.

பிறகு இராசராசனுடைய ஆண் சந்ததி அற்றுப்போக பெண் சந்ததியில் வந்த வேங்கிநாட்டு இளவரசன் சோழர் பட்டத்தில் வந்து குலோத்துங்கன் I என்ற பெயரால் ஆண்டான் (1073-1118). அவன் காலத்துக் கல்வெட்டுக்கள்

இங்கே நான்கு இருக்கின்றன. அவனுடைய *1101* கல்வெட்டில் அவனது மெய்கீர்த்தி அடியிற் குறித்தபடி எழுதப்பட்டிருக்கிறது.

''புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப
மலர்மகள் புணர உரிமையில் சிறந்த
மணமுடி சூடி மீனவர் கெட
பல்லவர் இரிய விட்டோட
திக்கனைத்தும் தன் சக்கர நடாத்தி
வீரசிம்மாசனத்து புவனமுழுதுடையாளோடும்
வீற்றிருந்தருளியகோ விராசகேசரி பன்மரான
குலோத்துங்கச் சோழ தேவர்''

அவனுக்குப் பிறகு குலோத்துங்கன் III (*1178-1216*) கல்வெட்டு ஒன்றும் இராசராசன் III (*1232*) கல்வெட்டு ஒன்றும் இருக்கின்றன. இவைகளைத் தவிர பெயர் அழிந்துபோன இரண்டு சோழர் கல்வெட்டுக்களும் உண்டு.

இவ்விதம் கிடைத்துள்ள *15* கல்வெட்டுக்களில் பாண்டியர் மூன்றும் சோழர் *12*-ம் நான்கு நூற்றாண்டுவரை பரவிக் கிடக்கக் காண்கிறோம். *7* அரசர்களுடைய பெயர்கள் கிடைக்கின்றன. சோழ வமிசம் பெருமையோடு ஆண்ட காலத்தில் இக்கோயில் சிறந்து விளங்கிப் பல தானங்களைப் பெற்றது. திருவிசைப்பா அருளிய மன்னரின் தேவியே இந்தக் கோயிலைப் பெரிதாக்கிய செய்தியும் விளங்குகிறது.

அடுத்துள்ள மருத்துவக்குடிக் கல்வெட்டில் அதன் பெயர் ஆனைச்சூழ் திருவிடைக்குளம் என்று கண்டிருக்கிறது. சனநாதபுரத்தில் இரண்டு சமணர் பள்ளிகள் இருந்தனவாம்.

கல்வெட்டுகளில் கண்ட வேறு விவரங்கள் : மேலே காட்டியபடி நாடு, ஊர், கோயில் இவைகளுடைய பெயர்கள் குறிப்பதோடு சுற்றிலுள்ள ஊர்களின் பெயர்களும் காணப்படுகின்றன். தஞ்சாவூர், அம்பர், பூவாலசுந்தர விளாகம், இளையான்குடி, துறையூர், திருப்பள்ளிமடை,

விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலம் என்ற பெயர்களைக் காண்கிறோம். மக்கட் பெயர்களில் திருநாவுக்கரையன், உத்தமசோழன், இளையான் குடியான், தில்லைவாழ்வார், கஞ்சாறன் என்ற சைவப் பெயர்கள் வருகின்றன. மற்றப் பெயர்களில் முருகன் திருவடி, ஈசானசிவன், சாத்தன், கூத்தன், திருவாப்பாடி நங்கை முதலான பல பெயர்கள் உள்ளன. கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நன்கொடைகள் நிலம், எண்ணெய் வரி, எண்ணெய், கொல்லை, காசு முதலியன. கொடைகளில் நோக்கம் நொந்தாவிளக்கு, சந்திவிளக்கு, காளம் ஊதல், திருமந்திர போனகம், திருமஞ்சனம், திருப்பள்ளித்தாமம், திருநந்தவனம் முதலியன. தான நிலங்களைக் கூறும்போது அவற்றின் எல்லை குறிக்கப்பட்டுள்ளது. அதனால் அக்காலத்துப் பெயர்கள் பல அறிவோம். நிலத்தின் பெயர்கள் திருநாவுக்கரையன், செம்பியன் மாதேவி, பூபாலசுந்தர விளாகம் என்பன. ஆற்றின் பெயர் சுங்கம் தவிர்த்த பேராறு. வாய்க்காலின் பெயர் உத்தம சோழன்.

குளத்தின் பெயர் கற்குளம், பெருவழியின் பெயர் தஞ்சாவூர்ப் பெருவழி, தெற்கு நோக்கிப் போனவழி என்பன. அக்காலத்திலும் ஆடுதுறையிலிருந்து தஞ்சைக்கு ஒரு பெரும் வழி சென்றுகொண்டிருந்தது என அறியலாம். இவை போன்ற செய்திகள் இன்னும் பல கிடைக்கின்றன.

திருக்கருவூர்

இடம் : கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற தலங்களில் ஒன்று. முந்தி கோவை ஜில்லாவில் சேர்ந்திருந்தது. இப்போது திருச்சி ஜில்லாவில் உள்ள கரூர் தாலூக்காவின் தலைமை ஊர், ஈரோடு திருச்சி இருப்புப் பாதையில் ஒரு நிலையம். அமராவதி என்று இப்போது வழங்கும் ஆன் பொருனை ஆற்றின் வடகரையில் உள்ளது. அவ்வாறும் காவிரியும் கூடும் இடத்திற்கு மேற்கே ஏழு கல்லில் உள்ள ஊர். கோயில் இரயிலடிக்கு ஒரு கல் மேற்கே உள்ளது ஆறு பெரியது. ஆனை மலையில் தோன்றி காவிரியில் சேருவது. தெற்கே 13 கல்லில் வெஞ்சமாக் கூடல் என்ற பாடல் பெற்ற தலமும் வட மேற்கே 17 கல்லில் கொடுமுடி என்ற பாடல் பெற்ற தலமும் அருகில் பெற்ற ஊர். ஊர் நகரசபை உள்ளது. பல அலுவலகங்கள் கொண்டது. தங்குவதற்கு அளவிறந்த வசதிகள் உண்டு.

கோயில் பெரியது : கிழக்கு நோக்கிய சந்நிதி. முன் கோபுரம் மிகப் பெரியது. உட்பகுதி கருங்கற்றிருப்பணி. பண்டை சிற்பங்கள், கல்வெட்டுக்கள் முதலியவைகளை எல்லாம் அழித்துவிட்டுப் புதுமுறையில் செதுக்கி நயப்படுத்திய கற்களால் சமீபத்தில் கட்டப்பெற்றது. முன் கோபுரத்தைத் தாண்டியதும் வலது புறத்தில் உள்ள அலங்கார மண்டபம் ஒன்றே பழைய கட்டடம் மற்றவைகள் எல்லாம் புத்தம் புதியவை.

திருக்கோயிலின் பெயர் ஆனிலை என்பது; கருவூர் ஆனிலை என்றே தேவாரம் கூறும். காமதேனுவாகிய பசு (ஆன்) பூசித்ததால் இப்பெயர் வந்ததென்பர். இதற்கு அறி குறியாக ஆலயத்து முன் கொடிக் கம்பத்தில் (துவிஜஸ்தம்பம்) ஒரு பசு ஒரு லிங்கத்திற்குப் பால் ஊட்டுகிறாற்போல வடி வம் அமைத்துள்ளதைக் காணலாம். இவ்வித வடிவங்கள் கொங்கு நாட்டில் பேரூர் முதலிய பல கோயில்களிலும் காணலாம்.

மூர்த்திகள் : மூலத்தானத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானின் திருநாமம் பசுபதீசர். ஆனிலை என்பதற்கேற்ப ஈசன் பெயர் பசுபதி ஆகும். பசு என்றால் உயிர், பதி என்றால் தலைவன். உயிர்களைக் காக்கும் இறைவன் என்பது பொருள். அம்மையார் அலங்காரவல்லி, சௌந்தரியவல்லி என்ற இரண்டு பெயர்களுடன் இரண்டு சந்நிதிகளில் இருக்கின்றார். உமையம்மையார் இந்தத் தலத்திற்கு வந்து சிவபூஜை செய்து என்றும் பிரியாவரம் பெற்றுப் பெருமானை அலங்கரித்ததினால் அலங்காரவல்லி அல்லது அலங்காரவதி என்று பெயர் பெற்றதாக ஐதீகம். ஒரு காலத்தில் இத்திருவுருவம் பின்னம் அடைந்ததினால் அரசன் வேறோர் திருவுருவம் செய்து தாபித்தான். ஆனாலும் இரண்டு உருவங்களும் நிலை நின்றன.

ஏனைய சந்நிதிகள் : திருக்கோயிலின் வெளிச் சுற்றில் கருவூர்த் தேவர் சந்நிதி இருக்கிறது. இத்தலத்தில் தான் திருவிசைப்பா அருளிச் செய்த கருவூர்த் தேவர் அவதரித்துப் பல அற்புதங்களைச் செய்து பசுபதீச்சரத்தில் ஒன்றியது. இவ்வரலாறு கருவூர்ப் புராணத்தில் 157 பாடலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கருவூர்த் தேவர் என்ற ஆராய்ச்சி நூலிலும் காண்க. மற்றும் புற்றிடங் கொண்ட ஆதிநாயகர் என்னும் பசுபதி லிங்கமும், அதன் கீழ்பால் கோடீசுரலிங்கமும், அதன் கீழ்பால் கயிலாசநாத லிங்கமும் அதன் தெற்கே கரியமாலீச லிங்கமும், அதற்குத் தென்கிழக்கே ஆற்றங்கரையில் வஞ்சுளேசுர லிங்கமும் உள்ளன. வஞ்சுளேசுரத்திற்குக் கிழக்கே திருமால் பள்ளிகொண்ட தலமும் அமராவதியும் மணி முத்தாறும் காவிரியும் கூடும் திருமுக்கூடலில் மணியீசர் என்ற இலிங்கமும் உண்டு. அடுத்த நெரூரில் சதாசிவப் பிரமத்தின் சமாதிக் கோயிலும் அதனை அடுத்து பிராமண விடுதிகளும் உண்டு.

தீர்த்தங்கள் : இத்தலத்தில் சிறந்த தீர்த்தம் ஆம்பிர நதி என்ற ஆன் பொருனை ஆறு. அவ்வாற்றிற்குக் கிழக்கே கோபிதார வனத்தில் முருக தீர்த்தமும், பதரி வனத்தின் மேற்கே

அரச தீர்த்தமும், ஆதி நாயக்கர் ஆலயத்தில் தாடகை தீர்த்தமும், வஞ்சுளேசுரத்திற்குக் கிழக்கே பிரம தீர்த்தமும் வெண்ணெய் மலையில் தேனு தீர்த்தமும் உள்ளன.

சுற்றுத் தலங்கள் : கருவூருக்கு வடமேற்கே மூன்று கல் தொலைவில் புன்செய் நிலங்களின் இடையில் வெண்ணெய் -மலை என்ற முருகக் கடவுள் சந்நிதி ஒன்றுண்டு. அது வெண் கல்லால் ஆகிய பாறையின் மேல் கட்டப்பட்டது. எத்தனை வெய்யிலிலும் பாறை வெண்ணெய் போல குளிர்ந்துள்ளது. இது காமதேனுவால் உண்டாக்கப்பட்டதென்பது ஐதீகம். இங்கே தேனு தீர்த்தம் உண்டு. இது திருப்புகழ் பெற்ற சன்னிதி. இது குன்று தோறாடலில் ஒன்று. சமீபத்தில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

பசுபதீச்சுரத்திற்குத் தென்கிழக்குத் திக்கில் ஆற்றோரமாகப் பதரி வனமுண்டு. இதற்கு வஞ்சுளாரணியம் என்று பெயர். வஞ்சி என்று சுருக்கிக் கூறுவார்கள். சில ஆராய்ச்சியாளர்கள் இதனையே சேரர் வஞ்சி என்பர். ஆற்றிற்குத் தென்கரையில் இரண்டு கல் தொலைவில் தான்றோன்றி மலை என்ற மலையில் குடைக் கோயிலில் பாறையிலேயே இயற்றப்பட்ட பெருமாள் திருவுருவமும் கோயிலும் உண்டு. இங்கே திருமணங்கள் மிகவும் நடை பெறுகின்றன. வேங்கடரமண சுவாமி என்பது பெருமாளின் திருநாமம்.

கருவூருக்குச் சிறிது தொலைவில் கட்டளை அணைக்கட்டிற்கு அருகில் சேர, சோழ, பாண்டிய நாடுகளின் எல்லை என்று சொல்லும் செல்லாண்டியம்மன் கோயில் இருக்கிறது.

ஐதீகங்கள்: கருவூருக்கு ஒரு செய்யுட் புராணம் உண்டு. ஆசிரியர் தெரியவில்லை. பல ஏடுகளைச் சோதித்து உரை நடை ஒன்றெழுதி திரு.வித்துவான் கந்தசாமி முதலியார் அவர்கள் அதனைப் பதிப்பித்திருக்கிறார்கள். ஆசிரியர் பெயர் தெரியாவிட்டாலும் அவர் சத்திய ஞானியார் மாணவர்

என்றும் இதனை சகம் 1540-ல் எழுதினார் என்றும் அந்நூலால் தெரிகிறது. நூலில் 21 சருக்கங்களும் 1129 பாடல்களும் உண்டு.

இவ்வூர் சோழமன்னர் முடிசூடும் நகரங்களில் ஒன்றாக இருந்தது. சூரசங்காரத்தின் பிறகு தெய்வானை அம்மையாரை முருகப் பெருமானுக்குத் திருமணம் செய்த காலத்தில் தேவேந்திரன் இவ்வூரில் ஆண்ட முசுகுந்தச் சக்கரவர்த்திக்குத் திருமுகம் அனுப்பியதாகக் கந்தபுராணம் கூறும். இங்கே புகழ்ச்சோழ நாயனார் அரசு செய்தார். எறிபத்தநாயனார் மழுவாயுதம் தாங்கி இடையூறு செய்தவர்களைத் தண்டித்தார். சிவகாமி யாண்டார் திருமலர்க் கூடையைச் சிதறின யானையை எறிபத்தர் வெட்டின இடம் இதுவே. மேலும் போரில் இறந்த வீரர்களின் தலைகளைக் கண்டகாலத்தில் ஒரு தலையில் சடை இருக்கக் கண்டு அதனை ஏந்திப்புகழ்ச் சோழர் தீப்பாய்ந்த ஊர் இதுவாம். இவ்வைதீகங்களைக் காட்டும் சிற்பங்கள் வெளித்தம்பத்தில் உள்ளன.

சரித்திரம் : இது மிகப் பண்டைத்தலம். இங்கே ஒரு புதையலில் உரோமானிய நாணயங்கள் கிடைத்தன. இருபது நூற்றாண்டுகளுக்கு முந்தி இங்கே பெரும் வாணிபம் மேற்கு நாடுகளோடு நடைபெற்றதுண்டு. அடுத்துள்ள ஆறு நாட்டார் மலையில் (புகலூருக்கு அடுத்தது) சமணப் படுக்கைகளும் பிராம்மி கல்வெட்டுகளும் இருக்கின்றன. இவ்வூர் கோயில் திருப்பணி செய்வதற்கு முந்தி எடுத்த கல்வெட்டுகளை அரசாங்கத்தார் பதிப்பித்திருக்கின்றனர். அவைகளில் சோழர் காலத்துக் கல்வெட்டுகளே உண்டு. ஒன்று கண்மாளருக்கு விருதுகள் தந்ததைக் குறிக்கின்றது.

கருவூர் புராணமும் சி.கே.சு முதலியார் எழுதிய கருவூர்த்தேவரும் அ.இராகவையங்கார் எழுதிய சேரர் பேரூர் என்ற நூலும் கருவூரின் சிறப்புக்களைக் கூறுகின்றன. மேலும் கருவூர்த் தேவாரம் சிறந்த முறையில் பண்டைக் கருவூரின் நிலையைக் காட்டுகிறது. அப்பதிகத்தின் ஒவ்வொரு

பாடலிலும் பசுவாகிய உயிர்களுக்குப் பதியாகுபவன் இறைவன் என்பதைக் குறிக்கின்றார். சம்பந்தர் 'தொண்டெலாம் மலர் தூவியேத்த' என்று பதிகம் தொடங்கும் சொற்களில் இங்கு எழுந்தருளிய சிவகாமி ஆண்டார் எறிபத்தநாயனார் சரிதச் செயல்களும் தொனிக்கின்றன அல்லவா?.

திருப்பாண்டிக் கொடுமுடி

இடம்: இத்தலம் இப்போது கொடுமுடி என்று வழங்கும். கோவை ஜில்லாவில் ஈரோடு தாலுக்காவில் ஈரோட்டுக்குத் தென்றிசையில் காவிரிக்கரையில் உள்ள ஓர் ஊர். ஈரோடு திருச்சி புகைவண்டிப் பாதையில் ஒரு நிலையம். ஈரோட்டிலிருந்து 24 கல்லில் உள்ளது. ஊரில் தங்குமிடம் உணவு வசதி முதலியவை உண்டு. ஊர் செழிப்பான நஞ்சை நிலங்களுக்கு இடையில் உள்ளது. சங்கர வித்தியாலயம் என்ற ஒரு உயர் தரப்பள்ளி இருக்கிறது. காவிரிக்கும் ஊருக்கும் இடையில் காளிங்கராயன் கால்வாய் என்ற பாசனக் கால்வாய் ஓடுகின்றது. இவ்வூரிலிருந்து காவிரிநதி கிழக்கே ஓடுகிறது. சிறிது தொலைவில் நொய்யலாறு காவிரியுடன் கலக்கிறது.

கோயில்: திருக்கோயில் கிழக்குப் பார்த்த சந்நிதி. பெரியது. கீழ்ப்புற மதிலில் மூன்று வாயிற் கோபுரங்கள் காணலாம். பெரிய கோபுரம் சுவாமி சந்நிதிக்கு எதிரில் உள்ளது. மற்ற இரண்டில் தெற்கே உள்ளது, பள்ளிகொண்ட அரங்கர் சந்நிதிக்கு எதிரே இருப்பது. இடையில் உள்ள சிறு வாயில் வன்னிமரத்தின் அடியில் உள்ள பிரம தேவர் சந்நிதிக்கு எதிரில் அமைந்தது. இம்மூன்று சந்நிதிகளையும் நோக்கிவிட்டு இத்தலத்தைத் திரிமூர்த்தித் தலம் என்பார் உண்டு. ஆனால் ஐதீகப்படி இது பெருமான் தலமாகும். மற்ற இருவரும் பெருமானை வழிபட வந்தவர்கள் என்பதே. சுவாமியின் திருநாமம் கொடுமுடி நாதர்; வடமொழியில் மகுடேசுவரர் என்பர். அம்மையின் திருநாமம் பண்மொழியம்மை; தலமரம் வன்னி ; தீர்த்தம் - காவிரி. இத்தலத்தின் தேவாரத்தினால்

இவ்வூரின் பண்டைப் பெயர் கறையூர் என்றும், கோயிலின் பெயர் கொடுமுடி என்றும் அறியலாம்.

வரலாறு: கோயில் பெரியது. சமீபத்தில் செதுக்கின கருங்கற்களால் நன்கு திருப்பணி செய்யப்பெற்றது. நகரத்தார்களுடைய திருப்பணி இந்தத் தலத்துப் பழமைச் சின்னங்களை அழித்துவிட்டதோடு நில்லாமல் பண்டைக் கல்வெட்டுக்களையும் அடியோடு தொலைத்துவிட்டது. இதைவிடக் கொடுமை வேறு என்ன உண்டு? திருப்பணிக் காலத்தில் மூலத்தானத்தைச் சோதித்த காலத்தில் பழைய எலும்புக் கூடுகளும், மதிப்புக்கடங்காத பொருள்களும் கிடைத்தன என்று கூறுவர். அவைகள் என்ன ஆயின என்று கூறுவார் இல்லை.

ஐதீகங்கள் : ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் உண்டான இகலில் மேருவின் ஒரு சிகரம் பறிபட்டு வீழ்ந்தபோது அதனின்றும் ஐந்து மணிகள் சிதறி வீழ்ந்து ஐந்து தலங்கள் ஆயினவாம். அவற்றுள் சிவப்புமணி திருவண்ணாமலையும், பச்சைமணி திருவீங்கோய் மலையும், மாணிக்கமணி திருவாட் போக்கி என்ற இரத்தின கிரியும், நீலம் திருப்பொதிகையும், வைரமணி திருக்கொடுமுடியும் ஆயின என்பதைச் செங்கோட்டுப் புராணமும், கொடுமுடிப் புராணமும் கூறும். அவ்வைரச் சிகரமே மகுடேசுவரராக இங்கு எழுந்தருளியிருக்கிறார் என்பர். இந்தத் தலம் வரைக்கும் தெற்கே சென்று கொண்டிருந்த காவிரி ஆறு இங்கு வந்ததும் கிழக்கே திரும்பினதற்குக் காரணம் அகத்தியர் காவிரியைக் கமண்டலத்தில் கொண்டிருக்கையில் இந்திரன் சீகாழியில் வைத்த நந்தவனத்திற்காக அதனைத் திருப்பும் பொருட்டு விநாயகக் கடவுள் காக்கையுரு எடுத்து அக்கமண்டலத்தைக் கவிழ்த்துக் கிழக்கே திருப்பியதால் என்பர். ஆற்றில் அகத்தியப்பாறை இருப்பதும், விநாயகர் பெயர் காவிரி கண்ட விநாயகர் என்றிருப்பதும் இங்கே அறியலாம். மேலும் கன்மாடன் என்ற வேதியனுக்கு வயிற்றிலிருந்த கறை போக்கி உய்வித்தபடியால் கறையூர் என்றும், அங்கவருத்தகன் என்ற

பாண்டிய அரசகுமாரன் அங்கங் குறை தீர்ந்த காரணத்தால் பாண்டி என்றும், பெயர்கள் வந்தன என்பது ஐதீகம். மேலும் இவ்வூரில் மலையம்மன் என்ற வாழவந்த அம்மன் கோயில் இருக்கிறது. அதுவே ஊர்த்தேவதை.

புராணம் : இவ்வூர்த்தல புராணம் பாயிரம் முதல் பரத்துவாசர் சருக்கம் வரை 12 சருக்கங்களும் 819 செய்யுள்களும் கொண்டது. அதனில் ஒரு பாகம் வித்துவான் கந்தசாமி முதலியாரும், மற்றொரு பாகம் சாமக்குளம் வேங்கிடரமணதாசரும் மற்றொரு பகுதி முந்தியவர் ஒருவராலும் பாடப்பட்டவை. அச்சாகி இருக்கிறது.

பாடல்கள் : இத்தலத்தைக் குறித்து மூவரும் பாடியிருக்கின்றனர். **'பாண்டிக் கொடிமுடியாரே'** என்று மூர்த்தியின் பெருமையைச் சம்பந்தரும், பரமனாருறை **'பாண்டிக் கொடுமுடி கருமமாகத் தொழுமட நெஞ்சமே'** என்றும்,

'திருக்கொடுமுடி யென்றலும் தீவினைக் கருக்கெடுமிது கை கண்ட யோகமே' என்றும் தலப் பெருமையை அப்பர் சுவாமிகளும், ''கிளர்புனற் காவிரி'' என்று தீர்த்தப் பெருமையினைச் சுந்தரமூர்த்திகளும் வற்புறுத்திப் பாடியது போற்றப்பட்டது. ''மற்றுப் பற்றென'' என்ற ஐந்தெழுத்துப் பதிகத்தை சுந்தர மூர்த்திகள், அருளிச் செய்த பெருமை கொண்டது. அதில் நான் மற்று எந்தப் பற்றுக் கோடும் இல்லேன் ஆதலினால் எப்போதும் உன்னையே மனம் பாவித்து நினைந்து உனது நாமத்தை ஏத்தக்கொண்டருள்வேன். ''நான் உன்னை மறப்பினும் எனது நா உன் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே இருக்கும்'' என்பதாம். மேலும் இந்நகருக்கு 'இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி இடர்கள் பட்டனைய புகுதற்கே'' என்ற திருப்புகழ் ஒன்று உண்டு.

அழகிய திருச்சிற்றம்பலம்.

கோவைக்கு அடுத்த திருப்பேரூரில் பட்டீசுவர -முடையார் கோயிலுக்கு வடகிழக்கில் தெப்பக்குளத்தி -லிருந்து அரசம்பலவாணர் சன்னிதிக்குச் செல்லும் ஒரு சந்துத்தடத்தில் அழகிய திருச்சிற்றம்பலம் என்ற ஆலயம் இருக்கின்றது. இவ்வாலயம் காலவேசுவரத்திற்குத் தென்கீழ்த் திசையில் உள்ளது. இது ஒரு புராதனமான கோயில். சில ஆண்டுகளுக்கு முந்தி இதனைக் கவனிப்பாரின்றி இடிந்து கிடந்தது. 1932-ம் ஆண்டில் எனது நண்பர் கோவை திரு.இ.ஓ.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இவ்வாலயத்தை, பழுதுபார்த்துப் புதுப்பித்தார்கள்.

இவ்வாலயத்தின் சிறப்பைப்பற்றி, திருப்பேரூர் புராணத்தில் கச்சியப்ப முனிவர் ''அழகிய திருச்சிற்றம்பலப் -படலம்' என்ற ஒரு படலத்தில் வருணித்திருக்கின்றார். அப்படலம் 17 விருத்தங்கள் கொண்டது. அதில்கண்ட வரலாற்றினால் இவ்வாலயம் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தில் தில்லைவாழ் அந்தணர்களால் தாபிக்கப்பெற்று வணங்கப்பெற்றது என அறியலாகும். ஆகவே இவ்வாலயம் தாபிக்கப்பெற்று 1100 ஆண்டுகள் ஆகின்றன எனலாம். இனி அப்புராண வரலாற்றை சுருக்கமாகக் கூறுவோம்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பேரூரைத் தரிசித்து விட்டுத் தில்லைக்குச் சென்று அங்கு திருச்சிற்றம்பலத்திலே நடராஜரை வணங்கிப்பாடின கோயில் திருப்பதிகத்தில், 'மீ கொங்கில் காஞ்சிவாய் பேரூரர் பெருமானைப் பெற்றாம்' என்று அருளிச்செய்ய, அதனைக்கேட்ட தில்லைவாழ் அந்தணர்கள் நாயனாரை நோக்கி 'இத்தில்லைத்தலம் போல் இவ்வுலகத்தில் வேறுசிறந்த தலம் உண்டோ! என்று வினவினார்கள். அதற்கு நாயனார், 'இக்கனக சபையில் தாண்டவம் செய்வது போலவே திருப்பேரூர்ச் சபையின் கண்ணும் சிவபெருமான் திருநடனம் செய்கின்றார். அத்தலத்தில் முத்தி தருவதன்றி தருமார்த்த காமங்களைத்

தருதலில்லை,‘ என்று கூறினார் உடனே தில்லைவாழ் அந்தணர்கள் மிகவும் மகிழ்ச்சியுற்று திருப்பேரூரை அடைந்து காஞ்சிமா நதியில் குளித்துச் சிவசின்னங்கள் தரித்துப் பட்டீசுவரத்தில் சுவாமியையும் அம்மையையும் வணங்கிப்பின் அரசம்பலவாணரைத் தரிசித்தார்கள். மறுநாள் காலவனீசுவரத்திற்குத் தென்கிழக்கிலே சிவலிங்கம் ஒன்றைத் தாபித்துப் பூஜித்து அருகே வசித்தார்கள். அப்பொழுது வெள்ளியம்பலத்திலே சிவபெருமான் திருநடனம் செய்ய அதனைத் தில்லைவாழ் அந்தணர்கள் தரிசித்து ஆன்மாவும் சிவமும் அத்துவிதமாய் மனம் அழிந்து அவசமாய் நின்று துதித்து விடைபெற்றுச் சோழநாடு சென்று கீழைச் சிதம்பரம் சேர்ந்து பண்டைக் காலம் போலவே வாழ்ந்தார்கள். இவ்விதம் தில்லைவாழ் அந்தணர்கள் பூசித்த ஆலயத்திற்கு அழகிய திருச்சிற்றம்பலம் என்று பெயர் ஏற்பட்டது. சுவாமிக்கு அழகிய திருச்சிற்றம்பலமுடையார் என்ற பெயர் வந்தது. கச்சியப்ப முனிவர், அதனை

அழகிய கீழைச் சிதம்பர வரைப்பின் அந்தணர்
பூசைகொண் டருள்வார்
அழகிய திருச்சிற் றம்பல முடையார் ஆதலினவர்கள் பூசிப்ப
அழகிய மேலைச் சிதம்பர வரைப்பின் அமர்ந்தரு ளமலநா யகர்க்கும்
அழகிய திருச்சிற் லம்பல முடையார் எனும்பெய ராயது மாதோ.

என்று அழகாகக் கூறியிருக்கின்றார். அழகிய திருச்சிற்றம்பலத்தைச் சுந்தரமூர்த்திகள் காலத்தில் தில்லைவாழ் அந்தணர்கள் தாபித்ததாகச் சொல்லும் வரலாறு பேரூர்ப் புராணத்தில் இருக்கின்றதே ஒழிய பெரிய புராணத்தில் காணவில்லை. ஆனால் இவ்வரலாற்றை பெரிய புராணத்தில் கூறவேண்டிய அவசியமும் இல்லை. என்றாலும் இவ்வாலயம் மிகப் பழைமை வாய்ந்தது என்பதற்கு இவ்வாலயத்து அடிச்சுவர்களில் உள்ள கல்வெட்டுகளே சான்று ஆகும். இக்கல்வெட்டுகளை அரசாங்கத்துப் பதிப்பாளர்கள் பிரதி எடுக்கவில்லை. இங்கே மொத்தம் 8 கல்வெட்டுகள் இருக்கின்றன. அவைகளில் 5 பூர்த்தியானவை. ஏனைய 3

கல்வெட்டுகள் மழுங்கிக் கிடக்கின்றன. அவைகளில் ஒன்று அரைகுறைவாக இருக்கின்றது.

வடசுவர் அடிப்பாகம்

1. ஸவஸ்தி ஸ்ரீ விக்ரம சோழ தேவர்க்கு
யாண்டுரு வது பேரூராளுடையார்
இடங்கை நாயகிய

2. டையார்க்கு திருப்புதியிதுப் புறமாக
வெ ஹமன ஒடி சடைய நாக்க
ளுமையி பால நென விட்டநல

3. இவ்வூர் இராஜாதித்தம் லசெம்பியன்
கிழா நட வதிக்கு கிழக்கு திரு
வானடை டவயக்கா யெக்கு

4. தெறக்கு கன்னாற்று உத்தரத்து என
மருட்டு ரு மநெ நிலங காணியும்
இத்தாவவத் தண்டு விழச்சிம

5. ற்றுமாள எநவ... கிளளொம்செ... வொண்
சக்கம்நாந பண்ணிக குடுத்தது இது சந்திரா

6. தித்தவரை செலவ தாவதாக இது பநமா கெஸ
வர ரக்ஷெ

மேற்குச்சுவர் (வடமேற்கு மூலை)

1. ஸவஸதிஸ்ரீ விகரம சோழ தேவற்கு யாண்டுரு எதிரசா (சிவ)
பாத சேகர சதுர வெதி மதுகலத்து ஸபையோமும்/
பரூ? ஊரொமும் இவ்வூ? ஆளு/
டையார் இடங்கை காஈஸ்வரமுடை/
யார்க்கு அமுதுபடி பபு றமாக பகுறா/
னம் பனனிநநுந வீரகேரளம்/

(2) விலாடகு/ லமணிக கவதிக்கு தெக்கு அதிராஜ ராஜ/.
வாக்காலுக்கு? உ க்கு சளுகவைப்/
ற்றுரு சபம மெதைப/
பைகதிகு அதிராஜராஜ வாயக/
காலுக்கு ஐச்சுஅரு ஊராவிட்ட
ருசலக்ஷஆகருதுக்கு இந்நிலம் நாலும்/

(3) ரமுககா/ ணிக்கும் கடமை எலவை வகவை பெருமா/
ளதிருக கொற்ற வாசலால போன கமுநூற்ற/
றுபது குடிமைப் பாடுகளு
ம சபை யோம் ஊரோராம இதும
பொப............. இயாமம்
வசக்கல வெட்டிக் குடுத்தோம் இதுப/

(4) பந்மா/? ஹஸவர ரஉக்ஷ ஆறு சமக்கட்டார ரரகைக்ஷ

3. தென்சுவர் - மேல்கல்.

(1) ற்குஇ/ அநான் கெல்லைக் குடபட
டநிலம் காணி புநி... கை/
யும் தெலி வெட்டிக்குடு/
ததென நங்கன பள்ளிகு/

(2) லப/ ரிபால நென சந்திராதித/
தவரை செலவதாக கல்
வெட்டிக் குடித்தென ஸ்ரீ/
மாயேசுர இககை ர கஉ/

4. கட்டியுள்ள சிறு உடைந்த கல்லில்

(1) து பெரூ ராளு யார்
(2) க நம்பலவ நாள் உலக/
(3) கண்ணுற்று எந் நிறை வலி/
(4) திருவிடைப டடத்.....
(5) ----- வகெல்லடை வாயட..

வெட்டுகளில் 5 கல்வெட்டுகள் விக்ரமசோழனுடைய காலத்தவை மற்ற மூன்றும் குறைவாக உள்ளபடியால் அரசன் பெயர் காணக் கூடவில்லை. 3, 4, 8 இலக்கங் கொண்ட கல்வெட்டுகளைக் கவனித்துப் பார்த்தால் அவைகளின் மற்ற பாகங்கள் வேறு கற்களில் பதிப்பிக்கப்பெற்று பின்னொரு நாளில் கட்டிடம் சிதலமாய்ப் போன காலத்தில் மறுபடியும் புதுப்பிக்கும் போது அக்கட்டடத்தில் சேர்க்கப் பெறாமல் விடுபட்டிருக்கலாம் எனலாம். இதை ஆராய்ந்தால் இவ்வாலயம் முன்னொரு காலத்தில் புதுப்பிக்கப் பெற்றிருக்க வேண்டும் என்று தெரிகிறது. மற்றொரு காரணமும் கூற முடியும். என்னவெனில் முன்னமே கல்வெட்டுகள் பொதிந்திருந்த வேறொரு ஆலயம் சிதலமாய்ப் போக அவ்வாலயக் கற்களை எடுத்து வந்து இக்கோயிலைக் கட்டியிருக்கலாம். அப்போது சில கல்வெட்டுக் கற்கள் விடுபட்டு இருக்கலாம். சிறிது ஊன்றி ஆராய்ந்து பார்த்தால் இக்காரணம் சரியானது அன்று எனச்சொல்ல முடியும். ஏனெனில் பூர்த்தியாக உள்ள கல்வெட்டுகளாகிய 1, 2, 5, 6, 7 இலக்கமிட்ட கல்வெட்டுகள் முதல் முதலாக வெட்டினவைகள்போல அமைந்திருக்கின்றன. ஆகவே இக்கல்வெட்டுகள் ஆரம்பத்திலேயே எழுதப்பெற்று பின்னால் ஆலயம், பழுதுபார்க்கப் பெற்றபோது சில கற்கள் வைக்கப்பெறாமல் தவறியிருக்கலாம். சமீபத்தில் பழுது பார்க்கப் பெற்ற போதும் கூட ஒருகல் மாறிவைக்கப்பெற்றது.

மேற்கூறிய 5 கல்வெட்டுகளில் ஒரு கல்வெட்டு விக்ரம சோழனுடைய இரண்டாவது ஆண்டிலும் இரண்டு கல்வெட்டுகள் மூன்றாவது ஆண்டிலும் இரண்டு கல்வெட்டுகள் 5-வது ஆண்டிலும் பதிக்கப் பெற்றிருக்கின்றன. விக்ரம சோழன் என்ற பெயருடைய கொங்கு சோழர்கள் மூவர் இருந்திருக்கின்றனர். விக்கிரம சோழன் I கி.பி.1004-1045ம் விக்ரமசோழன் II 1255-1263ம், விக்ரம சோழன் III 1273-1303 லும் ஆண்டிருக்கின்றனர். இவர்களில் விக்ரமசோழன் ஐ மிகவும் பிரக்கியாதி பெற்றவன்.

இவனுக்குக் கோனாட்டான், கலிமூர்க்கன், பரகேசரிவர்மன், திருச்சிற்றம்பலமுடையான், கோக்கலிமூர்க்கன் முதலிய பட்டப்பெயர்கள் உண்டு. அழகிய திருச்சிற்றம்பலத்தில் கண்ட விக்ரமசோழன் எவன் என்பதைப்பற்றி நிச்சயமாய்க் கூற ஆதாரங்கள் இல்லை. இருந்தாலும் கல்வெட்டுகளில் கண்ட சில எல்லைகள், பெயர்கள் இவைகளைக் கொண்டு அவ்வரசன் முதல் விக்ரமனாக இருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். ஆகவே இக்கல்வெட்டுகள், கி.பி. 1006 முதல்கொண்டு 1009 வரை ஏற்பட்டதாக ஊகிக்கலாம். இவைகளை ஆராய்ந்து பார்த்தால் சுந்தரமூர்த்திகள் காலமாகிய கி.பி.850-ல் தாபிக்கப் பெற்ற இச்சிறு ஆலயத்தின்மீது 1006-ல் கொங்கு சோழர்கள் கல்லினால் ஆலயம் நிருமித்து அதற்குப் பற்பல தானங்கள் கொடுத்திருக்கலாம் என்று நாம் ஊகிக்கமுடியும்.

இக்கல்வெட்டுகளில் தானம் செய்ய நிலங்களை விவரிக்கும்போது அவைகளின் எல்லைகளைக் குறித்து உள்ளார்கள். அப்பெயர்கள் ஆராயத்தக்கவையாக இருக்கின்றன. அவைகளாவன இராசாதித்தமல செம்பியன் கிழான் அடிவதி, திருவானிடை வாய்க்கால், கண்ணூற்று, வீரகேரள விலாடகுல மாணிக்கவதி, அதிராஜராஜ வாய்க்கால் என்பவைகள். இவைகள் பெரும் பாதைகளின் பெயர்களாகவும், வாய்க்கால்களின் பெயர்களாகவும், ஊற்றின் பெயர்களாகவும், இருக்கின்றன. இவைகளால் அக்காலத்தில் இந்நாடு இருந்த செழிப்பினை நாம் அறியக்கூடும். 2, 6 கல்வெட்டுகளில் சிவபாதசேகர சதுர்வேதி மங்கலத்துச்சபையார் செய்த தானங்களை பதிப்பித்திருக்கின்றார்கள். 2-வது கல்வெட்டில் பேரூர் ஊராரும் சேர்ந்திருக்கின்றனர். அச்சபையார்கள் இடங்கை நாயக ஈஸ்வரமுடையார்க்கு அமுதுபடி முதலிய நித்தியங்களுக்கு ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்கள். மேலும் 2,6 கல்வெட்டுகளில் குடிமைப்பாடு, கடமை, எலவை, அகவை, பெருமாள் திருக்குற்றவாசலால் போனகம், 360

குடிமைப்பாடுகள் முதலான வரிப்பெயர்களைக் காண்கிறோம். இப்பெயர்களால் அக்காலத்தில் இருந்த வரி வட்டங்களை அறியலாம். வீரசமக்கள், அம்மணங்காரன், சேனாபதிகள் முதலான கோயில் அதிகாரிகளின் பெயர்களும் காணப்படுகின்றன. கல்வெட்டுகளின் இறுதியில் இரகைஷ கூறும்போது பன்மாகேசுரர் இரகைஷ, ஆறுசமக் கட்டார் ரகைஷ என்ற பதங்கள் காணப்படுகின்றன. இவைகளில் ஆறுசமக் கட்டார் என்ற பெயரின் பொருள் விளங்கவில்லை. அதிகாரம்பெற்ற ஒரு கூட்டத்தாருடைய பெயராக அது இருக்கலாம். இவ்விதம் பல பொருள்களை இவ்வாலயக் கல்வெட்டுகளிலிருந்து அறியக்கூடும்.

சேரர் தலைமையூர்.

சேரர் தலைமையூர் கொடுங்கோளூர் என்கிறார் சேக்கிழார். அதனை, கழறிற்றறிவார் புராணத்தில் நான்கு செய்யுள்களால் வருணித்திருக்கின்றார். அது பொருட் -செல்வமும் கல்விச் செல்வமும் நிறைந்த பழைய ஊர் என்றும், ஈசன் வீற்றிருக்கும் திருவஞ்சைக்களத்தை நிலைக்கப் பெற்றதென்றும், சேரர் அரசு செலுத்தியதென்றும் கூறுகிறார். படிக்கும் ஒலி, யானையின் ஒலி, சோலைவண்டிகள் ஒலி, குதிரையின் ஒலி, பாடல் ஆடல் முடிவு இவைகளின் ஒலி இவைகள் எல்லாம் கூடி கடலின் ஒலியை விழுங்கிவிடுவாம். மனைகளில் செல்வம் நிறைந்து அதனால் இன்பமும், சாலைகள் எங்கும் ஏற்பட்டு அறங்கள் வழங்கவும், அன்பர் மடங்களில் சைவ மெய்ம்மையும் வளம் பொருந்திய இடங்களில் நிதிக்குவியல்களும் இருப்பன. வேதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்கமும் அதை அனு சரித்த நான்கு சாதிகள் தழைத்து வந்தனர். சோலை நிரம்பியதும் கோட்டை உள்ளதுமான அந்நகரை மகோதை எனவும் வழங்குவார்கள்.

சேக்கிழார் கூறும் இவ்வருணனையினால் இத்தலை நகருக்கு கொடுங்கோளூர், மகோதை என்ற இரண்டு பெயர்கள் உண்டென்றும் அதில் சோலைகள் நிரம்பிய -தென்றும் கோட்டை உண்டென்றும் கடற்கரையிலுள்ள -தென்றும் அதன் ஒருபாகத்தில் திருவஞ்சைக்களத்து ஆலயம் உண்டென்றும் மிகுந்த செல்வம் வாய்ந்ததென்று பண்டைய வைதீகம் கொண்டதென்றும் அறிகிறோம். இப்போதும் இவைகள் எல்லாம் சிறந்திருப்பதை அறியலாம்.

சுந்தரமூர்த்திகள் அருளிச்செய்த திருவஞ்சைக் களத்துப் பதிகத்தில் அவ்வூரைப் பற்றிய வருணனை ஒவ்வொரு செய்யுளிலும் இருக்கின்றது. மலை ஒக்கும் திரைகள் வலம் புரிச்சங்குகளை ஒதுக்கும் கடற்கரையில் உள்ள மகோதை என்றும், உரவம், சங்கம், சிப்பி, முத்து, வாம்புரி இவைகளைத்

தள்ளும் கடற்கரைமேல் மகோதை என்றும், நிதியும் பல மரக்கலங்களில் கொண்டு செல்லும் கடற்கரைமேல் மகோதை என்றும் கூறுகின்றார். அஞ்சைக்களத்தப்பனைக் கூறுகையில் மகோதை அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பன் என்கிறார். அதாவது மகோதைப் பட்டினத்தில் அழகிய பொழில் சூழ்ந்த அஞ்சைக்களத்தில் எழுந்தருளியிருக்கும் அப்பன் என்கிறார். மலையாள நாட்டில் ஈசுவரனை அப்பன் என்று சொல்வது தற்காலத்திலும் உண்டு. திருவஞ்சைக்களத்து அப்பன், குருவாயூர் அப்பன் என்ற பெயர்கள் வழக்கத்தில் இருக்கின்றன. இவ்வூருக்கு கொடுங்கோளூர் மகோதை என்ற இருபெயர்களே தவிர வஞ்சி என்ற பெயரும் உண்டு. வெள்ளானைச் சருக்கம் 22 செய்யுளில் 'மதிதங்கிய மஞ்சணி இஞ்சி வஞ்சி மணிவாயில்' என்றதில் இந்நகருக்கு வஞ்சி என்று பெயர் கூறியிருக்கிறார். வஞ்சி என்ற பெயர் சிலப்பதிகாரம் சங்க நூல்கள் இவைகளில் காணலாம். ஆனால் வஞ்சி என்பது கொங்கு கருவூர் என்று சிலர் கூறுவதுண்டு. இது பொருத்தமுடையதல்ல. அஞ்சைக்களம், வஞ்சி என்ற இரண்டும் ஒருபெயர் ஆகாது. வேறு வேறு பதங்களிலிருந்து வந்திருக்கக் கூடும். அவை எவை?

மகோதையபுரத்தைப்பற்றி கீ.இராம வர்ம ராஜா அவர்கள் Mythic Journal Vol XIX ல் P. 93 ல் ஒரு வியாசம் எழுதியிருக்கின்றார். அதில் கொடுங்கோளூருக்கு மகோதயபுரம் என்று ஒரு பெயர் இருந்ததென்றும் அது உதயம் என்ற பெயரிலிருந்து வந்ததாகவும் கூறுகிறார். அது துறைமுகப்பட்டினமாக கிறிஸ்தாப்தத்திற்கு முந்தியே இருந்து உரோமானியருடன் வியாபாரம் செய்து வந்தது. அங்கே முசிறி என்ற துறைமுகம் இருந்தது. அங்கே அகஸ்தஸ் என்பவனுடைய கோயில் இருந்தது என்றும் கண்டிருக்கிறது. வஞ்சி திருவஞ்சைக்களம் என்றும் கரூர் என்பது பெரியாற்றின் மீது 28 மைலுக்கு கிழக்கே உள்ள திரிகரூர் அல்லது 5 மைல் வடக்கே உள்ள கருவப்படன என்றும் கூறுவர். கொடுங் கோளூர் என்றது கொடிய கோள் அல்லது உற்பாதம் நடந்த ஊர் என்று சொல்லப்படுகிறது. கண்ணகி இங்கு தன்கணவன்

இறந்தபிறகு வந்து விண் அடைந்ததினால் இப்பெயர் வந்ததாம். இங்கு இருக்கும் பகவதியே கண்ணகி என்பார்கள்.

உதய என்ற பெயரோடு கூடிய ஊர்கள் பல கேரள நாட்டில் உண்டு. உதயம் பேரூர், உதயணபுரம், உதயதும் வாதுகல் உதய மங்கலம் முதலியன. 451 கி.மு. ல் கனோஜில் ஆண்ட உதயணன் பெயரால் இப்பெயர் வந்ததோ என சந்தேகிப்பர்.

ஆனால் உதயர் என்பது சேரர் பெயர். சேரமானுக்கு உதயர் கோமான் என்று பெயர் உண்டு. வெள்ளானைச் சருக்கத்தில் உதயர் பெருமான் (செ-22) உதியர்கள் தலைவர் (செ-27) எனக் காணலாம். இவரை வானவர் தலைவர் மலையர்கள் தலைவர் என்றும் கூறுகிறார் (செ-25, 26) ஆகவே உதியர் என்ற பதத்திலிருந்து மகோதியர் என்றாகி மகோதை என்றாகியிருக்கலாம். சேரமான் பெருமான் பெயர் பெருமாக் கோதையார். இப்போதும் கொடுங்கோளூர் அரசபரம்பரையில் 'கோதவர்ம' என்ற பெயர் உண்டு. கோதை என்ற பெயரிலிருந்து மகோதை என்ற பெயர் வந்திருக்கலாம்.

''கோதை அரசர் மகோதை எனக் குலவு பெயரும்''

(சே.கழறிற்றறிவார்)

என்பதில் காரணம் காண்க. மேலும் மகோதைய புரத்தை மகாதேவர்புரம் என்று சொல்வாரும் உண்டு. அதுசரி அல்ல என்பது தெளிவு.

மகோதையபுரம் என்றபெயர் சுகசந்தேசம், கோகில சந்தேசம் என்ற இரண்டு வடமொழி நூல்களில் கூறப்பட்டுள்ளது. இவை கிளி விடுதூது, குயில் விடுதூது என்ற பிரபந்தங்கள், முதல் நூல் இராமேசுவரத்திலிருந்து திருக்கண்ண மதிலகம் என்ற ஊருக்கு கிளியைத் தூது விடுத்ததை வருணிக்கும். திருக்கண்ண மதிலகம் கொடுங்கோளூருக்கு 6 கல் வடக்கிலிருப்பது. ஆகவே கிளி கொடுங்கோளூரைத் தாண்டிச் செல்லவந்தது. ஆகவே அவ்வூர் வருணனை

வந்தது. இரண்டாவது நூலில் குயில் காஞ்சீபுரத்தைவிட்டு சென்ன மங்கலத்துக்குத் தூது சென்றது. சென்னமங்கலம் கொடுங்கோளூருக்கு தெற்கே 4, 5 மைலில் உள்ளது. ஆகவே கொடுங்கோளூரைக் கடக்கநேரிடும், அப்போது அவ்வூரை வருணிக்க நேரிட்டது. இவ்வகையில் இவ்வூரின் பெயர் மகோதயபுரம் என்று சொல்ல நேரிட்டது. ஒரு சுலோகத்தில் (I நெ 68) அவ்வூர் அரசன் இராஜராஜன் என்று கண்டிருக்கிறது. இப்பெயர் ஏனைய கேரளத்தை ஜெயித்த இராஜராஜ I ஆக இருக்கலாம் என்று இராமவர்ம ராஜா சொல்லுகிறார்.

சிரியன் கிறிஸ்தவர் சாசனத்திலும் மகோதபட்டணம் என்று கண்டிருக்கிறது. தேவி பாகவதத்தில் மாகோதி முகதேஸ்வரி என்ற பெயர் இருக்கிறது. இப்பெயர் பகவதியின் பெயராக இருக்கலாம்.

திருவஞ்சைக்களத்துக்கருகில் வட்டெழுத்துச் சாசனம் கொண்ட ஒரு பலகைக்கல் சமீபத்தில் கிடைத்தது. இப்பிராந்தியத்தில் 6 சிவாலயங்களும் 3 விஷ்ணு ஆலயங்களும் உண்டு. இவைகளுக்கு போதியதானங்கள் விடப்பட்டிருக்கின்றன.

குன்றுதோறாடல் – கிணற்றுக்கடவு பொன்மலை.

இம்மலை முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் குன்றுகளில் ஒன்று. இது கொங்கு நாட்டில் வாரக்கா நாடு என்ற உட்பிரிவில் உள்ளது. கோவையிலிருந்து பொள்ளாச்சி போகும் பாதையில் 12 மைலில் பாதைக்கடுத்த மேற்புரத்தில் இருக்கின்றது. பாதைக்குக் கிழபுறமாக இருப்பது கிணற்றுக்கடவு என்னும் ஊர். இவ்வூர் போத்தனூர் பொள்ளாச்சி இருப்புப் பாதையில் ஒரு கெடித்தலமாக இருக்கின்றது. இவ்வூரைச் சுற்றிலும் நீர்வடிகால்கள் ஓடும்படியான நிலங்கள் உண்டு. தென்னை முதலிய மரங்கள் செழிப்பாக வளரும். மழைக்காலங்களில் கிணறுகளிலிருந்து நீர் பெருகி வடிந்து ஓடும். ஊற்று கிணற்றிலிருந்து கடந்து ஒடுகிறபடியினால் இவ்வூருக்கு கிணற்றுக்கடவு என்ற பெயர் வந்தது.

கிணற்றுக்கடவு மலைக்கு பொன்மலை என்று பெயர் வழங்கி வருகிறது. இதனை வடமொழியில் கனகமலை என்பார்கள். மலையானது சிறியது. நிலமட்டத்திற்கு 150 அடி உயரம் இருக்கும். ஒரே பாறையாக அமைந்திருக்கிறது. ஏறுவதற்கு படிகள் செதுக்கி இருக்கின்றார்கள். மேலே இருக்கும் ஆலயம் சிறியது தான். ஆலயத்திற்கு அருகில் ஒரு சிறு சுனை உண்டு. வெகுகாலமாக புரவிப்பாளையம் பாளையக்காரர்கள் இவ்வாலயத்தைப் பரிபாலித்து வருகிறார்கள். மைசூர் மன்னர்கள் காலத்தில் இவ்வாலயத்திற்கு மானியங்களும் செப்பேட்டுப் பட்டயங்களும் கொடுத்திருக்கின்றார்கள். இவ்வூரில் கூடும் சந்தையில் விற்கும் சரக்குகளின் மீது வரிபோட்டு அந்த வரியை ஆலய பரிபாலனத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று அந்நாட்டு குடியானவர்கள் தீர்மானித்து குருக்களுக்குப் பட்டயம் செய்து மைசூர் அரசர்கள் காலத்தில் செப்பேடு வெட்டிக் கொடுத்திருக்கின்றார்கள்.

இக்குன்றை குன்றுதோறாடல்களில் ஒன்றாகக் கொண்டு அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியிருக்கின்றார்கள். அத்திருப்புகழ் வருமாறு:

அரிவையர்கள் தொடரு மின்பத்
துலகுநெறி மிகம ருண்டிட்
டசடனென மனது நொந்திட் - டயராமல்
அநுதினமு முவகை மிஞ்சிச்
சுகநெறியை விழைவு கொண்டிட்
டவநெறியின் விழையு மொன்றைத் - தவிர்வேனோ
பரிதிமதி நிறைய நின்றஃ
தெனவொளிரு முனது துங்கப்
படிவமுக மவைகள் கண்டுற் - றகமேவும்
படர்கள்முழு வதும கன்றுட்
பரிவினொடு துதிபு கன்றெற்
பதயுகள மிசைவ ணங்கற் - கருள்வாயே
செருவிலகு மசுரர் மங்கக்
குலகிரிகள் நடுந டுங்கச்
சிலுசிலென வலைகு லுங்கத் - திடமான
செயமுதவு மலர்பொ ருங்கைத்
தலமிலகு மயில்கொ ளுஞ்சத்
தியைவிடுதல் புரியு முன்பிற் - குழகோனே
கருணைபொழி கிருபை முந்தப்
பரிவினொடு கவுரி கொஞ்சக்
கலகலென வருக டம்பத் - திருமார்பா
கரிமுகவர் தமைய னென்றுற்
றிடுமிளைய குமர பண்பிற்
கநககிரி யிலகு கந்தப் - பெருமாளே.

இம்மலையில் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணிய -மூர்த்தி மிகவும் உக்கிரமான மூர்த்தியாக இருந்ததாம். அக்காலத்தில் இரவில் மலையின் மீது ஆலயத்தில் எவரும் தங்கமாட்டார்கள். ஏனெனில் இரவுகளில் வெடி முதலிய சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தனவாம். ஆகவே இரவில்

ஆலயத்தில் தங்குவதற்கு எவரும் அஞ்சுவார்களாம். ஆங்கில அரசாட்சி ஏற்பட்ட உடன்பத்தில் ஒரு தாசில்தார் ஜனங்கள் பேசின பேச்சை நம்பாமல் இரவில் அவ்வாலயத்தில் தங்கினாராம். நடுராத்திரியில் பயங்கரமான காக்ஷிகளையும் சத்தங்களையும் அனுபவித்து பயத்தினால் உயிர் விட்டாராம். அந்த தாசில்தாருடைய தகப்பனார் ஒரு மந்திரவாதி. தன் மகன் உயிர் துறந்ததை அறிந்து அவர் உடனே ஆலயத்திற்குச் சென்று தன் மந்திர சக்தியால் அம்மூர்த்தியின் உக்கிரத்தை அடக்கி இனி சாந்தமாய் இரு என்று சொல்லிப்போனாராம். அதுமுதல் அம்மூர்த்தி சாந்தமாகி விட்டதாம். அம்மூர்த்தியின் கீழ் பிரதிஷ்டித்திருந்த யந்திரத்தை அவர் எடுத்துவிட்டதினால் அம்மூர்த்தியின் வலிமை போய்விட்டதென்றும் சொல்லுகிறார்கள். பிற்காலத்தில் திருடரும் கூட சாந்தமாய்ப் போய்விட்ட மூர்த்தியின் கீழ் வைத்திருந்த பொன், வெள்ளி, இரத்தினம் முதலியவைகளை எடுத்துச் சென்றதாகவும் கேள்வி. கி.பி. *1884* ஆண்டு அளவில் கோவை வித்வான் கந்தசாமி முதலியார் அவர்கள் திருப்பேரூர் பச்சைநாயகி அம்மன் சன்னிதியைப் புதுப்பித்தார்கள். அப்போது அதற்கு அருகில் பின்னால் இருந்த சுப்பிரமணியர், விசுவேஸ்வரர், விசாலாக்ஷி அம்மை இம்மூவரின் சிறு ஆலயங்களைப் பழுது பார்த்தார்கள். அப்போது முன்னிருந்த வரிசையை மாற்றி சோமாஸ்கந்த மூர்த்தம் போன்று சுவாமி, சுப்பிரமணியர், அம்மன் என்ற வரிசையில் அமைத்து பிரதிஷ்டை செய்தார்கள். அவ்விதம் செய்ய உத்தேசித்தபோது சுப்பிரமணிய சிலை உடைந்து இருந்ததைக் கண்டார்கள். அதனை நொய்யல் ஆற்றின் கரையில் கரிகால் சோழன் துறைக்கருகில் அரசமரத்தின் கீழ் வைத்து விட்டார்கள். அது இப்பொழுதும் அங்கே இருக்கின்றது. பிறகு ஒரு நல்ல சிலை செய்வதற்காக கிணற்றுக்கடவிற்குச் சென்றார்கள். அப்போது சென்றவர்கள் வித்வான் கந்தசாமி முதலியாரும் குனியமுத்தூர் கருணீகர் கருப்பண்ண பிள்ளை அவர்களும் ஆவார்கள். அவ்விருவரும் அவ்வூர்க் குடியானவர்களுடன் பொன்மலை ஆலயத்தில் வீற்றிருக்கும் போது மேலே சொல்லிய சரிதத்தைக்

கேட்டார்கள். அதனைக்கேட்டவுடன் கருப்பண்ண பிள்ளை அவர்கள் 'சாந்தம் கலிக்குத வாது பொன் மாமலைச் சண்முகனே' என்று ஒரு அடி எடுத்துச் சொன்னார்கள். அதனைக் கேட்டவுடனே வித்வான் கந்தசாமி முதலியார் அவர்கள் மற்ற மூன்று அடிகளையும் எடுத்துப்பாடி கட்டளைக் கலித்துறையைப் பூர்த்தி செய்தார்கள். அம்மூன்றடிகள் வருமாறு:

'வேந்தரும் நீசர் களாயினர் மண்ணின் மிசைவளரும்
மாந்தரும் அவ்வழி மேயினர் நின்றன் வளம்பொருள்கள்
ஆந்துணைக் காத்திங் களிக்க வொராளிலை ஆதலினால்''

என்று சொல்லி அவ்வடிகளோடு நான்காம் அடியை

''சாந்தம் கலிக்குத வாதுபொன் மாமலைச் சண்முகனே''

என்று சேர்த்தி முடிவு செய்தார்கள். இவ்விரு புலவர்களும் சமயோசிதமாகப் பாடியதை நமது நண்பர்கள் அறிந்து மகிழலாம். இதனைப் பாடிய கந்தசாமி முதலியார் அவர்கள் திரு.இ.ஓ.சுப்பிரமணிய முதலியார் அவர்களுடைய பிதா என்று நண்பர்கள் அறிவார்களாக.

குன்றுதோறாடல். மருதமலை.

முருகக்கடவுளின் திவ்யமலைகளில் ஒன்றாகிய மருதமலை மேற்குத்தொடர்ச்சி மலைகளில் கோவைக்கு வடமேற்கில் 7 1/2 மைலில் உள்ளதோர் அழகிய மலையாகும். இம்மலையின் ஆலயம் வெகு புராதனமானது. கல்வெட்டுகளின் ஆதரவால் இவ்வாலயம் 12-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியே பேர் பெற்றிருந்தது என அறியலாம். அக்கல்வெட்டுகளைத் தவிர இம்மலையைப் பற்றிய பிரபந்தங்கள் பல உண்டு. 15-வது நூற்றாண்டில் புகழ்பெற்று விளங்கிய அருணகிரிநாத சுவாமிகள் முருகக்கடவுளின் பல தலங்களும் தரிசித்து திருப்புகழ் பாடிச்சென்ற காலத்தில் கொங்குநாட்டுத் தலயாத்திரையில் இம்மலை ஆலயத்தையும் தரிசித்து அங்கு எழுந்தருளியிருக்கும் மருதாசலக் கடவுளின் மீது திருப்புகழ் ஒன்று அருளிச் செய்திருக்கின்றார். அத்திருப்புகழ் வருமாறு:

திரிபுர மதனை யொருநொடி யதனி
லெரிசெய்த ருளிய - சிவன்வாழ்வே
சினமுடை யசுரர் மனமது வெருவ
மயிலது முடுகி - விடுவோனே
பருவரை யதனை யுருவிட எறியு
மறுமுக முடைய - வடிவேலா
பசலையொ டணையு மிளமுலை மகளை
மதன்விடு பகழி - தொடலாமோ
கரிதிரு முகமு மிடமுடை வயிறு
முடையவர் பிறகு - வருவோனே
கனதன முடைய குறவர்த மகளை
கருணையொ டணையு - மணிமார்பா
அரவணை துயிலு மரிதிரு மருக
அவனியு முழுது - முடையோனே
அடியவர் வினையு மமரர்கள் துயரு
மறஅரு ளுதவு - பெருமாளே.

இத்திருப்புகழ் மருதமலையினுடைய திருப்புகழ் என்று அறிய முடியாதபடி பாடபேதம் கண்டபடியால் சில பதிப்பாசிரியர்கள் பொதுத் திருப்புகழாகக்கொண்டு ‘அவனிய முழுதுமுடையோனே’ என்று பதிப்பித்திருக்கிறார்கள். சமீபத்தில் வெளிவந்த காஞ்சி நாகலிங்க முனிவர் பதிப்பில் **‘அணி செயு மருத மலையோனே’** என்ற பாடங்கண்டு திருத்தமாகப் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது.

மேலும் இந்த கிரியைப்பற்றிய ஏனைய பிரபந்தங்கள் அடியில் கண்டவை:

1. திருப்பேரூர்ப் புராணம் 1. அபயப்படலம்

- கச்சியப்ப முனிவர்

மருதவரைப் படலம்

2. திருத்துடிசைப் புராணம் - -
3. மருதாசலமூர்த்தி சதகம் - -
4. மருதாசலபதி தாய்மகளேசல் - -
5. மருதமலைத் துதிப்பாக்கள் - -
6. மருதாசலபதி உயிர்வருக்கமாலை -

- கந்தசாமி முதலியார்

7. மருதமலைக் குமரேசர் சந்தப் ஸ்ரீ பதிகம்

- தண்டபாணி சுவாமிகள்

8. மருதாசலக்கடவுள் பிள்ளைத் தமிழ்

- வித்வான் அருணாசலக் கவிராயர்

9.மருதாசலக்கடவுள் அலங்காரம்

- ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்

1. அலங்காரம் 2. யமக அந்தாதி 3. சந்தப் பதிகம்

10. 1. மருதாசலப் பிள்ளைத் தமிழ் -

விளாங்குறிச்சி நா. மருதாசலக் கவுண்டர்

2. மருதீசர் நவரச வண்ணத் திருப்புகழ்

3. மருதாசலக் குமரேசர் திருப்புகழ்

4.மருதாசலச் சந்தப்பதிகம்

11. 1. மருதமலை வானவில் காட்சி (கோவைகிழார்)

2. மருதமலை அம்மானை

3. மருதமலை வெண்பா.

மருதமலையைப் பற்றிய கல்வெட்டுகள்.

மருதமலை என்ற திருத்தலம் கோவைக்கு வடமேற்கில் குன்றுதோறாடல்களில் ஒன்றாய் முருகக் கடவுளின் ஒரு புனிதத் தலமாகும். இது மேற்குமலைத் தொடரில் சமநிலத்திற்குச் சுமார் 500 அடி உயர்ந்த ஒரு அழகிய சிறு சமநிலத்தில் ஏற்பட்டுள்ளது. அங்கே மருத தீர்த்தம் என்ற திவ்விய தீர்த்தம் ஒன்று மருத மரத்தடியில் உள்ளது. அருகில் உள்ள முருகக் கடவுளின் ஆலயம் மிகச் சிறந்து விளங்குகிறது. இதில் எழுந்தருளியிருக்கும் தண்டபாணியாகிய முருகக் கடவுளை வழிபாடு செய்யாதவர் அனேகமாய் இந்நாட்டில் இரார். அடிவாரத்தில் உள்ள தான்றோன்றிப் பிள்ளையாரது அழகிய இயற்கை அமைப்பு வேறெங்கும் காண்பதரிது. மிகத் திவ்வியத் தலமாகிய இம்மலையின் பெயரை இந்நாட்டுமக்கள் இட்டுக் கொள்வது ஒரு வியப்பல்ல. கொங்கு நாட்டில் மருதமலைக் கவுண்டன், மருதாசலம் பிள்ளை முதலிய பெயர்கள் எங்கும் பரவி இருக்கக் காணலாம். பழனியப்பன், பழனிமலை என்ற பேர்கள் எவ்வளவு அதிகமாக வழங்குகின்றதோ அவ்விதம் மருதமலையும் வழங்குகிறது.

இத்திவ்வியத்தலம் மிகப் பழைமை வாய்ந்தது எனலாம். ஆனால் அதன் சரித்திரம் கிடையாதது மிகவும் வருந்தத்தக்கது. மலைமீதுள்ள அழகிய ஆலயத்தில் கல்வெட்டுகள் கிடையா. தலத்துக்கு அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியிருக்கிறார். தலத்தைப்பற்றிய தனிப்புராணம் இல்லை. ஆனால் கச்சியப்ப முனிவர் அருளின திருப்பேரூர்ப் புராணத்தில் இம்மலையைப் பற்றி இரண்டு படலங்கள் இருக்கின்றன. இதன் வடமொழி மூலநூல் இதற்குச் சில நூற்றாண்டுகள் முந்தியதாகலாம். இவற்றின் விரிவை அறியவேண்டுமானால் மருதமலை மான்மியம் என்ற நூலில் காணலாம். பேரூர் புராணமோ 150

ஆண்டுகளுக்கு முன் தான் எழுதப் பெற்றது. ஆகவே சுமார் 300 வருடங்களுக்கு முந்திய சரிதம் கிடைக்காமல் இருக்கிறோம். பேரூர்ப் புராணத்தில் இத்தலம் மிகப் பழமையானதாயும் இதில் தேவர்கள் தவம் செய்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் இம்மலையின் பெயரை மக்கள் வெகுகாலத்திலிருந்து தமக்கு இட்டுவந்தனர் என்பதற்கு இந்நாட்டு வழக்கமே அத்தாட்சியாகும். மக்கள் இம்மலையின் பெயரைத் தமக்கு இட்டுக்கொண்ட ஒரு வழக்கம் 12-ம் நூற்றாண்டிலும் இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே அந்த நூற்றாண்டிலேயே இம்மலையில் எழுந்தருளியிருந்த முருகக் கடவுளின் ஆலயம் சிறந்து விளங்கி இருக்கவேண்டும் என்று தெரிகிறது. இந்தக் கூற்றுக்கு இப்போது கிடைத்துள்ள ஆதாரங்கள் எவையெனில் இம்மலைக்குக் கிழக்கே 32 நாழிகை அளவில் உள்ள பாடல்பெற்ற தலமாகிய திருமுருகன் பூண்டி ஆலயத்தில் உள்ள இரண்டு கல்வெட்டுகளே ஆகும். இக்கல்வெட்டுகள் அடியில் கண்டபடி உள்ளன.

No.249

(A. R. No. 573 of 1893)

1. ஸ ஸரி ஸ்ரீ (:11) திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீ குலொத் வ த

துங்க சொழதெவர்க்கு யாண்டு எட்டாவது பெருமாள் சாமந்தரில் மருதன்மலையநாந குலொத்துங்க சொழ விக்கிரமாதித்த தெவனென் ஆழுடையார் திருமுருகன் பூண்டியாண்டாற்கு சந்தியா திபம் ஒன்றுக்கு ஒடுக்

2. கின பழஞ்சலாகை அச்சு ஒன்றின் உபயங் கொண்டு சன்தியாதிப(ம்) மொன்றும் சன்திராதித்தவற் செல்வதாக இது பன்மாஹஸஸஸவகைஷ.

No.250.

(A. R. No. 574 of 1893)

1. ஸ ஸி ஸ்ரீ திரிபுவனச் சக்ரவத்திகள் சிரிகுலொத்துங்க சொழ வத தெவற்க்கு யாண்டு எட்டாவது பெருமாள் சாமந்தரில் **மருதன்மலையனான** குலோத்துங்க சொழ விக்கிரமாதித்த தெவநெந் ஆளுடை யார் திருக்குரக்குத் தளியாண்டாற்கு சந்தியாதிப மொன்றுக்கு ஒடுக்கின பழஞ்ச.

2. லாகை ஒன்றி நுபையங்கொண்டு சந்தியாதிப மொன்றும் சந்திராதித்தவற் செல்வதாக இது பந்மா கெசுர ரக்ஷெ.

இக்கல்வெட்டுகளினால் குலோத்துங்க சோழ தேவனது *8*-ம் ஆண்டில் அம்மன்னனுடைய சாமந்தரில் (சிற்றரசன்) மருதன் மலையான் என்ற ஒரு பிரபு இருந்தான் என்றும் அவன் அரசர்களுக்குச் செய்த உதவியின் பொருட்டு குலோத்துங்கச் சோழ விக்கிரமாதித்திய தேவன் என்ற பட்டம் பெற்றிருந்தான் என்றும் அவன் திருமுருகன் பூண்டியில் எழிந்தருளியிருக்கிற மகாதேவர்க்கும் திருக்குரக்குத்தளி என்ற வைப்புத்தலமாகிய பெரியபாளையத்துச் சுக்கிரீசுவர சுவாமிக்கும் சந்தியா தீபம் வைப்பதற்காக பழஞ்சலாகை அச்சு என்ற பொன் நாணயம் ஒன்று தருமம் செய்ததாகவும் இன்னும் இவைமுதலிய செய்திகளும் காண்கிறோம். குலோத்துங்கச் சோழன் என்பான் கொங்குநாட்டை ஆண்ட கொங்கு சோழனாக இருக்கலாம் அப்படியாயின் அவனே கி.பி. *1149-1183* வரை ஆண்ட மன்னன் ஆவான். ஒரு வேளை சோழ மன்னனாக இருக்கும் பட்சத்தில் அப்பெயர்கொண்ட மூன்று மன்னர்களில் ஒருவனாக இருக்கவேண்டும். அவர்கள் முறையே கி.பி. *1073, 1123, 1178* என்ற ஆண்டுகளில் ஆண்டவர்கள். இக்கல்வெட்டில் குறித்த அரசன் அவர்களில் ஒருவன் ஆனபோதிலும் *12*-ம் நூற்றாண்டுக் கல்வெட்டு என்று அறியலாகும். அக்காலத்தில் அவ்வரசனுடைய பிரபுக்களில் ஒருவன் மருதன் மலையன் என்ற சிறப்புப் பெயர் பெற்றிருக்க வேண்டும். இவ்வழக்கம்

எத்தனை பழையது என்று பாருங்கள்.! இரண்டாவது சாசனத்தால் பெரியபாளையத்திற்கு குரக்குத்தளி என்று வழங்கி வந்ததும் அறிகிறோம். இத்தலம் திருப்பூருக்கு 3 நாழிகையில் உள்ள ஒரு ஊர். கூனிபாளையத்திலிருந்து கால்நடையாக 2 மைலில் இதனை அடையலாம். இதனை ஸ்ரீ சுந்தர மூர்த்திகள் ''கொங்கில் குறும்பில்'' என்று தமது ஊர் தொகைப் பதிகத்தில் பாடியிருக்கின்றனர். அக்காலத்தில் பழஞ்சலாகை அச்சு என்ற ஒரு பொன்நாணயம் வழங்கி வந்ததாகத் தெரிகிறது. அந்நாணயத்திலிருந்துவரும் வட்டியிலிருந்து சந்தியாதீபம் ஒன்றை சதாகாலம் எரிக்கமுடியும் என்று தெரிகிறதினால் அந்நாணயம் மிகவும் விலை உயர்ந்ததாக இருந்திருத்தல் வேண்டும்.

இந்த இரண்டு கல்வெட்டுகளினால் மருதமலையின் பெருமை 800 ஆண்டுகளுக்கு முன்னரே அறியப்பட்டு மக்களிடையில் வழங்கி இருந்தது என்று சரித பூர்வமாக அறிகின்றோம்.

குன்றுதோறாடல் – ஓதிமலை

இம்மலை அவிநாசி தாலூக்காவில் பவாநி நதிப் பள்ளத்தாக்கில் அந்நதிக்குத் தென்பாகத்தில் சுமார் மூன்று மைல் தூரத்தில் உள்ள ஒரு செங்குத்தான தனிமலை. இம்மலையின் உருவம் ஒரு பம்பரத்தைப் பருத்தபாகம் கீழும் நுனிபாகம் மேலும் இருக்கும்படி வைத்தாற்போல இருக்கும். மலையில் மரஞ்செடி அதிகமாக இராததினால் மலை ஏறுவது மிகவும் கடினம். முற்காலத்தில் கட்டியிருந்த படிகள் அநேகம் சரிந்துபோய் விட்டன. பொது மக்கள் இப்போது அப்படிகளை சீர்திருத்தி வருகிறார்கள். மலையின் உயரம் கடல் நீர் மட்டத்திற்கு மேல் 2157 அடி உள்ளது. அடிவாரத்திலிருந்து ஏறும்பாதை சுமார் ஒருமைல் இருக்கலாம்.

இம்மலைக்கு அடுத்து முக்கால் மைலில் உள்ள ஊர் இரும்பரை என்பது. சுமார் 12 மைல் தூரத்திலுள்ள ஊர் கணுவக்கரை என்பது. இக்கணுவக்கரையில் கண்ணுவ மகரிஷியின் ஆசிரமம் இருந்ததாகவும் அதனால் அவ்வூருக்கு கண்ணுவக்கரை என்று பெயர் வந்ததாகவும் சொல்லுவார்கள். அவ்வூர் ஆசிரமத்திலிருந்து கண்ணுவ ரிஷி ஓதிமலை முருகக் கடவுளை தரிசித்து வந்ததாகவும் கூறுவர். ஊரார் புரிந்துவந்த அக்கிரமச் செயலைக்கண்டு கண்ணுவரிஷி சபித்ததாகவும் அதனால் அவ்வூர் சீர்கெட்டுப்போய் கொலைகளுக்குக் காரணமாக இருப்பதாகவும் கூறுவர்.

முருகக் கடவுள் பிரம்மதேவனை பிரணவத்தின் பொருள் கேட்க அவன் சொல்லமாட்டாததினால் அவனைச் சிறையில் இட்டார் என்றும், பிறகு ஈசனார் முருகக் கடவுளையே பிரணவத்தின் பொருளைக் கேட்க அவர் அதை உபதேசித்ததாகவும், அவ்வாறு உபதேசத்தை இம்மலையில் ஓதினதினால் இம்மலைக்கு ஓதிமலை என்று பெயர் வந்தது என்றும் சொல்லுவார்கள்.

ஓதி என்ற பதத்திற்கு அறிவு, அறிவுடையோன் இடங்கழிமை, ஓந்தி, கல்வி, ஞானம், பூனை, பெண்மயிர், போர், மலை, என்ற பொருள்கள் உண்டு. இந்தப்பொருள்களில் எந்தப்பொருளைக் கொண்டு இம்மலைக்குப் பெயர் வந்ததோ தெரியவில்லை. ஆனால் இம்மலை முருகக் கடவுள் மீது திருப்புகழ் அருளிச்செய்த அருணகிரிநாத சுவாமிகள்.

'ஓதியிணர்த்திக் குகைக்கி டுங்கன
காபரணத்திற் பொருட் பயன்றரு
ஊதிகிரிக்குட் கருத்துகந்தருள் பெருமாளே'

என்று கூறியிருப்பதனால் அதில் ஓதி என்பது ஒதியமரம் அல்லது உதியமரம் என்ற பொருள் இருப்பதனாலும், இம்மலையில் ஓதிய மரம் விசேஷமாக இருந்ததினாலும், இதற்கு ஓதிமலை என்ற பெயர் வந்திருக்கலாம். ஆனால் திருப்புகழைப் பதிப்பித்த திரு.வ.த. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இம்மலையை ஊதிமலை என்று அச்சடித்திருக்கிறார்கள். ஆனால் இங்கே வழக்கத்திலுள்ளது ஓதிமலை என்பதுதான்.

இம்மலைக்கு ஒருபுராணமும் பலபிரபந்தங்களும் இருப்பதாகச் சொல்லுவார்கள். அவை ஏட்டுப்பிரதி அளவில் இருக்கின்றனவாம். பலபெயரை விசாரித்துப் பார்த்தும் யாதொன்றும் கிடைக்கவில்லை. இம்மலைக்கு இரண்டு திருப்புகழ்கள் உண்டு.

ஆதிமக மாயி யம்பை தேவிசிவ னார்ம கிழ்ந்த
ஆவுடைய மாது தந்த - குமரேசா
ஆதரவ தாய்வ ருந்தி யாதியரு ணேச ரென்று
ஆளுமுனை யேவ ணங்க - அருள்வாயே
பூதமது வான வைந்து பேதமிட வேய லைந்து
பூரணசி வாக மங்க - ளறியாதே
பூணுமுலை மாதர் தங்கள் ஆசைவகை யேநி னைந்து
போகமுற வேவி ரும்பு - மடியேனை

நீதயவ தாயி ரங்கி நேசவரு ளேபு ரிந்து
நீதிநெறி யேவி ளங்க - வுபதேச
நேர்மைசிவ னார்தி கழ்ந்த காதிலுரை வேத மந்த்ர
நீலமயி லேறி வந்த - வடிவேலா
ஓதுமறை யாக மஞ்சொல் யோகமது வேபு ரிந்து
ஊழியுணர் வார்கள் தங்கள் - வினைதீர
ஊனுமுயி ராய்வ ளர்ந்து ஓசையுடன் வாழ்வு தந்த
ஊதிமலை மீது கந்த - பெருமாளே.

2. கோதி முடித்துக் கனத்த கொண்டையர்
சூது விதத்துக் கிதத்து மங்கையர்
கூடிய அற்பச் சுகத்தை நெஞ்சினில் - நினையாதே
கோழை மனத்தைக் கெடுத்து வன்புல
ஞான குணத்தைக் கொடுத்து நின்செயல்
கூறு மிடத்துக் கிதத்து நின்றருள் - புரிவாயே
நாத நிலைக்குட் கருத்து கந்தருள்
போதக மற்றெச் சகத்தை யுந்தரு
நான்முக னுக்குக் கிளத்து தந்தையின் - மருகோனே
நாடு மகத்தெற் கிடுக்கண் வந்தது
தீரிடு தற்குப் பதத்தை யுந்தரு
நாயகர் புத்ரக் குருக்க ளென்றருள் - வடிவேலா
தோதிமி தித்தித் திமித்த டிங்குகு
டீகுகு டிக்குட் டிகுக்கு டிண்டிமி
தோதிமி தித்தித் தனத்த தந்தவெ - னிசையோடே
சூழ நடித்துச் சடத்தில் நின்றுயி
ரான துறத்தற் கிரக்க முஞ்சுப
சோபன முய்க்கக் கருத்தும் வந்தருள் - புரிவோனே
ஓத வெழுத்துக் கடக்க முஞ்சிவ
காரண பத்தர்க் கிரக்க முந்தகு
ஓமெ னெழுத்துக் குயிர்ப்பு மென்சுட - ரொளியோனே
ஓதி யிணர்த்திக் குகைக்கி டுங்கன
காபர ணத்திற் பொருட் பயன்றரு
ஊதி கிரிக்குட் கருத்து கந்தருள் - பெருமாளே.

மேலும் இம்மலை முருகக் கடவுளைக் குறித்து விளாங்குறிச்சி வி.ஈ.மருதாசலக்கவுண்டர் மும்மணிக் கோவை, சந்தப் பதிகம், திருப்புகழ்ப் பதிகம், கும்மி, காவடிச்சிந்து, குமரதேசிக மாலை முதலிய பிரபந்தங்களைப் பாடியிருக்கின்றார்.

குன்றுதோறாடல் – ஊதியூர் மலை

பவாநிப் பள்ளத்தாக்கில் உள்ள ஓதி மலையைப்பற்றி எழுதினோம். அப்போது அத்தலத்திற்குத் திருப் புகழ் இருப்பதாகவும் அச்சுப்பதிப்பில் ஓதிமலை என்பதற்கு ஊதிமலை என்று அச்சடித்திருப்பதாகவும் எழுதியிருந்தோம். ஆனால் சில பெரியார்கள் ஊதிமலை என்ற பாடம் சரியானது என்றும் அம்மலை தாராபுரம் தாலூக்காவிலுள்ள ஊதியூர்மலை என்பதைக் குறிக்கும் என்றும் சொல்லுவார்கள். ஒருவேளை அவ்வாறு இருக்கும் பக்ஷத்தில் அவ்வூதியூர் மலையைக் குறித்தும் நாம் அறிந்துகொள்ள வேண்டியிருப்பதால் அதைப்பற்றி சிறிது எழுதுவோம்.

ஊதியூர்மலை என்பது தாராபுரம் தாலூக்காவில் காங்கேயத்திலிருந்து தாராபுரம் செல்லும் பாதையில் 8-வது கல்லில் இருக்கின்றது. இம்மலை சுமார் 3 1/2 மைல் நீளமும் 1 1/2 மைல் அகலமும் இருக்கும். இதன் உயரம் கடல் மட்டத்தின்மேல் 1275 அடி. இதனை ஊதியூர்மலை என்றும் பொன் ஊதிமலை என்றும் கூறுவார்கள். இதனைக் கொங்கணகிரி என்றும் கூறுவதுண்டு.

மலையின்மேல் உச்சிப்பிள்ளையார் கோயில் ஒன்று இருக்கின்றது. அதற்குச் சற்று கீழே உத்தண்ட வேலாயுதசாமி ஆலயம் இருக்கிறது. அடிவாரத்தில் 11 மைல் தூரத்தில் கொங்கணர் குகை என்ற ஒரு குகை இருக்கிறது. இக்குகை ஒரு மண்குழி. இங்கே கொழுமண் குழி என்ற பெயரோடு ஒரு குகை இருக்கிறது.

முன் காலத்தில் கொங்கண முனிவர் என்ற ஒரு சித்தர் இங்கே வசித்து வந்ததாயும் அவர் மூலிகை மூலமாக பொன் விளைவித்ததாகவும் இப்போதும் அவர் உருவம் அங்கே தென்படுவதாகவும் கூறுவார்கள். அதற்கு திருட்டாந்தமாக அக்குகை வாயிலில் சிறிது மணலைப் பரப்பி வைத்துவிட்டு வந்தால் பின்னால் அம்மணலில் பாதச்சுவடு தெரியுமாம். குகைக்குள் யாரும் சென்றதில்லை. இங்கிருந்து பழனிக்கு ஒரு சுரங்கம் இருப்பதாகக் கூறுவர். ஆலயத்தில் உத்தண்ட வேலாயுதர் சுயம்பு மூர்த்தியாக இருக்கிறார். நவராத்திரி, தீபாவளி என்ற இரண்டு உற்சவங்கள் நடக்கும்.

இம்மலையை அனுமார் கொண்டுவந்த சஞ்சீவி மலையின் துண்டு என்பார்கள். இம்மலையைப்பற்றி பல கதைகள் உண்டு. ஒரு வேடன் ஒரு முயலைப் பிடித்து வேகவைத்து ஒரு குச்சியால் கிளர அம்முயல் உயிர்பெற்று எழுந்து ஓடிற்றாம். அது குச்சியின் மகிமை என்று நினைத்து அதைத்தேட அது மாயமாய் விட்டதாம். அதற்காக தவம் செய்து சித்தர் ஆனவர் கொங்கண முனிவர் என்பார்கள்'

பல்லடம் தாலூக்காவிலும் கொங்கணகிரி என்று ஒரு ஆலயத்தைக் கூறுவதுண்டு. இக்கொங்கண கிரிக்குத் திருப்புகழ் ஒன்றுண்டு. அது அடியில் கண்டபடி:

ஐங்கரனை யொத்தமன மைம்புலம கற்றிவள
ரந்திபக லற்றநினை - வருள்வாயே
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
அன்பொடுது திக்கமன - மருள்வாயே
தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி - யருள்வாயே
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனெ - யருள்வாயே
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமன
முன்றனைநி னைத்தமைய - அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரட்சைபுரி
வந்தணைய புத்தியினை - யருள்வாயே

கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுஉட லுற்றபொரு - ளருள்வாயே
குஞ்சரமு கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கணகி ரிக்குள்வளர் - பெருமாளே.

குன்றுதோறாடல் – குருடிமலை.

கோயமுத்தூர் ஜில்லாவின் மேற்புறத்தில் மேற்குத் தொடர்ச்சிமலை எல்லையாக இருக்கின்றது. அம்மலைத் தொடர்ச்சியில் அங்காங்கு பல பள்ளத்தாக்குகள் உண்டு. அவைகளில் ஒன்று தடாதுப் பள்ளத்தாக்கு என்பது. அப்பள்ளத் தாக்கின் வடபுறமாக ஒரு உயர்ந்த மலைத்தொடர் உண்டு. அம்மலைத்தொடர் தான் குருடிமலைத் தொடர். இம்மலைத் தொடரில் பல சிகரங்கள் உண்டு. அவற்றில் அதிக உயரமானது நாடுகண்ட போளி என்ற பெயர் கொண்டது, அதற்கு அடுத்தாற்போல் இரண்டு சிகரங்கள் உண்டு. இம்மூன்றும் அடுப்புக் கற்கள் போல் நிற்கும். இம்மூன்றும் நீர்மட்டத்திற்கு 6000 அடிக்குமேல் உள்ளன. இச்சிகரங்களின் கீழ் ஒரு பீடபூமி போன்ற பாகம் இருக்கிறது. அதில் இரங்கப்பன் கோயில் என்ற ஒருசிறு கோயில் உண்டு. அதற்கருகில் ஒரு அழகான நீர் அருவி ஓடுகின்றது. இக்கோவிலுக்குப் புரட்டாசி மாதம் சனிக்கிழமைகள்தோறும் கிராமத்தார்கள் போவதுண்டு. இச்சமவெளியில் சுமார் 80 வருஷங்களுக்கு முந்தி இந்த ஜில்லா கலக்டராயிருந்த வெட்டர்பர்ன் என்பவர் ஒரு காப்பித்தோட்டம் ஏற்படுத்தினார். அது இப்போது அழிந்து நிற்கிறது. அவர் கட்டின பங்களாவின் சுவர்கள் மாத்திரம் இருக்கின்றன. இக்கோயிலின் அருகில் இயற்கை அழகு மிகவும் அற்புதமாக இருக்கிறது. சரக்கொன்றை மரங்களில் மஞ்சள் பூக்கள் சரம் சரமாகத் தொங்கும். சாரல்களில் எலுமிச்சம் புல்லும் கணப்புல்லும் மனிதனை முழுக்கிவிக்கும் உயரம் வளர்ந்து நிற்கும். ஆயிரக்கணக்கான காட்டுமரங்கள் ஆகாயத்தை அளாவி நிற்கும் பகற்காலங்களிலும் பெரிய கடமான்கள்

எதேச்சையாய் உலாவி ஓடும். இவ்விதமான இயற்கை அழகின் நடுவில் ஒரு சிறிய கூறை மேய்ந்த ஆலயம் இருக்கின்றது. அதில் மூலஸ்தானத்தில் இருப்பது லிங்கம் போன்ற உருவம். அதற்கு ஒரு நாமத்தைச் சார்த்தி அதனை இரங்கப்பன் என்று வழிபடுகிறார்கள். அருணகிரிநாதர் பாடிய குருடிமலைக்குமரர் இவ்வாலயத்துக் கடவுளோ என்பது ஒரு கேள்வி.

இம்மலைத்தொடரில் இக்கோயிலுக்குக் கிழக்குப் பாகத்தில் ஒரு கல் தூரத்தில் உள்ள ஒரு சிகரத்திற்கு லேம்டன்ஸ்பீக் (Lamb. ton's peak) என்ற பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்நாட்டின் மலைகளின் உயரங்களை கணிக்கையில் லேம்டன் என்பவர் இச்சிகரத்தின் உயரத்தை அளந்ததினால் அவர் பெயர் இதற்கு ஏற்பட்டது. இதன் உயரம் 6000 அடிக்குமேல் இருக்கிறது. இச்சிகரத்திற்கு மேற்கே மல்லாண்டை, சுவத்துப்பாறை, பில்வழி என்ற சிகரங்கள் உண்டு. இவைகளில் மல்லாண்டைப் பாறை வெகுதூரத்திலிருந்து தெரியும். இதனைக் கடவுளாகக் கொண்டு வயல்களில் அறுவடை ஆனவுடன் மல்லாண்டைப் போல் ஒரு உருவம் செய்து அதற்கு பூஜைசெய்து விட்டுத்தான் நெல்லை அளப்பது இந்நாட்டார் வழக்கம். .

இம்மலையின் அடிவாரத்தில் இரண்டு ஊற்றுகள் உண்டு. மேற்கில் உள்ளதற்கு மண்பாவி என்று பெயர். இதில் எக்காலத்திலும் நீர் வற்றுவதில்லையாம். மற்றொன்று பொன்னூற்று என்பது, இது ஒரு இனிய சிறிய நீர்வீழ்ச்சி. ஒரு ஆண்டில் ஆடிமாதம் முதல் மாசிமாதம் வரையில் எப்போதும் நீர் விழுகும். மிகத் தெளிந்த நீர் ஒரு பெரும் பாறையின் மீதிருந்து கீழேவிழும். அப்பாறையின் அடியில் ஒரு குகை உண்டு. அக்குகையில் பொன்னூற்றம்மன் சிலை உண்டு. அம்மனுக்குப் பின்னால் குகைக்குள் 3 அடி ஆழமுள்ள அழகிய நீர்நிலை இருக்கிறது. அதில் கற்பூரம் ஏற்றினால் மிதந்து கொண்டே எரியும். நீர்வீழ்ச்சியில் முழுகுவதற்கு ஏராளமான ஜனங்கள் புண்ணிய காலங்களில் செல்வார்கள்.

கோவையிலிருந்து விடுமுறை காலங்களில் இவ்விடத்திற்கு உல்லாசமாக வீழ்ச்சியில் முழுக மக்கள் போவதுண்டு. அவ்விடத்தில் இயற்கை அழகு மிகவும் அற்புதமானது.

இக்குருடிமலைக்கு அருணகிரிநாத சுவாமிகள் ஒரு அழகிய திருப்புகழ் பாடியிருக்கிறார்கள். அது அடியிற் கண்டபடி:

கருடன் மிசைவரு கரிய புயலென
கமல மணியென — வுலகோரைக்
கதறி யவர்பெயர் செருகி மனமது
கருதி முதுமொழி — களைநாடித்
திருடி யொருபடி நெருடி யறிவிலர்
செவியில் நுழைவன — கவிபாடித்
திரியு மவர்சில புலவர் மொழிவது
சிறிது முணர்வகை — யறியேனே
வருடை யினமது முருடு படுமகில்
மரமு மருதமு — மடிசாய
மதுர மெனுநதி பெருகி யிருகரை
வழிய வகைவகை — குதிபாயுங்
குருடி மலையுறை முருக குலவட
குவடு தவிடெழ — மயிலேறுங்
குமர குருபர திமிர தினகர
குறைவி லிமையவர் — பெருமாளே.

திருத்துடிசைப் புராணத்தில் இம்மலையைப்பற்றி ஒரு சருக்கமும் இம்மலையில் பூஜை செய்து முக்தி அடைந்த குருவரிஷியின் சரிதத்தைப் பற்றிய ஒரு சருக்கமும் இருக்கின்றன. அவைகளில் கண்ட செய்திகள் நமது தமிழில் உள்ள ஏனைய புராணக் கூற்றுகளைப் போன்றவையே. ஆகவே அவைகளைப் பற்றிச் சிறிது சுருக்கமாகவே எழுதுவோம்.

குருடிமலைக்குக் கிழக்கே 4 மைல் தூரத்திலுள்ளது துடியலூர் என்ற ஊர். இது கோவைக்கு வடக்கே 6

மைலிலுள்ளது. கோவைக்கு அடுத்த இருப்புப்பாதை நிலையமும் இங்கே உண்டு, இவ்வூரில் ஒரு புராதனமான சிவாலயம் இருக்கின்றது, இவ்வாலயத்தைச் சுற்றி தென்னந்தோப்புகள் இருக்கின்றன. குருடி மலையிலிருந்து ஓடிவரும் பள்ளம் இவ்வாலயத்திற்கருகே செல்வதால் இவ்வூரைச் சுற்றியும் செழிப்பாக இருக்கும். தோட்டச் சாகுவளியும் வெகு செழிப்பாக இருக்கும்.

இவ்வளவு செழிப்பான ஊரில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் விருந்தீசுவரர். சுந்தரமூர்த்திகள் இவ்வாலயத்திற்கு விஜயஞ்செய்த காலத்தில் ஈரக்கீரையோடு விருந்திட்டத்தினால் சுவாமிக்கு விருந்தீசுவரர் என்று பெயர் வந்ததாகப் புராணம் கூறிகின்றது. இத்துடியலூரை துடிசை என்ற குறுக்குப் பெயரால் புராண ஆசிரியர் குறித்திருக்கின்றார். ஆகவே இவ்வூர் புராணத்திற்கு திருத்துடிசைப் புராணம் எனப்பெயர் ஏற்பட்டது.

புராணத்தில் நாட்டுச் சருக்கத்தில் கொங்கு நாட்டின் வருணனையை எடுத்தாண்டிருக்கின்றார். பிறகு கிரிச்சருக்கத்தில் கொங்குநாட்டின் மேற்கெல்லைகளான பஞ்சகிரிகளையும் பொதுவாக வருணித்து அவைகளில் ஒன்றான குருவவிருடிமலை என்ற குருடி மலையைச் சிறப்பாகவும் வருணித்திருக்கின்றார். .

சிவசொரூபமான வெள்ளிமலையையும் அதன் வடக்கே முருகக் கடவுள் சொரூபமான மருதமலையையும் அதன் வடக்கே பிராட்டியின் சொரூபமான குருவவிருடி மலையையும் வரிசையாக வருணித்திருக்கின்றார். இம்மூன்று மலைகளும் இயற்கை அமைத்திருப்பதைக் ‘கண்டால் அவைகளை சோமாஸ்கந்த மூர்த்தமாகக் கூறலாம். மேலும் வெள்ளிமலைக்குத் தென்பால் பிரம்மகிரியும் குருடிமலைக்கு வடபால் விஷ்ணுகிரியும் (நீலகிரி) இருக்கின்றன. இவ்வைந்துமே பஞ்சகிரி என்பார்கள். இதனை பேரூர்ப் புராண ஆசிரியர்.

**‘‘அயன் வரையும்மயாளோங் கலவிரொளி வெள்ளிவெற்புப்
புயனிகர்மேனிச் செல்வன் பொருப்புயர் மருதக்குன்றென்
தியலுமைத் தடுக்கண்மாட்டு மிரும்புனற்றீர்த்தந் தோறும்
வயமரு ளிறைவனார் தமலாடி பூசித்தாரால்.’’**

(அபயப் படலம் - செ.38)

என்ற செய்யுளில் ஆண்டிருக்கின்றார்.

துடிசைப் புராண ஆசிரியர் அதனையே விரிவாக 61 செய்யுள்களில் விவரித்திருக்கின்றார். இக்கிரிச் சருக்கத்தில் வெள்ளிமலையிலுள்ள பஞ்சலிங்கத்தின் பெருமையையும், அம்மலையிலுள்ள வல்லி, பூடு, புல் பரவிய தருக்கள் முதலிய யாவும் சடைகள் தாங்கி நிற்கும் வாலாறும், மருதமலையின் கண்ணுள்ள மருதத்தீர்த்தம், கன்னிகை தீர்த்தம், கந்த தீர்த்தம், அனும தீர்த்தம், சரவணப் பொய்கை முதலிய தீர்த்தங்களின் வரலாறும், குருவவிருடி மலையிலுள்ள கந்த தீர்த்தம், அகத்திய தீர்த்தம், சந்திர கதி, விநாயகஈதி (தன்னாசி கோவில் பள்ளம்) சிவ தீர்த்தம் குருவமுனி தீர்த்தம் (கோவில் உட்பிரகாரத்தில் உள்ளது) முதலிய தீர்த்தங்களின் மகிமையும் அம்மலைகளின் விம்மிதங்களும் கூறப்பட்டிருக்கின்றன. மேலும் இம்மலைக்கு

கிரேதாயுகத்தில்	-	சதுர்ப்புயாசலமென்றும்
திரேதாயுகத்தில்	-	அகத்திய பூதரமென்றும்
துவாபரயுகத்தில்	-	கந்தசைலமென்றும்
கலியுகத்தில்	-	குருவவிருடி மலையென்றும்

பெயர்கள் உண்டான வரலாறும் குருவவிருடி பூஜை சருக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. குருவவிருடி என்ற ஒரு முனிவர் திருத்துடிசையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வழிப்பட்டதாகவும் பெருமான் அம்முனி -வருக்காகத் துடிசையில் துடியை முழக்கி நடன தரிசனம் காட்டினதாகவும் அதனால் அம்முனிவர் பெரும்பேர் அடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த குருவவிருடி பூஜித்த இடத்தில் ஏற்பட்ட ஊருக்கு குருவவிருடி பாளையம் என்ற பெயர் ஏற்பட்டதாம். அது பின்காலத்தில் குருடம்பாளையம் என்று மாறிவிட்டதாம். எம்பெருமான் துடியை முழக்கி நடனம் செய்ததால் இத்தலத்திற்கு துடியலூர் என்று பெயர் வந்ததாம். குருவவிருடி தவஞ்செய்த மலைக்கு குருவவிருடி மலை என்ற பெயர் ஏற்பட்டு பின்னால் அப்பெயர் குருடிமலை என்று மாறிற்றாம். அம்மலையிலிருந்து ஓடிவரும் பள்ளத்திற்குத் தன்னாசி கோயில் பள்ளம் என்று பெயர் வழங்கி வருகிறது. இதற்கு மதுரநதி என்று மற்றொரு பெயர் உண்டாம். இதன் கரையிலுள்ள ஊருக்குப் புதுமதுரை என்ற பெயர் வழங்கி வருகிறது. குருவவிருடி போன்ற சந்நியாசிகள் தவம் செய்ததினால் சந்நியாசி கோயில் பள்ளம் என்ற பெயர் இவ்வூர்ப் பள்ளத்திற்கு ஏற்பட்டது போலும்.

இம்மலை அம்மன் சொரூபம் என்பதற்கு இம்மலையில் முக்கியமாக விளங்கும் பொன்னூற்றம்மன் கோயிலே சான்று ஆகும். குருவவிருடி மலை என்று துடிசைப் புராணம் கூறினபோதிலும் இம்மலைக்கு அருணகிரிநாதர் காலம் முதல் குருடிமலை என்ற பெயரே வழக்கத்தில் இருக்கும் செய்தி நோக்கத்தக்கது. இப்புராணத்தில் இக்கிரியைப்பற்றிக் கூறும்போது மிகவும் அழகிய செய்யுள்களால் யமகம், திரிபு முதலிய சொல்லணிகளோடு வருணித்திருக்கிறார். உதாரணமாக சில பாடல்கள் கூறுவோம்.

வான ரங்கண்ம ழைகண்டு வாம்பொழில்
வான ரங்கண்ம லிந்தினி தாடுமால்
கான கந்தரு கற்குற மாதர்சொற்
கான கந்தரு வேதமுங் கற்பரால்.
மாத ருக்குவ யங்கிய பொன்னகர்
மாத ருக்கும் கிழ்செயு மின்னிழற்
பாத வப்புடை பல்வள முந்திறம்
பாத வப்புடை யாறுகள் பாயுமால்.
சித்த ரன்பணி சிந்தைய ராகியர்ச்

சித்த ரன்பணி செய்துதி ருந்துவார்
முத்த ரும்புற மொய்ப்பர்க ழைக்குல
முத்த ரும்புற முந்திவி ணுந்துமே.
மாத வங்களை வல்லவர் மையலா
மாத வங்களை மாற்றிந டத்துவார்
பூத ரந்தரு விண்ணவர் போற்றுமப்
பூத ரந்தரு பெற்புவி யப்பதே.
வனந்தந் தாவள வாணர்க வண்கலால்
வனந்தந் தாவள மாபுனத் தோச்சுவார்
கனத்தின் பாரங்க வியச்சு மந்தெழூஉக்
கனத்தின் பாரங்க மழும்பல் காதமே.

குன்றுதோறாடல் – செஞ்சேரிமலை

இம்மலை மிகச் சிறியது. ஒரு செய்குன்றுபோலத் தோன்றும் நிலமட்டத்திற்கு மேல் 150 அல்லது 200 அடிதான் இருக்கும். சமுத்திர மட்டத்திற்கு மேல் 1356 அடி உயரம் இருக்கிறது. இது பல்லடம் தாலூக்காவில் பல்லடத்திலிருந்து பொள்ளாச்சி போகும் வழியில் அப்பாதைக்குச் சிறிது தூரத்தில் இருக்கிறது. இம்மலையில் சுப்பிரமணியர் கோயில் அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. கோயிலுக்குப் போகும் வழி செதுக்கின படிக்கட்டுகளால் பாவப்பட்டிருக்கிறது. வெளியில் இருபுறமும் கைப்பிடி சுவர் உண்டு. வடபுறத்தில் இருக்கிறது. மலையில் பல குகைகள் இருக்கின்றன.

மலையின் ஓரத்தில் மலைப்பாளையம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அக்கிராமத்தில் யாத்திரிகள் தங்க பல மடங்கள் உண்டு. மலையின் மேற்புறத்தில் திருநாவுக்கரசர் மடம் என்ற ஒரு மடம் இருக்கிறது. இதில் குரும்பர் வகுப்புச் சந்நியாசி ஒருவர் நந்தவனமும் தண்ணீர்ப்பந்தலும் வைத்திருக்கிறார்.

இம்மலை ஆலயத்தில் தைப்பூச உற்சவமும் ஐப்பசி சூரசம்ஹாரமும் விசேஷமாக நடக்கும். தைப்பூசத்தின் போது கொடுமுடியிலிருந்து காவடியில் காவேரி ஜலம் எடுத்துவந்து அபிஷேகம் செய்வதுண்டு.

இம்மலையின் சரியான பெயர் தென்சேரி என்பது. இம்மலையைப் பாடிய அருணகிரிநாதரும் தென்சேரிகிரி என்றே பாடியிருக்கின்றார். அந்தத் திருப்புகழ் அடியிற் கண்டபடி இருக்கிறது.

எங்கேனு மொருவர்வர அங்கேக ணினிதுகொடு
இங்கேவ ருனதுமயல் – தரியாரென்
றிந்தாவெ னினியஇதழ் தந்தேனை யுறமருவ
என்றாசை குழையவிழி – யிணையாடித்

தங்காம லவருடைய வுண்டான பொருளுயிர்கள்
சந்தேக மறவெபறி - கொளுமானார்
சங்கீத கலவிநல மென்றோது முததிவிட
தண்பாரு முனதருளை - யருள்வாயே
சங்கோடு திகிரியது கொண்டேயு நிரைபிறகு
சந்தாரும் வெதிருகுழ - லதுவூதித்
தன்காதல் தனையுகள என்றேமு மடவியர்கள்
தங்கூறை கொடுமரமி - லதுவேறுஞ்
சிங்கார அரிமருக பங்கேரு கனுமருள
சென்றேயும் அமரருடை - சிறைமீளச்
செண்டாடி அசுரர்களை ஒன்றாக அடியர்தொழு
தென்சேரி கிரியில்வரு - பெருமாளே.

கொண்டாடிக் கொஞ்சு மொழிகொடு
கண்டாரைச் சிந்து விழிகொடு
கொந்தாரச் சென்ற குழல்கொடு - வடமேருக்
குன்றோடொப் பென்ற முலைகொடு
நின்றோலக் கஞ்செய் நிலைகொடு
கொம்பாயெய்ப் புண்ட விடைகொடு - பலரோடும்
பண்டாடச் சிங்கி யிடுமவர்
விண்டாலிக் கின்ற மயிலன
பண்பாலிட் டஞ்செல் மருளது - விடுமாறு
பண்டே சொற் றந்த பழமறை
கொண்டேதர்க் கங்க ளறவுமை
பங்காளர்க் கன்று பகர்பொருள் - அருள்வாயே
வண்டாடத் தென்றல் தடமிசை
தண்டாதப் புண்ட ரிகமலர்
மங்காமற் சென்று மதுவைசெய் - வயலூரா
வன்காளக் கொண்டல் வடிவொரு
சங்க்ராமக் கஞ்சன் விழவுதை
மன்றாடிக் கன்பு தருதிரு - மருகோனே
திண்டாடச் சிந்து நிசிசரர்
தொண்டாடக் கண்ட வமர்பொரு
செஞ்சேவற் செங்கை யுடையசண் - முகதேவே

சிங்காரச் செம்பொன் மதிளத
லங்காரச் சந்த்ர கலைதவழ்
தென்சேரிக் குன்றி லினிதுறை - பெருமாளே.

மேலும் இம்மலைக்கு மந்திராதலம் என்றும் சுவாமிக்கு மந்திராசல மூர்த்தி என்றும் பெயர்கள் உண்டு. முன்னொருகால் முருகக் கடவுள் இக்குன்றிலே வந்து மந்திரம் ஜெபித்துக் கொண்டிருந்ததால் இக்குன்றுக்கு அப்பெயர் வந்ததென்பர். அப்போது ஜலத்தைத் தருவித்த சுனை இப்போதிருக்கிற சுனை என்பர். இதில் நீர் எப்பொழுதும் வற்றாது. இத்தலத்தைப்பற்றி ஒரு புராணம் உண்டு என்பர். அது அச்சு ஆகவில்லை. கோவிந்தசாமி ஆச்சாரி என்ற ஒரு உபாத்தியாயர் இக்கோயிலைப்பற்றி நான்மணி மாலை, பள்ளியெழுச்சி, வெண்பா அந்தாதி, பதிகம் இவை பாடியிருக்கின்றார்.

இம்மலைக்கு வடமேற்கே பெருமாள்மலை என்ற ஒரு சிறுமலையும் அதில் பல குகைகளும் உண்டு 70 வருஷங்களுக்கு முந்தி திரு மலைசுவாமி என்ற ஒரு பிராமணர் இங்கே இருந்து சர்க்கரை பிரசாதம் கொடுத்தாராம். சில ஆண்டுகளுக்கு முன் வேப்பெண்ணை சுவாமியார் என்ற ஒருவர் இங்கிருந்துகொண்டு வியாதிகளை சொஸ்தம் பண்ணி வந்தாராம்.

தென்சேரி மாலை

தென்சேரிகிரி என்னும் செஞ்சேரிமலைத் தலத்தைக் குறித்த ஒரு பிரபந்தமாகிய தென்சேரிமாலை என்ற நூலின் ஏட்டுப்பிரதி ஒன்று எனது நண்பர் குமாரசாமி பிள்ளை மூலியமாக கிடைத்தது. அந்நூல் இது வரையில் அச்சானதாகத் தெரியவில்லை. கிடைத்த ஏட்டுப் பிரதியானது ஒட்டபாளையத்திலிருக்கும் நஞ்சிய பிள்ளையின் மகன் குப்பையண்ணன் என்பவரால் பிரதியாக்கப்பட்டதாகவும், குருவூர் பழனிமலை வாத்தியார் என்பவரால் பாடப்பட்டதாகவும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஏட்டுப்பிரதி அனேக பிழைகளைக் கொண்டிருக்கிறது. நூலைப் பிரதி செய்தவர் படிப்பு அதிகம் இல்லாதவர் என்று அதனால் தெரிகிறது. நூலின் இறுதியில் 'ஈசுவர வருஷம் ஆடி மாதம் 19-ம் தேதி வெள்ளிக்கிழமை கிருத்திகை அன்றைக்கு ஒட்டபாளையம் நஞ்சையபிள்ளை மகன் குப்பையண்ணன் பழனி வாத்தியார் பாடின தென்சேரிமாலை எழுதிமுடிந்தது முற்றும்' என்று எழுதியிருக்கிறது. ஆகையால் இந்நூலை எழுதின தேதி நிச்சயமாகத் தெரிகிறது. ஆனால் அதற்கு முந்தி இந்நூல் எப்போது இயற்றப்பட்டதோ அது தெரியவில்லை. இயற்றிய ஆசிரியர் ஒரு பாடசாலை உபாத்தியாயர் என்று ஊகிக்கலாம். ஆனால் அவருடைய சரித்திரம் ஒன்றும் தெரியவில்லை. '

தென்சேரிமாலை 100 செய்யுள் கொண்டது. பாடல்கள் வெகு சுலபமானவை. தென்சேரியில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளின் மீது அன்புகனியப் பாடியவை. இரண்டொரு பாடல்களை உதாரணமாகக் கூறுவோம். கொங்கு நாட்டின் பலதலங்களைப் பற்றியும் ஏற்பட்டிருக்கும் பிரபந்தங்கள் கிடைத்தால் அன்பர்கள் நம்மிடம் அனுப்புவார்களாக.

மேலும் தென்சேரி கிரியைப்பற்றி பல பிரபந்தங்கள் சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக திருப்பூர் கோவிந்தசாமி ஆச்சாரியார் தென்சேரிகிரி நான்மணி மாலை, திருப்பள்ளி யெழுச்சி, வெண்பாவந்தாதி, தென்சேரிகிரிப் பதிகம் முதலியவைகளைப் பாடி அச்சடித்திருக்கிறார்.

செஞ்சேரி மாலை என வழங்கும்

தென்சேரிமாலை

(இது கட்டளைக் கலித்துறைப் பாட்டுக்கள் நூறு கொண்டதொரு பிரபந்தம். வேலாயுதசுவாமி பேரில் ஒட்டபாளையம் நஞ்சையபிள்ளை மகன் குப்பயண்ணன் என்கிற குருவூர்ப் பழனிமலை வாத்தியார் பாடியது. ஈசுவர ஆண்டு ஆடி-மீ' 19-உ வெள்ளிக்கிழமை திரிதிகை யன்றைக்குப் பாடியதென்று ஏட்டுப் பிரதியிற் கண்டிருக்கிறது.)

(சில பாட்டுக்கள் மட்டும் இங்கு எடுத்துப் பதிக்கப் பெற்றன.)

காப்பு

மதிவா னதிமணக் கொன்றையைத் தும்பையை மாசுணத்தை
விதியோன் சிரசினை வேய்ந்தவன் றன்சுதன் வேள் குறமின்
பதிவே லவன்வளர் தென்சேரி மாலையைப் பாடுதற்குக்
கதிசீ ரடியவர்க் கீவோன் கணபதி காப்பதாமே. 1

நூல்

கங்கா நதியுள செஞ்சடை யீசுரன் கண்ணுதலோன்
பங்காக வாழுமை யம்பிகை பார்ப்பதி பாலகனே!
சிங்கார வள்ளிதன் வல்லவ னேயயில் சேர்கரனே
கொங்கார் கடம்பணி மார்பதென் சேரியிற் கொற்றவனே. 2

அனைதாதை யென்றினி யான்செனி யாமலை யாகுமரா
நினைவாய்த் துதித்திட நின்னருள் செய்குவை நிட்களனே
சுனைவாவி சூழ்திருத் தென்சேரி மேவிய சுந்தரனே
கனைசேர் பரிபுர பாதா சிவசுத காங்கையனே. 3

பாண்டியன் கூனதைத் தீர்த்தருள் மந்திரம் பத்தியுள்ளார்.
வேண்டுநன் மந்திரம் வீறுள சூரனை மேதினியில்
மாண்டிடவே புரி மந்திரஞ் சித்திகொள் மந்திரஞ்சீர்
பூண்டதென் சேரியின் வேலன் சடாக்கரம் போற்றுவீரே. 4

பேர்தரும் பார்தரும் பிந்தாத செல்வமும் பீடுந்தரும்
மூர்தரு நீர்தரு மற்றும் பலதரு முண்டிதருஞ்
சீர்தருங் காவலர் நண்பதை யேதருஞ் சித்தித்தரு
மேர்தரு குங்குகன் வாசதென் சேரியென் றேத்தினர்க்கே.5

தென்சேரி வேள்துதி கொள்கலி நூறதிற் சேர்பனுவ
லொன்றா சிலுஞ்கொலு வார்வெரு வார்புலியும் பலவா
முன்பே வருகிலு மீதுசொன் னேனிகம் மூதறிவோர்
அன்பா யெழுதியும் பாடியும் வாழ்கவி தாதரவே. 6

குன்று தோறாடல் – இரத்தினகிரி.

கோவையிலிருந்து சத்தியமங்கலம் போகும் பெரும்பாதையில் 6-வது கல்லில் சிரவணம்பட்டி என்ற ஒரு பெரிய கிராமம் இருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல் ஒருகல் அளவில் ஒரு கரடு உயர்ந்து நிற்கின்றது. இக்கரட்டிற்கு அடுத்தாற்போல் பாதை செல்லுகின்றது. இக்கரட்டினைப் பொது ஜனங்கள் சிரவணம்பட்டிக் கரடு என்று சொல்லுவார்கள். இக்கரடுமேல் புறத்தில் செங்குத்தாகவும் கீழ்புறத்தில் சரிவாகவும் இருக்கின்றது. உச்சியில் ஒரு சிறு ஆலயம் இருக்கிறது, அது சுப்பிரமணியர் ஆலயம். இம்மலைக்கு இரத்தினகிரி என்றும் அங்கெழுந்தருளிய மூர்த்திக்கு இரத்தினகிரி வேலவர் என்றும் பெயர்கள் சொல்லுவார்கள். இக்குன்று

கிருதயுகத்தில் - இரத்தின கிரியாகவும்

திரேதா யுகத்தில் - பொன் கிரியாகவும்

துவாபரயுகத்தில் - வெள்ளிகிரியாகவும்

கலியுகத்தில் - கல்கிரியாகவும் இருந்ததாக ஐதீகம் உண்டு.

மேலும் இக்கிரியில் பூர்வகாலத்தில் கௌசிகமுனிவர் தவம் செய்ததாகவும் அம்முனிவர் யாகம் செய்வதற்காக இரண்டுகல் தூரத்திலுள்ள ஒரு நதியை பிரவகிக்கச் செய்தார் என்றும் அதனால் அந்நதிக்குக் கௌசிகநதி எனப்பெயர் வந்ததெனவும் சொல்லுவார்கள். இவ்வைதீகத்தைக் கொண்டு அந்நதிக்கடுத்த ஊருக்கு கௌசிகபுரி எனப்பெயர் வந்ததெனவும் கூறுவர். அவ்வூரில் இப்போது ஒரு பண்டைய கோவில் உண்டு. அப்பாகத்தில் அக்கோவில் சிறந்து விளங்கினதால் அவ்வூருக்குக் கோவில்பாளையம் என்று சிறப்பு பெயரே இப்பொழுதும் வழங்கி வருகின்றது. இவ்வூருக்குச் சர்க்கார் அடங்கலில் சர்க்கார் சாமக்குளம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாலயத்தின் மூர்த்திக்கு காலகாலேஸ்வரர் என்று பெயர். இதற்கு ஐதீகம் உண்டு.

ஆதிகாலத்தில் மார்க்கண்டேயரை ஹிம்சித்த காலன் அப்பாவம் நீங்கத் திருக்கடையூரிலிருந்து இங்கேவரும்போது அனுஷ்டானநேரம் ஆகிவிட்ட படியால், தன் சூலத்தைப் பூமியில் குத்த நிலத்திலிருந்து குபு குபு என்று ஒரு தீர்த்தமும், அதன் வழியே நுரையும் வர. அந்த நுரையும் சிவலிங்க ரூபமாக இருக்க அதனையே லிங்கமாகக்கொண்டு வழிபட்டானாம். இப்பொழுதும் அந்த லிங்கம் வெண்ணிறமாக நுரைப்போல் இருக்கிறது. சுவாமிக்கு அபிஷேகம் வெறும் நீர்தான். எண்ணெயும் தேனும் பட்டால் சொத்தையாகி விடுமாம். மேலே சொன்ன ஐதீகப்படி சுவாமிக்குக் காலகாலேஸ்வரர் என்ற பெயரும் தீர்த்தத்திற்கு காலப்பொய்கை என்ற பெயரும் ஏற்படுத்தப் பட்டது. அம்மன் பெயர் கருணாகர வல்லி. ஆலயம் சோழனால் கட்டப்பட்டது. இவ்வைதீகம் ஏட்டுப் பிரதியில் உண்டு என்பர். கரிகால் சோழனால் கட்டப்பட்ட குளம் ஒன்றுண்டு.

வெகுகாலம் வரைக்கும் லிங்கமும் தீர்த்தமும் தெரியாமல் இருந்தது. அப்போது வனமாயிருந்த அந்த இடத்தில் கவயன் என்ற ஒரு இருளன் ஆட்சி புரிந்து ஒரு பெண் தேவதையைக் குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டுவந்தான். கிழக்கேயிருந்து கரிகால் சோழன், சேரமான் பெருமாள், சமயமுதலி முதலானவர்கள் பல ஆலயங்களைத் தரிசித்துவிட்டு கவயனுடைய பதிக்குச் சென்றார்கள். அப்போது சமய முதலியின் எண்ணப்படி காடுவெட்டி ஊர் கட்டினர். அங்கே பெண் தேவதையாகிய கவயகாளி அம்மனுக்கு ஒரு ஆலயமும், கால காலேஸ்வரலிங்கத்தைக் கண்டு அதற்கு கருங்கல்லால் ஒரு ஆலயமும் கட்டினார்கள். ஒரு ஊர் கட்டி அதற்குக் கவயன்புத்தூர் எனவும் பெயரிட்டனர். ஒரு கோட்டையும் கட்ட அதற்குக் கோட்டைப்பாளையம் என்ற பெயர் ஏற்பட்டது. அக்காலத்திலிருந்து காளிக்கு முப்பலியுண்டு. சோழன் முதலியவர்கள் ஊரில் குடியேற்றி ஆலயத்திற்கு மானியம் ஏற்படுத்திக்கல் சாசனம் பதிப்பித்தார்கள். இது கலியுகம் 2744

பவ வருஷம் புரட்டாசி மாதம் 19-ம் தேதி புதன்கிழமை என்பர். இந்த வரலாற்றை விவரமாகச் சோழன் பூர்வபட்டயம் என்ற நூலில் காணலாம்.

இரத்தினகிரி ஆலயத்தில் கல்வெட்டுகள் இல்லை. ஆனால் கால காலேஸ்வர ஆலயத்தில் கல்வெட்டுகள் இருக்கின்றன. அங்கே 20 கல்வெட்டுகளும் கவயகாளியம்மன் ஆலயத்தில் 2-ம் இருக்கின்றன.

அவைகள் அனேகமாக கொங்கு சோழர்கள் என்பவர்களுடைய சாசனங்களாகும். கொங்கு பாண்டியன், வீர பாண்டியன், ஹொய்சாள அரசர்களில் வீரவள்ளாள தேவன், விஜயநகரத்தாரில் அச்சுதராயன் இவர்களுடைய சாசனங்கங்களும் இருக்கின்றன. இச்சாசனங்களில் காணும் சரித்திரபாகத்தைப் பின் ஒருகாலத்தில் எழுதுவோம். இரத்தினகிரி வேலவரைக் குறித்து சிலபிரபந்தங்கள் உண்டு சிரவணம்பட்டி தொட்டைய கவுண்டர் என்ற புலவர் இரத்தின கிரிமாலை என்ற நூல் இயற்றி இருக்கிறார். சமீபகாலத்தில் V.N.மருதாசலம் அவர்கள் இரத்தினகிரி வேலவர் மீது பல பிரபந்தங்களும் சிரவணபுரம் மடத்து கந்தசுவாமியார் பல பிரபந்தங்களும் பாடியுள்ளார்கள்.

குன்று தோறாடல் – கொண்டறங்கி மலை

கொங்கு நாட்டில் தாராபுரம், பழனி, திண்டுக்கல் முதலிய தாலூக்காக்களில் ஆண்பிள்ளைகள் கொண்டரங்கி செட்டியார், கொண்டரங்கி பிள்ளை, கொண்டரங்கி கவுண்டர் என்றும் பெண் பிள்ளைகள் கொண்டரங்கியம்மாள் என்றும் பெயர் வைத்திருப்பதைக் காணலாம். இப்பெயர்களில் கண்ட கொண்டரங்கி என்ற பதத்திற்கு மலைமேலுள்ள ரங்கன் என்று அநேகர் எண்ணுகிறார்கள். அதாவது கொண்ட - மலை(தெலுங்கில்) ரங்கன் - திருமால் பெயர் என்று பொருள்படுத்தி அப்பெயரைத் திருமாலின் ஒரு பெயராகக் கொள்ளுகிறார்கள். ஆனால் இதைப்பற்றி விசாரிக்கவே வேறுபொருள் கிடைத்தது.

கொண்டரங்கிமலை என்பது தாராபுரத்திலிருந்து பழனிக்குச் செல்லுகையில் அப்பாதைக்கு நேர்கிழக்கே காணப்படும் ஒரு உயர்ந்த மலையாகும். இம்மலை தாராபுரம் தாலூக்காவிற்கும் பழனி தாலூக்காவிற்கும் இடையில் எல்லையாக நிற்கிறது. இதன்பார்வை வெகு தூரத்திலிருந்து தெரியும். ஒரு தடவை பார்த்தவர்கள் மறுமுறை மறக்கமாட்டார்கள். இம்மலையின் உருவம் அடிப்பாகம் அகன்று உச்சி கூர்மையாக நிற்கும் தோற்றமுடையது. மிகவும் செங்குத்தானது. ஒரு பெரிய பம்பரத்தைத் தலைகீழாக நிறுத்தினால் எவ்வாறு தோன்றுமோ அவ்வாறே இம்மலை உயர்ந்து நிற்கிறது. மலை ஏறுவது வெகு கடினம். இம்மலையின் உச்சியில் ஒரு சிவாலயம் இருக்கிறது. அவ்வாலய மூர்த்தியின் பெயர் மல்லிகேஸ்வரர். இம்மூர்த்தி சுயம்பு லிங்கமாம். இம்மூர்த்தியைப்பற்றி அடியில் காணும் ஒருகதை வழங்கி வருகிறது. இவ்விதக் கதை தமிழ் நாட்டில் பல ஆலயங்களிலும் வழங்கி வருவதைக் காணலாம்.

இம்மலைக்குச் சமீபத்தில் கீரனூர் கிராமம் இடையன் வலசு என்ற ஒரு சிற்றூர் உண்டு. சிறிது காலத்திற்கு முந்தி இவ்வூரிலிருந்த நல்லதம்பிக் கவுண்டர் என்பவருடைய

தொழுவத்துப் பசுக்கள் இம்மலையில் மேய்ந்து கொண்டிருந்தனவாம். அப்பசுக்களில் ஒன்று இம்மலைச் சுனையில் இறங்கி சுனை நீர் அருந்திவிட்டு அருகில் இருந்த லிங்கத்தின் பேரில் பாலைத் தானே கறந்து வந்து கொண்டிருந்ததாம். சாயங்கால வேளைகளில் பசு வீட்டிற்கு வந்த பிறகு அது பால் கொடாததைக் கண்ட கவுண்டர் இடையனை மிரட்ட அவன் அது முதல் பசுவின் நடத்தையைக் கவனித்து வந்தானாம். பசு தானே பால்கொடுத்து வந்ததைக்கண்ட இடையன் அப்பசுவை அடித்தபோது அதன் குளம்பு லிங்கத்தின்மேல் பட சுவடு ஆயிற்றாம். இவ்விவரமெல்லாம் அறிந்த கவுண்டன் பக்தியுடையவனாகி அவ்விலிங்கத்தின் பேரில் கோயில் முதலியவை எல்லாம் எழுப்பி வைத்தானாம்.

கொண்டறங்கிமலை என்ற பதத்தின் சரியான பொருள் கொண்டல் + தங்கி + மலை என்பதாம். கொண்டல் + தங்கி என்பது கொண்டறங்கி என்று இலக்கணப்படி ஆயிற்று. கொண்டல் என்பது மேகம், இம்மலை ஆகாயத்தை அளாவி நிற்கிறபடியால் இதன் உச்சியில் எப்பொழுதும் மேகங்கள் தங்கி நிற்கும். ஆகவே இம்மலைக்குக் கொண்டல் தங்கி மலை அல்லது கொண்டறங்கி மலை என்று பெயர் வந்தது.

இம்மலையிலிருந்து நான்கு புறங்களிலும் காட்டாறுகள் ஓடும். அவைகளில் முக்கியமானது கண்ணுநதி என்பது. இந்த புண்ணிய நதிக்கு செண்பகச் சிற்றாறு, கிருகாணி முத்தாறு என பெயர்கள் உண்டு. இவ்வாறு வடக்கே ஓடி அமராவதி நதியில் கலக்கின்றது.

குன்றுதோறாடல் - கதித்தமலை

ஈரோட்டிலிருந்து போத்தனூர் செல்லும் ரயில் பாதையில் ஊற்றுக்குழி என்ற நிலயம் ஒன்றுண்டு. அவ்வூருக்கு சிறிது தூரத்தில் ஒரு சிறு குன்று உண்டு. அக்குன்று அதிக உயரமில்லாமல் மட்டமாக இருக்கும். அக்குன்றுக்குக் கதித்த மலை என்று பெயர். அக்குன்றின் மீது ஒரு பெரிய ஆலயம் ஒன்றுண்டு. அதில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி முருகக் கடவுள். கடவுள் பெயர் கதித்தாசலக் கடவுள் என்பர். அக்கம்பக்கத்தில் இக்கடவுள் பெயரை மக்கள் வகிப்பதுண்டு. உதாரணமாக கதித்தாசலம், கதித்தமுதலி, கதித்தமலைக் கவுண்டன் முதலியன. இம்மலை கொங்கு நாட்டின் ஏழு மலைகளில் ஒன்று என்பர். அவையாவன சிவன்மலை, சென்னிமலை, அரளிமலை, பழனிமலை, வெள்ளிமலை, வட்டமலை, கதித்தமலை என்பன. இம்மலையின் மீது ஒரு தீர்த்தமுண்டு. இத்தலத்தில் தைமாதத்தில் குழந்தைக்குமாரர் ரதோற்சவம் நடைபெறும்.

தென்மேற்கு மலையில் சுப்பராயர் கோயில் உண்டு. அதில் ஒருபுற்று நான்கு ஐந்து அடி உயரம் உண்டு. அது ஒரு மயில் வடிவம் கொண்டது. இதைப்பற்றி ஒரு ஐதீகம் என்னவெனில் புற்றானது வருடந்தோறும் ஒரு அடி உயர்ந்து பின் இடிந்துவிடுமாம். மீண்டும் அடுத்த ஆண்டு உயருமாம் இடியுமாம். இப்புற்றில் ஒரு நாகம் உண்டு என்பர். ஒரு பழம் அப்புற்றின் வாயில் வைத் தால் ஐந்து நிமிஷத்தில் மறைந்து போகுமாம். புற்று மண்ணை நெற்றியில் அணிந்தும் வேஷ்டியில் கட்டியுங் கொண்டால் கனவில் நாகம் தெரியுமாம். கடவுள் வாகனக் குளம்பின் சுவடு பாறையில் தெரிகிறது. இவ்வாலயத்தைப் பற்றி பதிகம் உண்டென்பர்.